31 MAR 1949
MADRAS

-3—1949 26-வது ஆண்டு அணா நான்கு

சிரியை: வை. மு. கோதைநாயகி அம்மாள்.

...ல்லா தவ...
– திருவள்ளு...

...னியென்னுஞ்
...ஞ்சிகையைக் காக்க
...மோ இனி!
மனத்தைச் சார்ந்து
– வீரராகவ கவி

...: 20. சர்வதாரி ஞூ, சுதந்தர சகாப்தம் March
No. 3. மாசி மீ 20-ம் திங்கள். 1949.

க்ஷேமலாபங்கள்

ஸ்ரீ கீதாசார்யனின் கிருபாகடாக்ஷத்தால் யாவும் உத்ஸாகமா...வே நடைபெறுகின்றன. வெள்ளிவிழா, மலர், நினைவு இதழ், பரிசுக்கதை... அபிவிருத்தி, முதலியவற்றைப்பற்றி அன்பர்களின் கடிதங்கள் ஆசிர... சொரிந்த வண்ணமிருக்கின்றன. சில அம்சங்களைமட்டும் குறிப்பிடுகி...ன்.

(1) மோகினியை மாதமிருமுறையாக வெளியிடவேண்டு...ன்... வற்புறுத்துகிறார்கள் சிலர்; இரு மடங்காக்கி, குறைந்த பக்ஷம் 100 ப... கங்... ளுடனாவது அளிக்கவேண்டுமென்கிறார்கள் சிலர்; இதர மாதப் பத்... கைகளைப்போல் அளவையே பெரிதாக்கவேண்டுமென்கின்றனர் சிலர். ... தகைய யோசனைகளெல்லாம் அபிமானிகளின் ஆர்வத்தையும் பே... ளையும் வெளிக்காட்டுகின்றன.

'மாற்றி விடலாம்' என்று யோசனை சொல்வது சுலபம்: ஆனால் ... தை நிறைவேற்றுவதிலுள்ள பெரும் ப்ரச்னைகள் —அதுவும் தற்காலத்திய ... விதத்திலும் கடினமான நிலையில்— வாசகர்களுக்கு எளிதில் புரி... கடந்த ஒரு வருடத்திற்குள் தடபுடலாகத்தோன்றி, ஆனால், ... சந்தடியுமின்றி மறைந்துபோன பத்ரிகைகளின் கதியையும், 'பத்... தொடர்ந்து நடக்கிறதா, இல்லையா?' என்றே தெரியாத நிலை சில பத்ரிகைகளுக்கு ஏற்பட்டுள்ளதையும் காணும்போது, மாறுதல் செய்வதற்கு இது உகந்த தருணந்தானா என்று தீர்க்கமாக யோசிக்க வேண்டியிருக்கிற தல்லவா? வாசகர்களின் பெருவாரியான அபிப்பிராயத்தை அறிந்த பிறகே தீர்மானம் செய்யவேண்டும்.

அளவைப் பெரிதாக்க வசதியில்லை, இப்போது வெளியாகும் அளவிலேயே, இப்போதுபோலவே மாதம் ஒரு முறை, **100** பக்கங்களுக்குக் குறையாமல் வெளியிடுவது உசிதமா? அல்லது, இப்போது உள்ள அளவு, பக்கங்களுடன் மாதமிருமுறை வெளியிடுவது உசிதமா? இருவிதத்திலும் வாசகர்க்கு செலவு ஒன்றேதானாகும். (8 அணா, அல்லது இருநான்கணா.)

இவ்விரண்டிலொரு விதமாக மாறுதல் செய்வதாயின், மோகினியின் பிறந்த தினமாகிய விநாயக சதுர்த்திமுதல் செய்யலாமா? அல்லது 1950 புதுவருட ஆரம்பமுதல் செய்யலாமா? எல்லாவற்றிற்கும் வாசக நேயர்களின் பேராதரவான, பெருவாரியான பதிலை எதிர்பார்க்கிறோம். உங்கள் இஷ்டப்படி செய்வதைவிட எங்களுக்கு வேறென்ன மகிழ்ச்சி இருக்கி...? சில பிரபல எழுத்தாளர்களும் மோகினியில் அடிக்கடி எழுத விரு...ம்பம் தெரிவித்துள்ளார்கள், தொடர்ந்து எழுதவும் தயாராயிருக்கிறார்கள். மேற் கூறிய விதத்தில் மாறுதல் செய்தால்தான் அனேகர்க்கு இடமளிக்க இயலும். தபாற்செலவைப் பொருட்படுத்தாது தங்கள் அபிப்ராயத்தைத் தெரிவிக்கும் படிப் பிரார்த்திக்கின்றோம்.

(தொடர்ச்சி: ராப்பர் 3-ம் பக்கம்.)

தேசிய ராணுவத்தில் அடிப்படைக் கல்வி

வை. டி. ஸ்ரீநிவாஸன், எம். ஏ.

'சுத்த மூட்டுப் பயல்; மிலிடரிக்குத்தான் லாயக்கு' என்று முரட்டுப் பிடிவாதம் பண்ணும் பையன்களை வர்ணிப்பது நம் நாட்டில் சர்வ சகஜமாகிவிட்டது. நம் மக்கள் மதிப்பில், முக்கியமாக ஸ்திரீகளின் எண்ணத்தில், முரட்டுத்தனத்திற்கும் மிலிடரிக்கும் ரொம்பவும் சம்பந்தமுண்டு; சம்பந்தமென்ன— அவர்கள் அகராதியில் மிலிடரி என்றால் மூட்டுத்தனம் என்றே அர்த்தம் வைத்துக்கொண்டிருக்கிறார்கள்! இந்த அபிப்பிராயம் எவ்வளவு தூரம் தப்பு என்றும், எந்த அளவில் சரியென்றும் நமக்குச் சமீபகாலத்தில் நன்கு விளங்கிற்று, விளங்கிவருகிறது.

எடுத்த காரியத்தை திட்டப்படி முடிப்பதில் ஒருவித தீவிர மூட்டுப் பிடிவாதம் ராணுவத்தினருக்கு வேண்டியதுதான் என்பது சென்ற உலக யுத்தத்தில் விளங்கிற்று. டன்கர்க்கிலிருந்து வெற்றிகரமான வாபஸ்ஸாயிருந்தாலும் சரி, ஜர்மனிக்குள் வெற்றிகரமான முன்னேற்றமாயிருந்தாலும் சரி, ராணுவத்தினருக்கு எடுத்த காரியத்தை அந்தந்த சமயத்தில் முடிப்பதில்தான் நோக்கு. இத்தகைய கார்யார்த்தமான முரட்டுப்பிடிவாதம் அவர்களுக்கு மிக அவசியம், இயற்கையுங்கூட; ஆனால் அவர்கள் மூடர்களில்லை!

ராணுவ உத்யோகத்தினர் முன்பின்னறியாத பொதுமக்களுடன் எவ்வளவு மரியாதையுடனும் விநயத்துடனும் உபசரித்து நடக்கிறார்களென்பது சென்னையில் சில தினங்களுக்குமுன் நடந்த ராணுவ பொருட்காட்சியில் விளங்கிற்று. திரும்பத் திரும்ப கேட்ட கேள்விக்கே, சற்றும் பொறுமை குன்றாது எவ்வளவு அன்புடன் பதில் சொன்ன வண்ணமிருந்தார்கள் தெரியுமா! ஹைதராபாத் பொதுமக்களுடன் நமது தேசிய ராணுவம் எவ்வளவு மரியாதையுடன் நடந்துகொண்டார்களென்பதைப் பற்றின பத்திரிகைச்செய்திகளின் உண்மை அப்போதுதான் விளங்கிற்று.

ஒவ்வொரு இடமாகப் பார்த்துக்கொண்டே வருகையில் மைதானத்தின் தென்கிழக்குக் கோடியில் ஒரு கூடாரத்தில் நுழைந்தோம். அதன் வாசலில் மஹாத்மாஜியின் படமும் அவரது பொன் மொழிகளில் ஏழும் இருந்தன. மக்கள் மனத்தைக் கவர இதைவிட வேறென்னவேண்டும்? அந்த ஸப்த மணிகள் உங்கள் காதிலும் சப்திக்கட்டும்:

(1) ஹ்ருதய சுத்தியின்றி வாயளவில் புகழும் வார்த்தைகளைவிட, வாயே திறவாமல், வார்த்தைகளின்றி, அந்தரங்கசுத்தியுடன் நிறைந்த இதயத்துடன் இருப்பதே மேல். (2) மனிதனின் அறிவைக் காட்டிலும் ஸத்தியமே உயர்ந்தது. (3) ஒத்துழைப்பே மனித சமூகத்தின் இயற்கை நெறி. (4) கடவுள் முன்னிலையில் எல்லா உயிர்களும் (மிருகங்களின் உயிர்களுள்பட) மிகவும் அருமையானவை. (5) உண்மையான அழகு எது தெரியுமா?—ஹிருதயத்தின் பரிசுத்தம்தான். (6) அன்பின் குணம் எப்போதும் ஈகைதான், உரிமை கோருவதில்லை. அதாவது, 'அதைச்செய், இதைச் செய்; அதுவேண்டும், இதுவேண்டும்' என்று உரிமை கோருவதில்லை. பிரதிபலனைக் கோராமலே செய்தவண்ணமும் ஈந்தவண்ணமுமாகவே இருக்கும் உண்மை அன்பு, (7) கலை, கலை என்று வாய்ப்பறை சாற்றினால் போதாது; கலை உண்மையில் கலையாகப் பரிமளிக்கவேண்டுமாயின், அது மனத்திற்கு ஆறுதலளித்துத் தேற்றுவதாயிருக்கவேண்டும்.

"ராணுவப் பொருட்காட்சியில் இவ்வளவு அருமையான கருத்துக்களுக்கும் இடமிருக்கிறதே!" என்ற பரம திருப்தியுடன் உள்ளே நுழைந்தோம். அங்கே எங்களுக்கு ஒரு எதிர்பாராத பிரமிப்பு காத்துக்கொண்

 18347

...ன் நடுவே எங்களை அடையாளம் கண்டுகொண்ட ...வர் யாரென்று எங்களுக்குத் தெரியாது) மிக விநயத்துடன் ...று "உங்களைப்போன்ற எழுத்தாளர்கள்தான் இந்தக் கூடாரத்தை விசேஷ கவனத்துடன் பார்த்து, தங்கள் அபிப்ராயங்களைப் பொது மக்களுக்குத் தெரியப்படுத்தவேண்டும்" என்றார். நமது தேசிய ராணுவத்தினருக்கு அளிக்கப்படும் அடிப்படைக் கல்வியை விளக்கும் படங்கள் அந்தக் கூடாரத்தில் இருந்தன. ஒவ்வொன்றாகக் காட்டி விளக்கம் கூற முற்பட்டார். அதற்குள் அங்குவந்த காப்டன் அவர்களுக்கும் அறிமுகம் செய்வித்தார். ஒருவருக்கொருவர் பெயர் தெரியாமலேயே பரஸ்பர அறிமுகம் 'காப்டனுக்கும் ஜர்னலிஸ்டுக்கும்' நடைபெற்றது.

ஒரு முறை அந்தக் கூடாரத்திலுள்ள படங்களனைத்தையும் பார்த்தேன். இவ்வளவு ரஸமான விஷயங்கள் ஒரே இடத்தில் சேகரிக்கப்பட்டிருக்குமென்று நான் எதிர்பார்க்கவேயில்லை. குறித்துக்கொள்ள காகிதம் பேனாவுமில்லை. மணியும் இரவு எட்டரைக்கு மேலாகிவிட்டது. காப்டனும் ஜமேதாரும் மறுநாள் மாலை கட்டாயம் வரவேண்டுமென்றும், சிலமணி நேரம் தங்கி எல்லாவற்றையும் நன்கு கவனிக்கவேண்டுமென்றும் அன்புடன் அழைத்தார்கள்.

அதன்படியே மறுதினம் மாலை சென்றேன். அளவற்ற அன்புடன் வரவேற்று உபசரித்தார்கள். பரஸ்பரம் பெயரைத் தெரிந்துகொண்டோம். காப்டன் A. C. S. வாரியர் அவர்களும், ஜமேதார் T. N., T. சாரி அவர்களும் சித்திரவிளக்கம் செய்ய முன்வந்தனர். எனக்குத் தோன்றிய அளவில் ரஸமான குறிப்புகளை வரைந்துகொண்டேன். அவைகளை உங்களுக்குச் சமர்ப்பிக்கின்றேன். மொத்தம் இருந்த படங்கள் 27; அவை என் மனத்திற்கு 27 நக்ஷத்திரங்கள் போலவே தோன்றின. கீழேயுள்ள குறிப்புகளைப் படித்த பிறகு நீங்களும் "ராணுவத்தில் யுத்தப் பயிற்சி யொன்றுதான் தருவார்களென்று நினைத்தோமே, இவ்வளவு அருமையான ஆதாரக் கல்வியா தருகிறார்கள்!" என்று என்னைப்போல் பிரமிப்பீர்கள். தற்போது நமது ராணுவம் நமது தேசீய ராணுவம்; அதனால் நம் சமுதாயத்தின், கலாசாரத்தின், பண்பாட்டின் அடிப்படையை நம் ராணுவத்தினர் அறியவேண்டியது அவசியமே. தற்போதைய ராணுவக் கல்விபோதனை முறை போற்றும்படியே யுள்ளது.

பட விவரங்கள்.

நிற்க, படங்களைக் கவனிப்போம். (1—11) முதல் பதினொரு படங்கள் வானசாஸ்திரத்தைச் சேர்ந்தவை. (12—14) அடுத்த மூன்று படங்கள் தற்கால சமுதாய வாழ்க்கையைச் சித்திரிக்கின்றன. (15—20) அடுத்த ஆறு படங்கள் சரீர, அங்க, சாஸ்திரத்தைப்பற்றினவை. (21—25) அடுத்த ஐந்து படங்கள் வருங்காலப்ரஜைகளான நம் சிறுவர்களைப்பற்றியும் கல்வி முறைகளைப் பற்றியும் பல குறிப்புகள். (26) உலக மக்களிடையே உள்ள மதவேறுபாடுகளைக் காட்டும் குறிப்புகள். (27) மோட்டார் ஓட்டுகையில் திடீரென நிறுத்த நேரிட்டால் எந்த வேகத்தில் எவ்வளவு தூரத்தில் போய் வண்டி நிற்குமென்பதைப்பற்றின தகவல்கள். ஆக, 27 படங்களும் பல்கலைக் குறிப்புகளல்லவா?

* * * * * *

முதல் பதினொரு [illegible]

20,0[illegible] கோடி [illegible]க்கு மு[illegible] தற்செயலாய் ஒரு நக்ஷத்திரம் சூரியன் [illegible], சூரிய மண்டலத்திலிருந்து [illegible]ர்ந்த சில துண்டங்கள் வான வெளி[illegible]ல் வெவ்வேறு கிரகங்களாகத் தே[illegible]ரம்பித்தன. இத்தகைய

சூரியதுண்டுகளில் ஒன்றுதான் பூமியாயிற்று! சூரியனுக்கு [illegible] இடையே தோன்றிய ஆகர்ஷண சக்தியால் சுமார் 4500 கோடி [illegible] களுக்குமுன் சூரியன் உதிர்த்த ஒருதுண்டமாகச் சந்திரன்தோன்றலாயிற்று. சந்திரன் தோன்றி 500 கோடி வருஷங்களுக்குப்பின் பூமியின் குலுக்கத்தால் ஹிமாலயா, ராகிஸ், ஆண்டிஸ் பர்வதங்கள் தோன்றலாயின. அதற்கு 2000கோடி வருஷங்களுக்குப் பிறகு ஐரோப்பிய ஆல்ப்ஸ் முதலிய பர்வதங்கள் பூமியின் புதிய குலுக்கலினால் தோன்றின.

சந்திரனுக்கும் பூமிக்கு மிடையேயுள்ள தூரம் 239000 மைல்கள். சந்திரன் தோன்றுவதற்குமுன் பூமியின் ஒரு சுழலுக்கு அதாவது ஒரு தினத்திற்கு 4 மணிதானும்! சந்திரன் தோன்றிய பிறகு பூமி சுற்றும் வேகம் குறைந்து, ஒரு தினத்திற்கு 24 மணியாயிற்று. சூரிய துண்டமான பூமியின் மேல்பாகம் குளிர்ந்ததே தவிர, உள்ளுக்குள் உஷ்ணம் அடக்கவில்லை. அதனால் திடீர்திடீரென்று எரிமலைகள் தோன்றி நெருப்பைக் கக்க முற்பட்டன. இத்தகைய நிலையில் பூமியில் உயிர் ஏற்படவில்லை! ஷை குறிப்புகள் முற்றும் முதல் படத்தைச் சேர்ந்தவை.

ஒரு 'விண் வீழ் கொள்ளி' நக்ஷத்திரம் பூமியின்மேல் தற்செயலாய் விழ்ந்ததும் பூமியில் உயிர் தோன்றிற்று என்று ஒரு சாரார் கூறுகின்றனர். அக்காலத்தில் தோன்றி இப்போது பூமிக்குள் மறைந்திருக்கும் பூதாகாரமான மரங்களே தற்போது நமக்கு நிலக்கரியாகக் கிடைக்கின்றன. உலகில் முதலில் உயிர் உண்டானது ஜல வஸ்துக்களிடையேதான். இது சுமார் 1000 கோடி வருஷங்களுக்கு முன். நம் அவதார க்ரமத்திலும் முதல் அவதாரம் மத்ஸ்யம்தானல்லவா? அக்காலம் க்ரீன்லாந்து, அமெரிக்கா, ஐரோப்பா, ஆப்பிரிகா, ஆசியா, ஆஸ்திரேலியா—யாவும் ஒன்றோடொன்று சேர்ந்தே இருந்தன; ஜலத்தால் பிரிக்கப்படவில்லை. அமெரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்குமிடையே சிறிது பாகமே ஜலத்தில் அமிழ்ந்திருந்தது.

பூமியைப் பொருத்தவரையில் சூரியன் சுழலவில்லை யெனினும், இதர கிரகங்கள் சம்பந்தப்பட்டவரையில் சூரியன் சுற்றுவதாகவே கருதவேண்டும். சூரியன், சந்திரன், பூமி மூன்றும் ஒவ்வொன்று ஒவ்வொரு வேகத்தில் சுற்றிக்கொண்டேதானிருக்கின்றன.

சந்திரன் பூமியிலிருந்து அதிக தூரமாகவே விலகிக்கொண்டே போய்க்கொண்டிருக்கின்றது. வருங்காலத்தில், பலகோடி வருஷங்களுக்குப்பிறகு, சந்திரன் பூமியிலிருந்து 286800 மைல் தூரம் சென்றவுடன் பல துண்டங்களாகச் சிதறி பூமியைச் சுற்றி ஒரு பெரிய வளையம் போல் நிலவுமாம்! அவ்வாறு நேரும்போது இப்போதைய ஒரு நாள் அப்போது 47 நாளாகுமாம்! மனிதனின் உயரம் சுமார் 12 முதல் 15 அடி இருக்குமாம்!

அத்தகைய நிலை தோன்றிய பிறகு, சூரியன் தற்போதிருப்பதைவிட நூறுமடங்கு உஷ்ணத்துடன் தகிக்க ஆரம்பிக்குமாம். எல்லா கிரக மண்டலங்களும் பூமியும் நெருப்புப் பந்துகளாகுமாம்! சூரியனின் எரிக்கும் சக்தியும் முடிந்து எல்லா தீக்ஷண்யமும் அடங்கி, குளிர்ந்து, பிரபஞ்சமே மகா ப்ரளயத்தில் மறைந்து விடுமாம்! அப்போது நானும் நீங்களும்...? இதுவரை ஏழு படங்கள் முடிந்தன.

நக்ஷத்திர மண்டலத்தைப் பற்றியது அடுத்த படம். உஷ்ணம் அதிகமாக ஆக நக்ஷத்திரத்தின் உருவமும் சுருங்குகிறது, வர்ணமும் மாறுகிறது. 5000 டிகிரி முதல் 35000 டிகிரிவரை உஷ்ணம் ஏற ஏற வர்ணமும் முறையே சிவப்பு, ஆரஞ்சு, மஞ்சள், கருத்த நீலம், வெளுத்த நீலம் என்று மாறுகிறது; உருவமும் குறைந்துகொண்டே வருகிறது. 35000 டிகிரிக்குப் பிறகு உஷ்ணம் குறைய ஆரம்பிக்கிறது. சுருக்கமும் கிடையாது.

...000 டிகிரிக்கு இறங்குகிறது உஷ்ணம், நமக்கு 110 டிகி... கமுடியவில்லை யென்பது நினைவிருக்கட்டும். நக்ஷத்திர மண்ட...த்திற்கும் பூமிக்கும் சூரிய மண்டலத்திற்கும் இடையே பல லக்ஷக்கணக்கான மைல்தூரம் இருக்கின்றது. சூரியனில் அவ்வப்போது புள்ளிகள் தோன்றி மறைவதிலிருந்து சூரியனும் சுழல்கிறதென ஏற்படுகிறது.

கிரகணங்கள் தோன்றுவதைப் பற்றினது அடுத்த படம். நம் முன்னோர்கள் வான சாஸ்திரத்தில் எவ்வளவு தேர்ச்சிபெற்ற ஞானிகள் என்பது கிரகணங்களை விநாடிகூட தப்பாது பல வருடங்களுக்கு முன்னதாகவே கணித்துக் கூறியதிலிருந்து தெளிவாகிறது. இது ஆகாய விமானக் காலமல்லவா? இக்காலத்திய கணக்குப்படி, ஒரு விமானம் மணிக்கு 300 மைல் வேகத்தில் ஒரு விநாடியும் நிற்காமலே போகுமானால் 33 நாளில் சந்திரமண்டலத்தை அடைந்துவிடமுடியும்! 10 வருடங்களில் வெள்ளி (சுக்ர) மண்டலத்தை அடையலாம். 18 வருடங்களில் செவ்வாயை (அங்காரகனை) அடையலாம். 21 வருடங்களில் புதனை அடையலாம். 35 வருடங்களில் சூரியனை அடையலாம். 147 வருடங்களில் வியாழனை (குரு-பிரஹஸ்பதி) அடையலாம். 298 வருடங்களில் சனியை அடையலாம். 9,600,000 வருடங்களில் மிகவும் சமீபத்திலுள்ள நக்ஷத்திரத்தை அடையலாம்! கணக்கு எப்படி?

இன்றைய சமுதாய வாழ்க்கை (12—14)

பட்டண வாழ்க்கையின் வசதிகளைக் காட்டுகிறது 12-வது படம். (i) உன்னை, உன் குடும்பத்தை, உன் சொத்துக்களைக் காப்பாற்றுகிறது. இதற்கு உதவ போலீஸ், நெருப்பணைப்புப் படை முதலியன உள்ளன (ii) விளையாடவும் விச்ராந்தியெடுத்துக்கொள்ளவும் விசாலமான மைதானங்கள், பூங்காக்கள், நீஞ்சல் நிலையங்கள் உள்ளன. (iii) உன் ஆரோக்யத்தைப் பாதுகாக்க ஆஸ்பத்திரிகள்; சுகாதார ஊழியர்களின் பல்வேறு பணிகள்— தெரு சுத்தப்படுத்துதல், குடிதண்ணீரைச் சுத்தப்படுத்தல் முதலியன. (iv) கல்வி அபிவிருத்திக்காக பள்ளிகள், கலாசாலைகள், வாசகசாலைகள், பொருட்காட்சி சாலைகள். (v) தெரு விளக்கு, மின்சார வசதி, போக்குவரவு வசதி முதலிய பொது சௌகரியங்கள்.

அடுத்த படம் பாங்குகள் செய்யும் தொண்டை வர்ணிக்கிறது. சர்க்காருக்கும், தொழில்களுக்கும் பாங்குகள் கடன் கொடுத்து உதவுகின்றன. வரிகள் மூலமாக ஓரளவு பணம் சர்க்காருக்குத் திரும்புகிறது: சேமிப்புகள் மூலமாகப் பணம் பாங்குகளுக்குத் திரும்புகிறது. இப்படியாகப் பணம் பாங்குகள் மூலமாகச் சுழன்றுகொண்டே இருக்கிறது.

சர்க்காரின் நிதி எனும் மரத்தைச் சித்திரிக்கிறது அடுத்த படம். ஷை மரத்திற்கு முக்கியமான வேர் பலவித வரிகளே—வருமான வரி, தீர்வைகள், ஏற்றுமதி இறக்குமதி வரிகள், நீர்ப்பாசன தீர்வைகள் விற்பனை வரி, தபால் தந்தி கட்டணங்கள், ரயில் வருமானம், வட்டி முதலிய வேர்கள். ஷை மரத்தின் கனிகள் (1) எதிரிகளிடமிருந்து பாதுகாப்பு (2) உள்நாட்டில் விஷமிகளிடமிருந்து பாதுகாப்பு. (3) சுகாதார அபிவிருத்தி (4) கல்வி (5) விவசாயம் (6) போக்கு வரவு (7) வியாபாரத்தையும், நாணய செலாவணி, பரிவர்த்தனை முதலியவற்றையும் பாதுகாத்தல் முதலியன.

சரீர சாஸ்த்ரக் குறிப்புகள். (15—20)

குழந்தைப் பருவத்திலிருக்கும் அங்க அளவுகள் வயதுவந்த காலத்தில் எத்தனை மடங்காகின்றனவென்பதைக் காட்டுகிறது 15-வது படம். தலை இருமடங்கு, உடல் மும்மடங்கு, கைகள் நான்குமடங்கு, கால்கள் ஐந்துமடங்கு பெரிதாகின்றனவாம்! 2, 3, 4, 5 — சரிதானே!

16-வது படம் மிக விசித்திரமானது. மனித உடலின் அடங்கியுள்ள வஸ்துக்கள் யாவையெனில் (1) ஏழு பெரிய 'பார்'ஸோப் செய்யக்கூடிய அவ்வளவு கொழுப்பு! (2) பத்து காலன் பிப்பாயை நிரப்பக்கூடிய தண்ணீர்! (3) ஒரு கோழிக்குஞ்சின் கூட்டை வெள்ளையடிக்கக்கூடிய அவ்வளவு சுண்ணாம்பு. (4) ஒருவேளை மருந்துக்குப் போதிய ஒரு ஸ்பூன் மாக்னீஷியம். (5) மூவாயிரம் பென்ஸில்களுக்குப் போதுமான கரி! (6) இரண்டாயிரம் வத்திக்குச்சிகளுக்குப் போதுமான பாஸ்பரஸ் (7) ஒரு இரண்டங்குலம் ஆணியளவு இரும்பு (8) ஒரு பாக்கெட் கந்தக மாத்திரைகளுக்குப் போதுமான கந்தகம்! இவையெல்லாம் சேர்ந்துதான் மனிதன்; வெறும் காற்றடைத்த பையல்ல, பொய்யான காயமல்ல!

ஹிருதயம் சுமார் அரை ராத்தல் எடை உள்ளது. ஒருவித 'ரிபேர்' இல்லாது, அதனுடைய 'பம்பிங்' வேலை இடைவிடாது நடைபெறுகிறது ஒருநாளைக்கு 1,00,800 தடவை இதயத் துடிப்பு அடித்துக்கொள்கிறது: அதாவது, ஒரு நிமிடத்திற்கு 70 முறை! ஒருவன் 24 மணிநேரம் படுத்தவாறே ஓய்வு எடுத்துக்கொண்டால் 20,000 முறை இதயம் அடித்துக்கொள்வது சேமிப்பாகிறது. 12 மணிநேரத்தில் இதயம் உற்பத்திசெய்யும் சக்தியானது 65 டன் எடையுள்ள பளுவை ஒரு அடி உயரம் தூக்கக்கூடிய அவ்வளவு நிறையுள்ளது. ஒரு சமயத்தில் 5 'க்வார்ட்' ரத்தம் ஹிருதயத்தால் 'பம்ப்' செய்யப்படுகிறது. அதன்படி, ஒரு வருடத்தில் 6,50,000 காலன் அளவு 'பம்ப்' செய்யப்படுகிறது. மனித சரீரத்திலுள்ள நரம்பு முதலான ரத்தக் குழாய்களை ஒன்றன்பின் ஒன்றாக அடுக்கிக் கொண்டே போனால் 12,000 மைல் நீளம் இருக்குமாம்! கணக்கு எப்படி? இதுதான் 17-வது படம்.

ரத்த ஓட்டத்தின் அழுத்தத்தையும் (ப்ளட் ப்ரஷர்) ஹிருதயத் துடிப்பின் வேகத்தையும் விளக்குகிறது 18வது படம். இது யாவரும் அறிந்து கொள்ளவேண்டிய விஷயமே.

வயது.	1	3	6	20	40	60	80
1. அதிகப்படியான 'ஸிஸ்டாலிக்' ப்ரஷர்	88	90	94	120	126	135	180
2. குறைந்த பட்ச 'டயஸ்டாலிக்' ப்ரஷர்	60	63	65	72	82	83	94
3. ஹிருதயத் துடிப்பு ஒரு நிமிடத்திற்கு	100	95	90	80	70	70	70

கோபமோ துக்கமோ சோர்வோ இன்றி சாதாரண நிலையிலிருக்கையிலுள்ள எண்ணிக்கையைத்தான் காட்டுகிறது மேற் கணக்குப் புள்ளி.

19வது படம் சரீர சம்பந்தமான, ஆனால், தத்துவார்த்தத்தோடு கூடியது. அசுவமேத யாகம் என்ற மகுடத்துடன் மனிதத் தலையின் உள் பாகங்களை வர்ணங்களில் தீட்டியிருக்கிறார்கள். பக்க வாட்டத்தின் படம் இது. 20-வது படம் இதே அவயவங்களைப் பின்புற வாட்டமாக வரைந்துள்ளார்கள். டாக்டர் ரீலீ என்ற அறிஞரின் வியாக்கியானப்படி ரிக் வேத தத்துவம் இப் படங்களில் விளக்கப்படுகின்றது. அதாவது, மூளையின் நடுமத்திய பாகத்திலுள்ள 'இதந்த்ர' என்ற (ஸெரிப்ரம்) பகுதியைத்தான் அசுவம் (குதிரை) என்று குறிப்பிட்டனராம் நம் முன்னோர். அதற்கு மூன்று காரணங்களுண்டு. (1) அது அமைப்பில் குதிரையின் தலையைப்போன்றுள்ளது. (2) ஒரு முரட்டுக் குதிரையைக் கடிவாளம் போட்டுக் கட்டுப்படுத்துவது எவ்வளவு கடினமோ அதேபோல் மூளையின் இந்தப் பகுதியை அடக்கி நிலை நிறுத்துவது மிகக் கடினம். இதே கீதையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (3) மிருகங்களுள் மிகவும் சாதுர்யக்

வாய்ந்தது குதிரை; அதேபோல் மூளையில் இந்த பாகம்தான் மிகவும் மதிப்பு வாய்ந்தது. இதந்த்ராவைக் கட்டுப்படுத்தி நிலைநிறுத்துபவன் சாதாரண மனிதர்களைவிட மிகவும் உயர்ந்தவன். ஏனெனில், ஒரு சமயம் உயர்ந்த நிலையை அடைந்தாலும் மறு நிமிடமே உலக இச்சை, விருப்பு-வெறுப்புகளில் தள்ளிவிடுகிறது மூளையின் பின் பகுதியான சிரோபலம் (ஸெரிபெல்லம்.) உண்மையான அசுவமேத யாகம் என்பது குதிரையைத் துரத்திப் பிடித்துக்கொல்வதல்ல; மூளையின் இதந்த்ர, சிரோபலம் இரண்டையும் கட்டுக்கடக்கி ஒருபடி முன்னேறி அங்கேயே நிலைத்தல்தான்—மனமாகிய குதிரையை அடக்கி, சாதாரண வாழ்க்கையின் ஆசா பாசங்களைக்கொன்று, இவ்வாழ்விலேயே பேரின்பத்தைக் காண்பதுதான்—ரிக்வேத அசுவமேத யாகம். இந்திரன் என்பது இதந்த்ரவின் திரிபு. இந்திரனின் 1000 கண் என்பது இதந்த்ரவிலுள்ள 1000 கண்ணுடைய ஞானம்— எல்லாவற்றையும் நன்கு பார்த்தறியும் சக்திதான் என்று மறைபொருளாக உணரவேண்டும். காயத்ரி மந்த்ரத்திலுள்ள பூ:, புவ:, ஸுவ: மூன்று மண்டலங்களும் முறையே முதுகு, கழுத்து, சிரோபலத்திற்கு மேல் இதந்த்ர ஆகிய மூன்று பகுதிகளையே குறிப்பிடுகிறது. ஒருவனுடைய ஆத்மீக வளர்ச்சி பூமண்டலத்தை விட்டேறவில்லையெனில் அவன் மனித உருவில் மிருகமாகவே காணப்படுகிறான். மிருக இச்சைகளும், கோபமும், காரணமற்ற கொடுமையுமே அவனிடம் காணமுடியும். இரண்டாவதான புவ மண்டலத்துக்கேறின வளர்ச்சியுடையவனை புத்திசாலியாகவும், தத்துவங்களை ரஸிக்கும் நோக்கும் ஆற்றலுமுடையவனாகவும் காண்கிறோம். தேக இச்சைகளையும், மனோ த்ருப்தியையும் தியாகம் செய்து, இருமண்டலங்களையும் தாண்டி மேலேறி ஸுவ மண்டலத்திய ஆத்மீகானுபவம் பெற்றவர் லக்ஷத்திற்கு ஒருவர் தேறுவதுகூட கடினம்; ஆனால், அத்தகையோர்தான் உண்மையில் அசுவமேத யாகம் செய்து மண்ணில் விண்ணைக் காண்கிறார்கள். இந்த ஜன்மத்திலேயே, இவ்வுலகிலேயே, மோக்ஷத்தை —பரமபதத்தை— அடைகிறார்கள். மிகவும் ரஸமாயில்லையா இந்த வியாக்கியானம்?

மாணவரும் போதனையும் (21—25)

ஐந்து வயதிலிருந்து 14 வயதுக்குள் நம் நாட்டில் 6 கோடி சிறுவர் இருக்கின்றனர். இவர்களில் ஐந்திலொருபங்கே 1.2 கோடிதான் ஆரம்பக் கல்விக்குப் போகின்றனர். அவர்களில் முக்கால் பங்கு 0.9 கோடி அரை குறைப்படிப்புடன் நின்றுவிடுகின்றனர். மீதி 0.3 கோடி குழந்தைகளே எட்டாம் வகுப்புவரை படிக்கின்றனர். ஷை 30 லட்சத்தில் 26,60000 பேர் அத்துடன் படிப்பை நிறுத்திக்கொள்கின்றனர். 3,40000 பேர்தான் 8-ம் வகுப்பு தேர்ச்சிபெறுகின்றனர். இவர்களில் 1,90,000 படிப்பை நிறுத்தி, வேலை தேடுகின்றனர்; மீதி 1,50000 பேர்தான் மேலே S. S. L. C. வரை படிக்கிறார்கள். அதில் சுமார் 1 லக்ஷம் பேர்தான் தேறுகிறார்கள். வருங்காலத்தில் இத்தகைய நிலைமையை நிலவவிடக்கூடாது. 6 கோடி சிறுவர்களையும் கட்டாயமாய் படிக்கவைக்கவேண்டும். படிப்படியாகத் தேர்ச்சியளித்து, ஐந்திலொருபங்கு விசேஷ 'டெக்னிகல்' வழிகளிலும், மீதி ஐந்தில் நான்கு பங்கு பலவிதத் தொழில்களிலும் உத்தியோகங்களிலும் ஈடுபடுமாறுசெய்யச் சர்க்கார் உறுதிகொண்டுள்ளனர். இதுவே 21-வதுபடம்

வளரும் குழந்தையின் மனப்போக்கை நிர்ணயிக்கும் மூன்று அம்சங்களைக் காட்டுகிறது 22-வது படம். (1) முதலாவது, வீடு. பெற்றோரின் குணாதிசயங்கள், குடும்ப நிலைமை, பண்பாடு, கட்டுக்கோப்பு, ஆகாரம், உடை, வீட்டின் அமைப்பு, பணத்தின் அளவு —ஆகிய இத்தனையும்

சேர்ந்து வீட்டினுடைய சக்தி என்கிறோம். (2) இரண்டாவது, பள்ளிக்கூடத்தின் மூலம் ஏற்படும் மனப்போக்கு. இது வாத்தியார்களையும் பொருத்திருக்கிறது; தோழர்களான இதர குழந்தைகளையும் பொருத்திருக்கிறது. தவிர, போதிக்கப்படும் விஷயங்கள், நடக்கும் கேளிக்கைகள், கட்டடத்தின் வசதி, புத்தகங்கள், கூட்டுச்சாப்பாடு முதலியவைகளாலும் மனப்போக்கு உருவாகிறது. (3) மூன்றாவதாக, சூழ்நிலையின் சக்தி. பட்டணமா, கிராமாந்தரமா; தொழில்கள், அச்சகங்கள், செய்திஸ்தாபனங்கள், ஸினிமா, ரேடியோ, கிளப்பு, நந்தவனம், கோவில் முதலியவைகள் இருக்கும் சூழ்நிலையில் உருவாகும் மனப்பரிபக்குவமே அலாதிதான்.

எழுத்துக்கள் உருப்பெற்ற சரித்திரத்தைக்காட்டுகிறது 23-வது படம். சுமார் 5000 வருஷங்களுக்குமுன் எகிப்து தேசத்தில் பொம்மை வடிவங்களுடன் தோன்றிய எழுத்துக்கள், படிப்படியாக, கி. பி. 114-ல் தற்போதுள்ள A,B,C,D முதலான 26 'ரோமன்' எழுத்துக்களாக உருப்பெற்றன.

போதனாமுறையில் எது மிகவும் சிறந்தது? குயவன் முறையா? விவசாயியின் முறையா? தச்சனின் முறையா? என்று கேட்கிறது 24-வது படம். நல்ல கற்பனை. (1) குயவன் தனது அச்சில் களிமண்ணை உருவாக்குகிறான்; அந்த முறையில் உபாத்யாயர் தன்னுடைய முழுப்ரயத்தனத்தினாலும் மாணவனை உருவாக்குகிறான். (2) விவசாயி நிலத்தின் தன்மையையும், பருவநிலையையும் உணர்ந்து, அதற்குத் தக்கவாறு தன் முயற்சியைச் செலுத்துகிறான்; அந்த முறையில் மாணாக்கனின் தன்மையை ஓரளவு கவனித்து, உபாத்தியாயர் வேண்டிய அளவு தனது முயற்சியைச் செலுத்துகிறார். (3) தச்சனிடம் ஒரு மரத்துண்டைக் கொடுத்து அதில் ஒரு பொம்மையை உருவாக்கச்சொன்னால், அம்மரத்திற்குள் எந்த அளவில் பொம்மை உருவாகும் என்பதை முதலில் கண்டுகொள்கிறான்; பிறகு அனாவசிய பாகங்களைச் செதுக்கித் தள்ளுகிறான். அந்த முறையில் உபாத்தியாயர், பையனின் முழு திறமையையும் கண்டுகொண்டு, வேண்டிய அளவு மட்டுமே தன் கவனத்தைச் செலுத்துகிறார். ஆக இம்மூன்று முறையிலும் முறையே உபாத்தியாயரின் பங்கு 100%, 75%, 25% ஆகவும், மாணவனின் சொந்த முயற்சி முறையே 0%, 25%, 75% ஆகவும் உள்ளது. மூன்றாவது முறையே மிக உயர்ந்ததல்லவா?

ஷை படத்தின் மற்றொரு பகுதி 3 அருமையான விதிகளைக் காட்டுகிறது. (1) போதனையில் எத்தனை இந்திரியங்களை உபயோகப்படுத்த முடியுமோ அத்தனையும் உபயோகப்படுத்து. காதால் கேட்பதில் ஓரளவே நினைவில் வைத்துக்கொள்ள முடியும். கண்ணால் பார்ப்பதைப் பெரிதளவு நினைவில் வைத்துக்கொள்ள முடியும். கண்டும், கேட்டும், ஸ்பரிசித்தும் உள்ளவற்றை மறக்கமாட்டார்கள். (2) மாணவனின் சாதுர்யத்தை முழுதும் ப்ரயோஜனப்படுத்தவேண்டும். வித்தையின் விருத்திக்கு பல படிகள் உண்டு— ஆசையையும் ஆர்வத்தையும் கிண்டிவிடுதல்; இரசிக்கும்படிச் செய்தல்; வெற்றி காணுதல்; புரியாதவற்றைத் திரும்பத்திரும்ப உரைத்து உணரச்செய்தல்—அடிமேலடி யடித்தால் அம்மியும் அசையுமென்றபடி. (3) போதனை ஆரம்பிக்கும் முன்பே மாணவனின் சரியான தரத்தைச் சோதித்து அறிதல்; பிறகு படிப்படியாகப் பரீட்சித்தல்; படிப்பின் முடிவில் தேர்ச்சி பெற்றுள்ள அளவைச் சோதித்து உபதேசித்தனுப்புதல்.

25-வது படம் நம் நாட்டின் கல்வி நிலையை உலக நாடுகளின் நிலையோடு ஒப்பிட்டு விளக்குகிறது. அதன்படி நம் சுதந்தர இந்திய யூனியனின் ஜனத்தொகை சுமார் 39 கோடி. (38,89,97,955) அதில் பள்ளிக்கூடங்களுக்குச் செல்பவர் தொகை சுமார் 4½ லக்ஷம்தான்! (4,54,140) கலாசாலைகளில் உயர்தரப்படிப்பு படிப்பவரின் தொகை 1¾ லக்ஷத்திற்குக்

குறைவுதான்! (1,63,408). நம் நாட்டில் மொத்தம் 20 சர்வகலாசாலைகளிருக்கின்றன. ஜனத்தொகைக்கும் கலாசாலைபடிப்புக்குமுள்ள விகிதத்தைக் கணக்கிட்டால் 2206 பேரில் ஒருவர்தான் உயர்தரப் படிப்புக்குச் செல்கிறார் நம் நாட்டில்! அமெரிக்காவிலோ 225ல் ஒருவர்; கானடாவில் 235ல் ஒருவர்; ரஷ்யாவில் 300ல் ஒருவர்; பிரான்ஸில் 559ல் ஒருவர்; ஜர்மனியில் 690ல் ஒருவர்; இங்கிலாந்தில் 837ல் ஒருவர்; ஜப்பானில் 1356ல் ஒருவர்! நம் நாட்டின் கல்வி நிலை மாறவேண்டாமா?

உலக மதங்கள். (26-வது படம்.)

உலக ஜனத்தொகையில் 29% கிறிஸ்தவர்கள். புத்த மதத்தினரும் அதைச்சார்ந்த கன்ப்யூஷஸ் மதத்தினரும் சேர்ந்து 21%. ஹிந்துக்கள் 10⅓%. முஸ்லிம்கள் 10⅓%. மீதி இதர மதத்தினர். இந்த விகிதாசாரத்தை மட்டும் காட்டி நிற்கிறது ஷை படம். மார்க்கங்கள் பலவானாலும் வழிபடும் கடவுள் ஒருவரே என்பதை உணரும் காலம் எப்போது வரும்?

27-வது படம்.

மோட்டார் வைத்திருப்பவர்களுக்கு — தானே ஓட்டுபவர்களுக்கு — மிகவும் அவசியமான விவரங்களைக் கொடுக்கிறது 27-வது படம். ஒரு குறிப்பிட்ட வேகத்தில் கார் வந்துகொண்டிருக்கும்போது குறுக்கே ஏதாவது வந்து, வண்டியை நிறுத்தும்படி நேரிட்டால், நிறுத்துவதெனத் தீர்மானிப்பதற்குள்ளாகவும், 'ப்ரேக்குகள்' வேலைசெய்து வண்டியை நிறுத்துவதற்குள்ளாகவும் எத்தனை அடி தூரம் வண்டி முன்னேறி விடுகிறது என்பதை அறியவேண்டியது மிக அவசியம். 20 மைல் வேகத்தில் வண்டி சென்றுகொண்டிருந்தால் நிறுத்தத் தீர்மானிப்பதற்குள் 22 அடி நகர்ந்து விடுகிறது; ப்ரேக் வேலை செய்வதற்குள் மேலும் 18 அடி நகர்ந்து விடுகிறது — ஆக 40 அடி தூரம் சென்றே வண்டி நிற்கும். அதே போல்,

வேகம்	வண்டி நகரும் தூரம்		ஆக
	தீர்மானிப்பதற்குள்	ப்ரேக் பிடிப்பதற்குள்	மொத்தம்
30 மைல்	33 அடி	40 அடி	73 அடி
40	45	70	115
50	56	109	165
60	66	156	222
70	79	240	319

ராணுவ வண்டிகளை சமயோசிதம்போல் பலவித வேகங்களில் ஓட்ட வேண்டியிருப்பதால் ஷை முன்னெச்சரிக்கைக் குறிப்புகள் மிக அவச்யம்.

முடிவுரை

அனேகமாக இப்போது என் அபிப்பிராயமும் உங்கள் அபிப்பிராயமும் ஒன்றாயிருக்குமென்றே நம்புகிறேன். ஷை 27 படங்களும் பல்கலைக் குறிப்புகள்தானே? அறிவென்னும் வானவெளியில் 27 பிரகாச நட்சத்திரங்கள்தானே? யோக்யதையை—உயர்வை—போற்றவேண்டியது பத்திரிகாசிரியரின் கடமையல்லவா?

ராணுவக் கல்வியில் யுத்தப் பயிற்சியைப் பற்றி நாம் குறிப்பிட வேண்டுவதில்லை; ஏனெனில், அது அவர்களுக்கே உரித்தானது. ஆதாரக் கல்வி என்ற அடிப்படைத்திட்டத்தில் பல அம்சங்கள் சேர்த்திருப்பதில் தச்சவேலை, தோல்வேலை போன்ற கைத்தொழில்களுக்கும் முக்யத்வம் அளித்துள்ளார்கள். பொதுவாக, ராணுவம் தேசியமானதின் பலனாக ராணுவக் கல்வியும் தேசிய அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது போற்றத்தக்கதே. அஹிம்ஸா தர்மத்தின் வெற்றியால் நாம் சுதந்தரத்தைப் பெற்றோமெனினும், அதை நிலைநிறுத்த சிறந்த ராணுவபலம் தேவையென்பது தற்கால உலகநிலையில் சொல்லாமலே விளங்கும்.



பி.ஸ்ரீ.

அழகு எது? அழகன் யார்?

ஒரு பாகவதர் அரசன் ஒருவனிடம் வந்து, ‘மாட்சிமை தங்கிய மகாராஜாவே! தங்களுக்கு ஜகன் மோகன கோபாலனின் வைபவமாகிய ஸ்ரீமத் பாகவதத்தைக் கற்பிப்பேன்' என்றார். அரசன் அவர் முகத்தை உற்று நோக்கினான். ‘சுவாமி, எனக்குக் கற்பிக்கத் தொடங்குமுன் தாங்கள் பாகவதம் கற்று வரவேணும்' என்றான். பாகவதர் திடுக்கிட்டார். பிரசித்தி பெற்ற ஸ்ரீ வேணுகோபால பாகவதருக்கா பாகவதம் தெரியாது!

பாகவதர் ஆலோசனையில் ஆழ்ந்தவண்ணம் மெள்ளப்போனார். ‘அரசன் புத்திசாலி; நிச்சயமாகப் பித்தன் அல்லன். பக்தனும் கூட—கிருஷ்ண பக்தன். அவன் சொன்னதிலும் ஏதாவது பொருள் இருக்கத்தான் வேணும். வீட்டுக்குப்போய் ஆற அமரப் பாகவதத்தை இன்னும் ஒருமுறை படித்துப் பார்க்கலாமே' என்பது போன்ற நினைவு-வெள்ளத்திலே முங்கி முழுகி அப்படியே வீட்டில் புகுந்து, பாகவதமும் கையுமானார்,

சுலோகங்கள் நெட்டுருவாகி விட்டன. அவற்றின் இலக்கியச் சுவையும் புலனாயிற்று. காப்பேடுமுதல் கடையேடு வரையுள்ள கதைகளும் உபமானங்களும் தத்வங்களும் உள்ளங்கை நெல்லிக் கனியாகிவிட்டன. இந்த நிலையில் மறுபடியும் அரசனிடம் போனார்.

‘அரசே! எந்தப் பண்டிதரோடும் பாகவதம் குறித்து வாதம் செய்யச் சித்தமாயிருக்கிறேன். அறை கூவுகிறேன்; பறைசாற்றிப் புலவர்கணங்களை வரவழைத்துப் பார்க்கலாம். பிறகு தங்களுக்குப் போதனை செய்ய அனுமதி தாருங்கள்' என்றார் பாகவதம்-வேணுகோபாலர். அரசனோ அந்த முகத்தை உற்றுநோக்கிய வண்ணம், ‘சுவாமி, போய் வாருங்கள்; பாகவதம் கற்று வாருங்கள்' என்றான் மறுபடியும்.

பாகவதருக்கோ கோபம் வந்துவிட்டது. எனினும் அதை வெளிக்காட்டாமல் நழுவிவிட்டார். ‘அரசன் ரஸமில்லாதவன்; புலமையின் அருமை தெரியாதவன். பாகவதத்தில் இன்னும் நான் கற்றுக்கொள்ள என்னதான் இருக்கிறதோ?' என்று எண்ணமிட்ட வண்ணம் வீடு சேர்ந்தார். பாகவதத்தின் மீதும் உள்ளம் கசந்துபோயிற்று.

மீண்டும் ஆலோசனையில் ஆழ்ந்தார். மறுபடியும் பாகவதத்தை எடுத்துப் பார்த்தார். கண்களால் ஏடுகளையா பார்த்தார்? மனக்கண்

னால் ஸ்ரீ கிருஷ்ண சரிதத்தையே பார்த்துவிட்டார். பார்க்கத்தானா செய்தார்? பருகினார் கண்ணன் கதையமுதம்; இன்னமுதினும் இனியதென்று பருகினார்.

எம்பெருமான் தன்சரிதை
செவியால், கண்ணால்
பருகுவோம்; இன்னமுதம்
மதியோம் அன்றே.

என்ற குலசேகரரின் மனதிலே இந்தப் பாகவதருக்கும் உரியதாகி விட்டது.

இன்னமுதம் மதியாது எம்பெருமானின் கதையமுதம் பருகிவந்த வேணுகோபால பாகவதர் இனி அரசனையாவது அவனுடைய செல்வத்தையாவது மதிக்கப்போகிறாரா? ஏன், அந்த எண்ணமே அகன்று விட்டது.

அரும்பிணி பாவம் எல்லாம்
அகன்றன என்னைவிட்டு

என்று திருமங்கை மன்னர் சொல்லுகிறாரே, அப்படி அகன்றுவிட்டது, பாகவதம்-வேணுகோபாலரின் உள்ளத்தை விட்டு, அரசனுக்குப் பாகவதம் கற்பித்துப் பொருள் தேட வேண்டும் என்ற எண்ணம் எல்லாம்.

'அடி சூடும் அரசையல்லால்— அரசாக எண்ணேன் மற்றரசு தானே!' என்ற குலசேகரரின் மனநிலையும் இந்தப் பாகவதருக்கு வந்துவிட்டதால், அரசனை அரசனாகவே எண்ண முடிவதில்லை. கண்ணனே அரசன், இவரது இதய மகா ராஜ்யத்திலே. இவரும் அரசராகிவிட்டார்; ஆம், 'அடிசூடும் அரசு' பெற்றுவிட்டார். கண்ணனுடைய அடிமலர்களை முடிமேல் சூடிக்கொண்டார்: முடிசூடிக்கொண்டதாகவே எண்ணம்.

அரசனுக்கு இப்போது அடிக்கடி இந்தப் பாகவதரின் நினைவுதான். 'இரண்டு தடவை வந்துபோனவர், அப்பால் வரவில்லையே— ஏனப்படி?' என்று எண்ணிய வண்ணம் அரசனே பாகவதரைப் பார்க்கப் புறப்பட்டான். வந்து பார்த்தவன் அப்படியே பிரமித்துக் காலில்விழுந்தான். அந்த முகத்தின் தேஜஸையும் அழகையும் பார்த்துக்கொண்டேயிருக்கவேண்டுமென்று தோன்றியது. ஆம்; ஜகன்மோகன சௌந்தரிய மூர்த்தியைப் பாகவதத்திலே தரிசித்துவிட்ட வேணுகோபால பாகவதரின் முகமே அந்தச் சௌந்தரிய தரிசனத்திற்குச் சாட்சி சொல்லிவிட்டது!

'இவர் பாகவத பாராயணம் உள்ளபடியே செய்திருக்கிறார். பாராயணம் உள்ளத்திலிருந்து உயிருக்கும் சென்று முகத்திலும் பிரதிபலிக்கின்றது. ஆஹா, ஸ்ரீ கிருஷ்ண ஸௌந்தரியம் இந்த முகத்திலே ஒளி வீசுகிறது!' என்று தனக்குள் தானே சொல்லிக்கொண்டான் அரசன். பிறகு அவன் பாகவதரை நோக்கி, 'பாகவதம் கற்ற பெரியீர்! அடியேனுக்கும் கற்பித் தருள வேணும்' என்று பிரார்த்தித்தான்.

அழகு என்கிற வானவில்

கண்ணனே அழகன். ராமனும் கண்ணன்தான். திருமால் மட்டுமா? முருகனும் கண்ணன்; சிவபெருமானும் கண்ணன் தான். இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து தோன்றுவதாக, மயிலைப் பேயாழ்வார் பாடியிருக்கிறாரல்லவா?

வேறு தெய்வ ஸௌந்தரியங்களும் ஜகன் மோகனகோபாலனின் ஸௌந்தரியங்களில் அடங்கிப்போவதாகப் பேசுகிறார் மயிலைப் பேயார். மேலும் இவர்,

நிறம் வெளிது, செய்து,
பசிது, கரிதென்று
இறையுருவம்
யாம் அறியோம்

[வெளிது—வெளுத்திருக்கும். செய்து—சிவந்திருக்கும். பசிது—பசுமையாயிருக்கும்.]

என்கிறார். ஜகன் மோகன ஸௌந்தரிய மூர்த்திக்கு நிறம் ஒன்றா? கறுப்போ, நீலமோ, பசுமை

யோ தானோ? சிவ பெருமானுடைய செந்நிறமும் எங்கள் கண்ணபிரானுக்கு உரியதுதான் என்கிறார் ஆழ்வார். ஏன், வெள்ளையர்களின் வெண்ணிறமும் பகவானுக்கு உரியது தான்! பலராமனுடைய நிறம் வெண்ணிறம் தானே?

பேசுவார் எவ்வளவு
பேசுவார், அவ்வளவே

என்று இறைவன் திருவுருவத்தை ஆழ்வார் பேசுவதால், வானவில்லின் ஏழு வண்ணங்களும் கண்ணனுடைய நிறங்களே.

வானவில்லின் பிரதான நிறங்கள் நீலமும் செந்நிறமும்—இல்லையா? ஆகவே, ஒரு பழைய புலவர் நீலநிற நெடுமாலுக்கும் செந்நிறச் சிவபெருமானுக்கும் வானவில்லை ஒரு சமரஸ அறிகுறியாகக் காண்கிறார். கண்டு,

வண்ணம்வே(று) உடம்(பு)ஒன்
வானவில் அனையரே! [றாய்

என்று சிவ - விஷ்ணு சொரூபத்தில் பரவசமாகிறார். உண்மையில் சைவ வைஷ்ணவ சமரஸத்திற்கு மட்டுமா வானவில் ஒரு நினைவுக் குறி? வானவில்லின் வசீகர நிறம் ஏழும் சைவ வைஷ்ணவ ஜைன பௌத்த சமயங்களும், கிறிஸ்தவ இஸ்லாம் சீக்கிய மதங்களுமாகிய ஏழு சமயங்களுக்கும் வசீகரமான நினைவுக்குறிதான்.

வானவில்லைக் கண்டு வசீகரிக்கப் பெறாத உள்ளமும் உண்டோ? அந்த வில்லை அப்படி வளைத்து விண்ணையும் மண்ணையும் ஒன்றாய் இசைப்பதுபோலக் காட்டும்தெய்வச் சிற்பி, ஏழு சமயங்களையும் வளரவிட்டு உலத்தையெல்லாம் ஒரே சமரஸ சன்மார்க்க நெறியில் செலுத்த விரும்புகிறான்.

அன்பர்களே! விண்ணை நிமிர்ந்து நோக்குங்கள்; வானவில்லைப் பாருங்கள். குறுகிய நோக்குடன் சிறுமையை, இதய வறுமையை விலக்கி விடுங்கள். மழைத் துளிகளுக்கிடையே சூரியநாராயணன் ஒளி-நகை அரும்பி இந்திரவில் இடும் காட்சியைக் கண்டு மெய்ம்மறந்த கம்பனல்லவோ, ராமபிரான்மீது தேவர்கள் பூமழை பொழிந்த காட்சியை,

விற்கொண்ட மழை அனன்மேல்
பூமழை பொழிந்து வாழ்த்தி
விண்ணவர் போயி னாரே

என்று வருணித்திருக்கிறான்.

மழைமேகத்திற்கிடையே வானவில்லைக் கண்டதும் 'அந்த அதிசய அழகிற்குப் பூவிட்டு வழிபடவேண்டும்; ஏன், அதன்மீது ஆசைதீரப் பூவை மழையாகப் பொழிந்து அகங்குளிர வாழ்த்தவேண்டும்' என்ற பக்தியுணர்ச்சி கம்பனுள்ளத்தில் தோன்றுவதுண்டு. இத்தகைய இயற்கை அழகனை அல்லவோ ராமனையும் மனக் கண்ணில் கண்டு நமக்கும் காட்டுகிறான் கம்பன்?

சித்த அழகு

கம்பனுக்கு ராமனுடைய வில்லையும் வசீகர அழகையும் நினைப்பூட்டும் வானவில், சமயங்களெல்லாம்— ஏன், நாஸ்திகமும்கூட — வழிபட முயலும் பரம்பொருள் என்ற அழகனுக்கு எத்தகைய வசீகர நினைவுக்குறி!

வானவில் மட்டுமா? இயற்கையழகுகளெல்லாம் அந்தர்யாமிப் பொருளாகும் ஜகன் மோகன ஸௌந்தரியக் கடலின் திவலைகளும் குமிழிகளும் சிற்றலைகளும் தான். தெய்விக அழகு என்ற பாற்கடலின் பேரலைகள், கலா யோகிகளான மகா கவிகளின் ஆனந்தப் பகற்கனவுகளுக்கும், மகரிஷிகளின் தவக் கனவுகளுக்கும் பரமயோகிகளின் தியானக் கனவுகளுக்குமே இலக்காகும். பரம கவிகளின் வாயிலாக நாமும் தான் பேறு பெறுகின்றோம்.

பாகவத பாராயணம் செய்து செய்து அழகனைக் கண்ட கண்களும் முகமும் தெய்வ அழகு ஜொலிக்கப் பெற்றதுபோல், நாமும் அழகனை வழிபட்டு வழிபட்டு அழகு பெறவேண்டும்; உள்ளமும் வாழ்

வும் பண்பட்டு அழகு திகழ ஒழுக வேண்டும்.

சித்தம் அழகியார்
பாடாரோ நம்சிவனை ?

என்று பாடுகிறார் மாணிக்கவாசகர். சிவன் என்ற செம்பொருளைப் பாடச் சித்தமும் செம்மையுற்று அழகு பெறுகின்றதாம். சித்தம் அழகுபெறச் செயலும் அழகு பெறும்; வாழ்வும் அழகுபெறும்.

இதே கருத்தைப் பொய்கையாழ்வாரும் மயிலைப் பேயாழ்வாரும் வெளியிட்டிருக்கிறார்கள். 'மூப்பு, உன்னைச் சிந்திப்பார்க்கு இல்லை திருமாலே!' என்கிறார் பொய்கையார். அழகனாகிய பகவானை உளம் குளிரத் தியானித்து அருளுக்கும் அழகுக்கும் வாசகமான திருநாமத்தையும் வாய்குளிரச் சொல்லிக் கொண்டிருந்தால்,

தேசும் திறலும்
திருவும் உருவமும்
[தேசு—தேஜஸ்]

தாமே தேடிவந்து அடைகின்றன என்பர் பேயாழ்வார்,

பக்தியே அழகு

இந்த அன்பனைத்தான் திருமழிசையார்,

அன்பாவாய், ஆரமுதம்
ஆவாய் ; அடியேனுக்கு
இன்பாவாய்
[இன்பு—இன்பம்]

என்று பாடி, அன்புநெறியிலே தான் ஆழியானைக் காணமுடியும் என்கிறார். தொண்டரடிப் பொடியாரும் தம்மை மோகிப்பித்த 'அழகன் ஊர் அரங்கம்' என்று கண்டு, 'ஆவியே! அமுதே!, என்று கூவியழைத்துச் சரணாகதி பண்ணுகிறார். கானயோகியான் திருப்பாணரும் அணி அரங்கனை அமுதமாய்க் காண்கின்றார். பெரிய கோயிலை அழகு செய்த திருமங்கை மன்னரும் அழகனை 'உள்ளம்கொண்டகள்வ'னைக் காண்கிறார். குலசேகர மன்னரும் அழகன் சரிதையை அமுதமாய்ப் பருகுகின்றார். பெரியாழ்வாரோ,

குன்றாடு கொழுமுகில்போல்,
குவளைகள்போல் குரைகடல்
[போல்
நின்றாடு கணமயில்போல்

[கொழுமுகில்—நீரை முகந்த மேகம். குவளை—நீலமலர். குரை—கோஷிக்கும். கணம்—கூட்டம்.]

அழகனைக் கண்டுகொள்கிறார். நம்மாழ்வாரும் நீலமலர்களில் அழகனுருவம் காண்கின்றார்.

இந்த அழகனை அடைந்தது கோதையினுள்ளம், பள்ளமடை வெள்ளம்போல்.

எழிலுடைய அம்மனைமீர்!
என் அரங்கத்(து) இன்னமுதர்
குழலழகர், வாயழகர்
கண்ணழகர், கோப்பூழில்
எழுகமலப் பூஅழகர்

என்று பாடுகிறாள் கோதை. இந்த அழகனின் பக்தியே உள்ளத்திற்கும் வாழ்விற்கும் முகத்திற்கும் கூட உண்மையான அழகு தரும். பக்தி என்கிற உள்ளத்தினழகே உண்மையழகு—கருத்திற்கும், கண்ணுக்கும் கூட ஒருங்கே வசீகரமான அழகு.

ஸ்ரீமதி 'ஹரிணி'

பேசாத பேச்சு

இங்கு கூடியிருக்கும் பெரியோர்களுக்கும், சகோதரிகளுக்கும் என் தாழ்மையான வணக்கம்.

இதோ என் முன்னால் கூடியிருக்கும் இந்த மாபெரும் கூட்டத்தில், என்னை தைரியமாக பேசத்தூண்டிய சக்தி எது என்று நினைக்கிறீர்கள்? அதை நான் முதலில் பெருமையுடன் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதுதான் ஒரு அதிசய சக்தி. கற்பனா சக்தியும், அனுபவ சக்தியும் நிறைந்த நமது சகோதரி ஸ்ரீ. வை. மு. கோதைநாயகியம்மாள் அவர்களின் அத்புதசக்திதான் அது.

நான் சிறுமியாக இருக்கும் போது முதன் முதலில் இவருடைய இணையற்ற சிருஷ்டியான சண்பக விஜயம், என்ற நாவலைப் படித்

தேன். அப்பொழுதெல்லாம் எனக்கு நாவல் பைத்தியம் என்றுதான் பெயர். அதுவும் சண்பகவிஜயத்தைப் படித்தபிறகு இவருடைய ஒவ்வொரு நாவலையும், ஒரே மூச்சாகப் படித்து முடித்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பேன். நான் ஒருமுறைபடிப்பது, பிறகு என் பாட்டிக்கு வாசிப்பது, இப்படியாக அநேகமாக புத்தகம் எனக்கு மனப்பாடமாகிவிடும். அதுமுதல் என்னை "கோதைநாயகி பித்து" என்றுதான் வீட்டில் கூறுவது வழக்கம்.

அப்படி என் மனதைக் கவர்ந்து பைத்யமாக்கிவிட்டன இவருடைய கற்பனைச் சித்திரங்கள். இவருடைய நாவல்களிலிருந்து அழகான, எனக்கு ரொம்பவும் பிடித்த வாக்கியங்களையெல்லாம் குறிப்பு எழுதி வைத்துக்கொண்டு, என்னுடைய தோழிகளுக்கெல்லாம் வாசித்துக் காண்பித்து பெருமையும், இன்பமும் அடைவது வழக்கம்.

இப்படி நேரில் பழகாத ஒருவரை என் மனதுடன், என் இதயத்துடன் இணைத்து உறவாடச்செய்துவிட்டது இவருடைய அழகிய சிருஷ்டிகள்தான். இங்கே கூடியிருக்கும் உங்களில் பலர் அவருடன் பழகி, அவருடைய குணதிசயங்களை அறிந்து அனுபவித்திருக்கலாம். ஆனால், நான் அவருடன் நெருங்கிப் பழகவில்லை. ஆனாலும், என் மனதில் வெகுகாலமாகவே அவரைப்பற்றி சில திட்டமான எண்ணங்களும், அவருடைய உருவக் கற்பனையும் அழிக்கமுடியாத நிலையில் வேரூன்றிவிட்டது.

என்னுடைய சிறுவயதில் நான் 'பெண்களென்றால் இப்படி இருக்க வேண்டும், இந்தமாதிரி வேலைகளைச் செய்யவேண்டும், குடும்பம் இப்படி நடத்தவேண்டும்' என்றெல்லாம் கற்பனைசெய்து கோட்டை கட்டுவதுண்டு. அதுசமயம்தான் இவருடைய கதைகள் என் கண்முன் இவரை ஒரு லட்சியப் பெண்மணியாகவும், பக்தி உருவமாகவும், தீரமணியாகவும் கொண்டு, நிறுவின.

இவருடைய கதைகளின் மூலமாக நான் இவரை எப்படி என் மனத்திரையில் உருவம் தீட்டிப் பார்த்தேனோ அதைவிடப் பன்மடங்கு அதிகமான குணங்களுடன் இன்று இவரைப் பார்க்கிறேன். சில நாட்களுக்குமுன் நான் இவரை சந்திக்க நேர்ந்தபோது, இவருடன் பேசுவதைக்கூட மறந்து, என் மனப்படத்துடன் இவரை ஒத்திட்டுப் பார்ப்பதில் ஈடுபட்டுவிட்டேன்.

தமிழ்நாட்டின் பெண்மணி, பக்தியின் நிதி, லட்சுமீகரம் நிறைமுகமும், இனிய பேச்சும், கபடமற்ற பார்வையும் எல்லோரிடமும் அன்பும், அடக்கமும், சுறுசுறுப்பும் தைர்யமும் கலந்த உருவந்தான் நமது சகோதரி கோதையம்மாள்.

அவருடைய எழுத்து சக்தி, மக்களின் மனதில் சிந்தனா சக்தியைத் தூண்டி, புதிய உத்சாகத்தில் ஈடுபடச் செய்கிறது. மறுமலர்ச்சியின் முன்னணியில் நிற்கும் அவருடைய கற்பனைக் கதைகள், சமூக சீர்திருத்தத்தையே அடிப்படைக் கொள்கையாகக் கொண்டதாகத் தோன்றுகிறது. சிலசமயம் பக்திதான் அதன் மூலதத்துவம் என்றும், மறுசமயம் தேசத்தொண்டுதான் அதன் உயிர்நாடி என்றும், உடனே சத்யம், பொறுமை, அடக்கம் பரோபகாரம் இவைகள்தான் அதன் மூலப்பொருள் என்றும் நம்மை நினைக்கும்படிச் செய்கிறது. இப்படி நம்மிடையே ஒரு விசித்திரமான செப்பிடு வித்தையைக்காட்டி நம்மையெல்லாம் மயக்கி, நம்போன்ற மக்களின் மனதைப் பண்படுத்த அவர் செய்யும் முயற்சியை நினைத்தால், அது மனதிற்கும், சக்திக்கும் எட்டாத அதிசயமாகத்தான் தோன்றுகிறது. அவரது கதாபாத்திரங்கள் வெகு சீக்கிரத்தில் நம்முடன் உறவு பூண்டுவிடுகிறார்கள்.

அவருடைய சலியாத உழைப்பு, தைர்யம், நேர்மையான மனப்போக்கு, பக்தி இவைகளின் பலன்தான் ஜகன்மோகினி. இன்று நம்

மெதிரே வெற்றிவாகை சூடி, தலை நிமிர்ந்து நிற்கும் நம் ஜகன்மோகினியைக் காணும்போது நமக்கெல்லாம் எவ்வளவு பெருமை!

அன்று ஜகன் மோகனன் மோகினி உருவம் தாங்கி, அமுத கலசத்தைக் கையிலேந்தி, நல்லெண்ணம் நிறைந்த தேவர்களுக்கு, அமுதத்தைப் பகிர்ந்து அளித்து, அவர்களுக்குத் தைர்யத்தையும், சக்தியையும் கொடுத்தார். இன்று நமது மோகினி, கையில் அமுத கலசம் ஏந்தி நம்மிடையே உலவிவருகிறாள். அவள் தேவகுணமான நல்லெண்ணத்தையும், சத்யத்தையும், பரோபகாரத்தையும், பக்தியையும், நமக்கு ஊட்டி, நமக்கு சக்தியையும், திடமனதையும் அளித்து நம்மை தேவர்களாக ஆக்கிவிடுவாள்.

கலாரத்னம், கலாசேவகி, கதையரசி என்றெல்லாம் அழைத்து நாம் நமது ஆனந்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். ஆனாலும், ஸ்ரீ கோதைநாயகி அவர்கள் தமிழுக்கும், கலைக்கும், உலகமக்களுக்கும், —முக்கியமாக பெண்குலத்திற்கும்— செய்திருக்கும் அரிய சேவையை நினைக்கும்போது, நாம் அவருக்குச் செய்யும் மரியாதையும், பட்டம் அளிப்பதும் ஒரு சிறு திவலையாகத்தான் தோன்றுகிறது.

நான் அதிகம் பேசி உங்கள் காலத்தை வீணாக்கிவிட்டேன். ஆனால், பெண்குலத்தின் வெற்றியைக் கொண்டாட—புகழ மனம் மிக்க ஆவலடைகின்றது; நான் சொல்லுவானேன். இங்கு கூடியிருக்கும்கூட்டமே பெண்மையின் வெற்றியை நமக்குச் சுட்டிக்காட்டுகிறதே, "நம்மிடையே ஒளிந்திருக்கும், தூங்கிக்கொண்டிருக்கும் நல்லெண்ணத்தைத் தட்டி எழுப்பும் சக்தி எவரிடமிருக்கிறதோ அவர்தான் உண்மை கலைஞர்" என்கிறார் மகாத்மாகாந்தி. அதற்கு எடுத்துக்காட்டாக இருப்பவர்தான் நமது ஆசிரியை கோதைநாயகி அவர்கள்.

[சென்ற இதழில் வெள்ளிவிழா பிரசங்கங்களின் ஸாரச் சுருக்கங்கள் வெளிவந்தன. இது பேசாதபேச்சாகையால் முற்றுமே வெளியாகியுள்ளது! —வை. மு. ஸ்ரீ.]

ஸ்ரீ வசுமதி ராமஸ்வாமி

வனிதா மண்டலம்

மஞ்சள் குங்குமம்

'அடாடா! கலாவா! என்ன மிக மிக அபூர்வமாயிருக்கிறதே? உன்னை பார்த்து நான்கு யுகங்களும் முடிந்து விட்டது போல் தோன்றுகிறது' என்று இதய உணர்ச்சியுடன் சாவித்திரி தன் சிநேகிதியை வரவேற்றாள்.

"என்ன செய்வதுமாமி? 'மோகினி வெள்ளிவிழா'; முன்னால் விழா வருகிறது என்ற ஆவல், ஆனந்தம். முடிந்தபிறகு அந்த விழாவைப் பற்றிய பெருமை. இப்படியாக கலாவுக்கு நம்மையெல்லாம் மறந்துவிட்டது" என்று நிஷ்டூரமாய்ச் சொன்னாள் பர்வதம்.

"உன் அசட்டுப் புத்தி உன்னை விட்டுப் போகாது. எங்கெல்லாம் உயர்வைக் காண்கிறோமோ அதற்கெல்லாம் நாம் ஏற்றம் கொடுக்கத்தானே வேணும். நம்மால் ஒன்றும் கையாலாகாது; உயர்ந்த தொண்டை போற்றக்கூட வாய்க்கு வாதமா? நம்மினத்தாரை நாம் போற்றுவிட்டால் யார்தான் போற்றுவார்கள்? சகோதரிக்கு சகோதரி அன்பும், மரியாதையும் செய்தால் நாமும் மதிப்புக்குரியவர்களாகிறோமே. சுயநலமாகப் பார்த்தால்கூட நன்மைதானே."

"எந்த சின்ன விஷயம் பேசினாலும் கலாவுக்கு வழக்கம், உடனே மேடைப் பிரசங்கம் செய்கிறது, அல்லது ஹிதோபதேசம் செய்வது. சகஜமாய் கொட்டி அளந்து பேசாமல் என்னவோ உயர்வாம், மதிப்பாம்... கோடிவீட்டு கோமதி என்ன சொன்னாள் தெரியுமா?

ஜாதிக் கட்டுப்பாடு, வைஷ்ணவம் பரஸ்பர முகஸ்துதி, என்னமோ சொன்னாள்."...

"போருமே...நீ கொஞ்சம் புத்திசாலி என்று நினைத்தேன். உன்னையும் தூபம் போட்டிருக்கிறார்களா? ஹரியும், சிவனும் ஒன்று என்று அறியாதவன் மண்ணு, இது கூட தெரியாதா? மஹாலக்ஷ்மியை த்ரைலோக்ய குடும்பினீம் என்று ஸ்துதி செய்கிறோம்.

அதுபோல் பெரும்மனம் படைத்தவர்கள், பரந்த நோக்கமுடையவர்களுக்கு பேதம் உண்டா? நீயாக கற்பனை செய்து கொண்டு, பிறருடைய போதனை ஏற்று ஏதோ சொல்லுகிறாய். தொடர்ச்சியாக இடைவிடாமல் செய்யும் வேலைக்குத் தனிப்பட்ட மதிப்பு. அதிலும் ஒரு சமூகப் பணி, வருஷக்கணக்கில் செய்தால் அதற்கு ஏற்படும் உயர்வைச் சொல்லவேண்டாம். அதோடு அந்த திருப்பணியை 'நான்' என்ற மமகாரமின்றி தெய்வகிருபையை முன்னிட்டுச் செய்யும்பணி விசேஷ சோபிதத்துடன் தனக்கு தானாகவே ஓர் உன்னதஸ்தானத்தை அடைந்து விடுகிறது. அதை நாமும் புகழாமல் குற்றம் சொல்லி ஏசிப் பேசி பொழுதைக் கொலைசெய்யலாமா?

இல்லை கலா! கோமதி சொல்லும் பொழுது நானும் கூடத்தானிருந்தேன். அவள் சொல்வது சரிதான்: ஒரே வைஷ்ணவம் தான் என்று எனக்கும் மனதில் பட்டது. இப்பொழுது நீ சொல்லும் பொழுது என் நெஞ்சம் அதையும் ஸரி என்று சொல்லுகிறது.

நீ நிஷ் கபடி;.........யார் யார் என்ன கட்சி பேசினாலும் உனக்கு அது அந்த சமயத்தில் நூற்றுக்கு நூறு சரியாகப் பட்டுவிடும். எப்பொழுதுமே நமக்கிருக்கும் பகுத்தறிவு ஒன்று இருக்கிறதே அதை துருப்பிடிக்க விடக்கூடாது. அதை உபயோகப்படுத்தி மெருகு ஏற்றி வைக்கணும். அப்பொழுது தான் நன்மை தீமைகளை நமக்கு அறிவித்து நம் புத்தியை ராஜ பாட்டையில் ஓட்டும். பிறருடைய போதனைக்கு நம் புத்தியைக் கொடுத்து விட்டால் அதோகதிதான். உலகம் பலவிதம். நமக்கே சிலசமயத்தில் பளிச்சென்று தெளிவாகத் தோன்றுவதில்லை. முக்கிய லக்ஷ்யம், குறிக்கோள், உண்மை, அன்பு, நல்லெண்ணம் இந்த ஆபரணங்களை புத்திக்கு அணிவித்து செயல்களைச் செய்தாலும், வார்த்தைகளைப் பேசினாலும்எல்லாம்கல்லெழுத்துக்களாக மின்னும்.பிரகாசிக்கும். யார் எதை சொன்னாலும் காதைஇரவல் கொடுக்காதே. மகாத்மாஜி தன்னுடைய மேஜையின்மேல்மூன்றுகுரங்குகள் (பொம்மை) வைத்திருப்பாராம். ஒவ்வொன்றும் ஒரு புத்தியை நமக்குக் கற்பிக்கிறது. காதால் வம்பைக் கேட்காதே, வாயால் வம்பைப் பேசாதே, கண்ணால் வம்பைப் பார்க்காதே. இது நாமும் அறியவேண்டிய விஷயம்.

கலா, வம்புபேசுவது கோமதிக்கு அல்வா சாப்பிடுவதுபோல்! அதை யார் கேட்பார்களென்று பார்க்கவே அதற்கு நம்ம......

நன்றாயிருக்கிறது கலா! நாங்கள் ஒன்றும் வம்பர் மகாசபை அங்கத்தினரில்லை. அவள் சொன்னதைச் சொன்னேன். இதில் என்னதவறு?

அப்படியா சொன்னதை மட்டுமா சொன்னாய்? கூட உன் அபிப்ராயத்தைக் கலந்துவிட்டாயே.

பேசாமலிரு, பரிகசிக்காதே, மனதில் வைக்காமல் சொன்னது சரி. பர்வதம், நாம் துரியோதனன் கண்களைக் கொண்டு எதையும் பார்க்கக் கூடாது; தர்மபுத்திரர் கண்களோடு பார்க்கவேணும். காமாலைக்காரன் கண்களுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள். நான்தான் சொன்னேனே, மோகினி எல்லாருக்கும் அன்னை, அன்னைக்கு மக்களிடம் பாரபக்ஷம் உண்டா? ஒருதாய் தன் நான்கு குழந்தைகளை எப்படி பராமரிக்கிறாள். விச்சுக்கு பிடிக்குமேயென்று உருளைக்கிழங்கு கறி; சுமதிக்கு புட-

லங்காய் கூட்டு என்றால் இஷ்டம்; ராஜுவுக்கு கொத்தமலி துகையல் என்றால் உயிர்; கோபு மைசூர்ரஸம் செய்துவிட்டால் மாடுகள் மாதிரி கலக்கி கலக்கி உரிஞ்சிவிடுவான். ஆகவே, எல்லாவற்றையும் பெருமிதத்துடன் செய்துபரிமாறி அதோடு தன் அன்பையும் பரிமாறுகிறான். தாயன்புவற்றாதகிணறு, ஊறுகிறது. பாரபக்ஷம் எங்கேயென்று தேடிப் பிடிக்க முடியாது. இதற்கு ஒன்று உதாரணம் சொல்லுகிறேன்.

மோகினியை விநாயக சதுர்த்தியன்று ஆரம்பம்செய்தார்கள், இனி, பிறந்தநாளைக் கொண்டாட விநாயக சதுர்த்தியன்றேதான் வருஷ மலர் வெளியிடப்போகிறார்கள். நீசொல்லுகிற வீர வைஷ்ணவம் இருந்தால் விநாயக சதுர்த்திஅன்று மலர்வெளியிடுவார்களா? ந்ருஸிம்ம ஜயந்தியன்றல்லவோ வெளியிடணும்? இந்த ஒரு சித்தாந்தம் உனக்குத் தெரியவில்லையா? ஏதோ சொல்லிக் குழப்புகிறாயே? மகாத்மாஜிக்கு 'வைஷ்ணவ ஜனதோ' என்ற கீதம்தான் மிகவும் பிடித்தம். அதன் அர்த்த புஷ்டியில் அவர் லயித்தார். உண்மை வைஷ்ணவன் யார்? என்ற கேள்வியை எழுப்பி, பிறர் துன்பத்தைக் கண்டு சகியாதவன், எல்லோரிடமும் அன்பு செலுத்துபவன், என்ற பாவம் நிறைந்தது இந்த கீதம். இந்த பரந்த உலகில் நீ ஒருகோடு கிழித்துப் பேசுகிறாயே. இப்பொழுதாவது உன் பிரமை நீக்கிற்றா?

அப்படியா கலா? ஆச்சர்யமாக இருக்கிறதே! விநாயக சதுர்த்தி அன்றா மலர் வரப்போகிறது. சொல்லைவிட செயலில் காட்டும் ஆற்றல் மோகினிக்கு இருக்கிறதே! நான் போய் கோமதியிடம் இதைச் சொல்லிவிட்டு வருகிறேன்.

இரு, இரு, பர்வதம்! மஞ்சள்-குங்குமம் பெற்றுக்கொண்டுபோ, இன்று வெள்ளிக்கிழமை அல்லவா? கோமதியிடம் சொல்ல அவசரமா என்றாள் சாவித்திரிஅம்மாள்.

“நாங்களோ வெண்கலக் கடையில் யானைபுகுந்த மாதிரி பேசுகிறோம். நீங்கள் வாயை திறக்கவில்லையே.”

உங்கள் பேச்சுக்களை ரஸித்துக் கொண்டிருந்தேன். வெள்ளிக்கிழமை எப்பொழுது வரும் என்று எனக்கு ஆவல். நீங்களெல்லோரும் கலகலவென்று பேசுவது எனக்கு பொழுதுபோனது தெரியவில்லை. தாம்பூலம் பெற்றுக்கொண்டு போங்கள்.

சாவித்திரி மாமி! போங்களென்று சொல்லக்கூடாது. போகிறவர்களை போய் வாருங்கள் என்று சொல்லவேணும். விடை பெற்றுக்கொள்பவர்களும் போய்வருகிறேனென்று சொல்லவேணும். அதை விட என் தகப்பனார் யாரிடமாவது விடை பெற்றுக் கொண்டு வந்தால் வரட்டுமா என்று இனிமையாக சொல்வார். அது ஒரு அழகு, மரியாதை.

என்ன கலா எதை எடுத்தாலும் பிரசங்கத்திற்குப் போய்விடுகிறாயே, வா செல்வோம்; மாமா வரும் வேளை, மாமிக்கு வேலை இருக்கும்.

வை. மு. ஸ்ரீ. நவீனங்கள்.

S. 1. உதய சூரியன் 1—4
S. 2. மதமா, மனமா? 1—4
S. 3. அவசரமூர்த்தியின் அபூர்வ டயரி 1—8
S. 4. ராணி சீலாவதி 1—0

வை. மு. பத்மினி

P.1. ஸ்ரீகிருஷ்ணார்ப்பணம் 1—4

தாரண நந்தவனம்
(700 பக்கங்கள் 100 படங்களுடன்)
100 சகோதரிகள் சிருஷ்டித்த
ருதுமலர் மாலை ரூ. 9.

ப்ர. ப. அண்ணங்கராசாரியர்
ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம்
உரையுடன் ரூ. 1.

கம்ப ராமாயணம்
ஜனவரி தொடர்ச்சி.

ஸ்ரீ. ப்ர. ப. அண்ணங்கராசாரியர்.

மிதிலா ப்ராப்தி

முனிவர் தமது வேள்வியை முடித்துக்கொண்ட பிறகு ஸ்ரீராமலக்ஷ்மணர்களுடன் மிதிலாபுரிக்குப் புறப்பட்டுச் சோணையாற்றருகே வந்து சேர்ந்தவளவில் இரவி மறைந்தனன். அப்போது மூவரும் ஒரு சோலையில் தங்கியிருக்கையில், அந்தச் சோலையைப் பற்றி இராமன் வினவ, முனிவர் கூறத் தொடங்கினர்:—இராமா! காசியபருடைய மனைவியருள் திதியென்பாள் தனது புதல்வரான அசுரர்கள் அமரர்களின் சூழ்ச்சியினால் மாண்டுபோன துக்கம் பொறுக்கமாட்டாமல், இந்திரனைக் கொல்லவல்லவனும் மூவுலகங்களையும் ஆளத் தக்கவனுமான ஒரு புத்திரனைப் பெறுதற்குப் பலநாள் தவம்புரிந்த இடம் இது. அசுரர்கள் மாண்ட வரலாறும் சொல்லுகேன் கேளாய்; முன்பொருகால் ஒரு வித்யாதர மகள் இவ்வண்டகோளத்திற்கு அப்பாலுள்ள பரமபதத்திற் சென்று திருமாமகளைப் புகழ்ந்து போற்ற, அவள் மனமுவந்து தனது பூமாலையொன்றைப் பரிசாகக் கொடுத்தனள்; அப்பெண் அதனைப் பெற்றுக்கொண்டு பிரமலோகத்திற்குத் திரும்பிவந்தவளவில் துர்வாஸ முனிவரால் வணங்கித் துதிக்கப்பெற்று அப்பூமாலையை அம் முனிவனுக்கு அன்போடு அளித்தனள். அம்மாலையைப் பெற்று மகிழ்ந்து அம்முனிவன் தேவலோகத்தைச் சேர்ந்து அங்குத் தேவேந்திரன் ஐராவத யானையின் மீதேறிப் பவனிவருஞ் சிறப்புகண்டு ஆச்சரியப்பட்டுத் தன்னிடமிருந்த அந்த மாலையை இந்திரனுக்குத் தந்தருளினன். அதை மாவட்டியினால் வாங்கிக்கொண்ட இந்திரன் யானையின் தலைமீது வைத்திட, யானை துதிக்கையால் அதையெடுத்துத் துகைத்தது. அதைக் கட்கூடாகக் கண்ட அம்முனிவன் மிகச் சினந்து 'அடா இந்திரா! யான் முற்பிறப்பின் நல்வினைப்பயனாகப் பெற்றதும் திருமாமகளின் மஹாப்ரஸாதமுமான மலர்மாலையை அன்போடு நான் உனக்களிக்க, நீ அதனைச் செல்வச் செருக்கினால் அலக்ஷியஞ்செய்து மதயானையின் கைப்பட்டுத் தொலையுமாறு செய்தாயாதலின் இவ்வபசாரத்தின் பயனாக உனது செல்வங்கள் யாவும் கடலில் புகுந்து மறைய, நீ பெருமையிழந்து துன்பமடைவாயாக' என்று சபித்தனன். அந்தச் சாபத்தின்படியே தேவலோகத்துப் பொருள்கள் யாவும் கடலிற்புக்கு மறைந்தன. இங்ஙனம் இந்திரனுக்கு நேர்ந்த வறுமை அவனது ஆட்சிக்குஉட்பட்ட உலகமனைத்தையும் வருத்தத் தொடங்கவே, அக்கொடுமையைப் பொறுக்க முடியாமல் தேவர்கள் யாவரும் சிவனோடும் பிரமனோடுங் கூடித் திருமாலைச் சரணமடைந்து, நிகழ்ந்த சாபச் செய்தியைத் தெரிவித்து அபயம் வேண்ட, அருட்கடலான அப்பெருமான் அங்ஙனமே அபயமளித்து, இழந்த செல்வங்களை மீண்டும் பெறும்பொருட்டுப் பாற்கடலைக் கடையுமாறு அத்தேவர்கட்குக் கட்டளையிட்டு, தானும் துணைபுரியவருவதாகத் திருவருள் புரிய, அது கேட்ட தேவர்கள் தங்கள் வறுமைத் துன்பம் தீர்ந்ததாகவே துணிவுகொண்டு அப்பெருமானை வாழ்த்தி மகிழ்ந்தனர்.

திருமாலின் கட்டளைப்படியே தேவர்கள் அசுரரையும் துணைகொண்டு வாசுகியென்னும் நாகத்தின் வாய்ப்புறத்தில் அசுரர்களும் வாற்புறத்தில் தாமுமாகவிருந்து பாற்கடலை மிகக் குழம்புமாறு கடைகையில், கீழிருந்து பூமியைத்தாங்குகின்ற ஆதிசேஷனும் ஒருங்கே பலரும் திரண்டதனாலுண்டான பாரத்தைத் தாங்கமுடியாமல் வருந்தி உடல்நெளித்தனன். அப்போது திருமால் தனது முதுகின் மேலே மந்தரமலை சுழலும்படி கூர்மாவதாரமாகியும், அம்மலையை மேலே அழுத்தும்படி தனது, ஆயிரம் திருக்

கைகளை வியாபரிக்கச்செய்தும் கடைகைக்கு வேண்டிய காரியங்களைச் செய்தருளினன். அங்ஙனம் கடைகையில், முன்பு முனிவனது சாபத்தால் கடலில் ஒளிந்திருந்த தேவலோகத்துப் பொருள்கள் யாவும் மீண்டும் தோன்றுகையில் அவற்றுளொன்றான அம்ருதம்தோன்ற, அது காரணமாகத் தேவர்கட்கும் அசுரர்கட்கும் கலஹமுண்டாக, திருமால் மோகினி வடிவமெடுத்து அசுரர்களை வஞ்சனையால் மோஹிப்பித்து ஒடுங்கச்செய்து தேவர்கட்கே அவ்வமுதத்தைக் கொடுத்தருளினன். மற்றும் தோன்றிய ஹாலாஹலம், பிறைச்சந்திரன், கற்பகவிருக்ஷம், புஷ்பகம் முதலியவற்றைச் சிவபிரான் முதலானோர்க்குப் பங்கிட்டளித்து ஸ்ரீ மஹாலக்ஷ்மியையும் கௌஸ்துபமணியையும் தானே கைக்கொண்டனன்.

அமிருதம் காரணமாகத் தேவாசுரர்களுக்குள் நிகழ்ந்தபோரில் தேவர்கள் திருமாலுதவியினால் அசுரர்களைக்கொன்று அமிருதத்தைப் பெற்றும் இழந்த சுவர்க்கத்தை மீண்டுமடைந்தும் இனிதிருந்தனராக, திதியானவள் தன் மைந்தர்கள் தேவர்களாலிறந்தமையறிந்து பெருந்துயரமடைந்து தன் கணவனான காசியபமுனியைக்கிட்டி 'உமது புத்திரர்களான தேவர்களால் என் புதல்வர் மாண்டனராதலால் தேவேந்திரனைக்கொன்று மூவுலகங்களையும் ஆளவல்ல ஒரு புதல்வனைப் பெற விரும்புகின்றேன்; என் கருத்து நிறைவேற அருள்புரிந்து அதற்குரிய தவஞ்செய்யும்படி அநுமதியும் தருக' என்று வேண்டி அங்ஙனமே அருள்பெற்று அருந்தவம் புரிந்தனள். இச்செய்தியைக் கேள்வியுற்ற இந்திரன் தந்திரமாக அவளுக்கு அடிமைத்தொழில் செய்யும் வேலையிலே அமர்ந்து, அவள்செய்துவரும் பெருந்தவத்திலே ஒரு சோர்வையறிந்து, அப்போதுதான் நுட்பமான வுருக்கொண்டு அவளது வயிற்றினுள்ளே சென்று அங்குத்தங்கிய கருவைப் பிளந்து ஏழு துண்டாக்கினவளவில், அவள் அழுது 'என் புத்திரர்களான இவ்வெழுவரும் ஸப்த மருத்துக்களென்று பேர்பெற்று எங்குமுலாவிக்கொண்டிருக்கவேண்டும்' என்று வேண்ட, தேவேந்திரன் அவ்வேண்டுகோளுக்கிணங்கி அவ்வேழு துண்டங்கட்கும் பெயர் தந்து எங்கும் ஸஞ்சரிக்க விடுத்தனன். இவ்வரலாறு நிகழ்ந்தவிடம் இராமா! இதுதான்—என்று விசுவாமித்திரர் இராமனுக்குக் காட்டி, பிறகு மற்றோரிடமாகிய சரவணத்தைக் காட்டி, இது சிவபிரானுக்கு உமாதேவியின் மூலமாகப் பிறந்த ஆறுமுகக் கடவுள் வளர்ந்த நாணற்காடுகாண் என்று தெரிவித்தனர்.

பிறகு சூரியோதயமாகி மூவரும் புறப்பட்டுச்சென்று கங்கா நதியைக் கண்டனர். அப்போது அம்மகாநதியின் வரலாற்றைக் கேட்க விரும்பிய இராமனுக்கு முனிவர் அவ்வரலாற்றினை விரித்துரைக்கத் தொடங்கினர். "இராமா! நீ பிறந்த ஸூரியவம்சத்தில் தோன்றி, அயோத்திமாநகரை அரசாண்டுவந்த ஸகரனென்னும் சக்ரவர்த்திக்கு வைதர்ப்பியென்றும் சுமதியென்றும் மனைவியர் இருவரிருந்தனர். அவர்களுள் மூத்தவளான வைதர்ப்பிக்கு [— கேசினிக்கு] அஸமஞ்ஜனென்னும் புத்திரன் தோன்றினன். அவனது புத்திரன் அம்சுமானென்பவன். இளையவளான சுமதியின் குமாரர்கள் அறுபதினாயிரவர். அந்தச் சகரமன்னவன் ஒருகால் அசுவமேதயாகஞ் செய்யத்தொடங்கிய வளவில் அதனையறிந்த அமரர்கள் கோபங்கொண்டு இந்திரனுக்குச் செய்தியறிவிக்க, அவன் அவ்வேள்வியின் குதிரையை மாயையினாற் கவர்ந்து பாதாளலோகத்திற் கபில முனிவனது பின்புறத்தில் கொண்டுபோய்க் கட்டிவைத்தான். அக்குதிரையின் பின்னே காவலனாகச்சென்ற அம்சுமான் இம் மாயையை யுணராது கலங்கி நிலவுலகம் முழுதுஞ்சென்று தேடிப்பார்த்தும் எங்குங் காணாமல் தந்தையிடம் திரும்பிவந்து செய்தி கூறினன். அதுகேட்ட சகரனும் தனது குமாரர் அறுபதினாயிரவரையும் நோக்கி நியமிக்க, அவர்கள் கடுஞ்சினங்கொண்டு

புறப்பட்டுப் பூமிமுழுதுந் தேடிப் பார்த்தும் குதிரை யகப்படாமையால்
பாதாளலோகத்திலும் தேடுமாறு தோண்டிக்கொண்டே பாதாளஞ்சென்று
கபில முனிவன் பின்னே குதிரையிருக்கக் கண்டு இவனே குதிரையைக்
கவர்ந்த கள்வனென்று கருதி அவனைத் துன்புறுத்தினர். அக் கபிலனது
சினத்தால் சாகரர்கள் அறுபதினாயிரம்பேரும் சாம்பராகியொழிய, அச்
செய்தியைத் தூதர்களாலறிந்த சகர மன்னவன் பெருந்துயரடைந்து, பேர
னாகிய அம்சுமானை விளித்துத் தன் துயர மிகுதியைத் தெரிவித்து வருந்த,
அம்சுமான் உடனே வேள்விக் குதிரையைக் கொண்டுவருவதாகச் சொல்
லிப் புறப்பட்டுக் கபில முனிவனிடஞ்சென்று சிறுதாதையரின் கதியை
யுணர்ந்து வருந்தி ஒருவாறு தேறி முனிவனை வணங்கிக் குதிரையைப்
பெற்றுக்கொண்டு திரும்பி வந்தனன். பிறகு சகரமன்னவன் வேள்வியை
முடித்திட்டு அவ்வம்சுமானுக்கு அரசுரிமையைக்கொடுத்துக் காலகதி
யடைந்தனன். பிறகு அவ்வம்சுமானுக்குப் பேரனாகத்தோன்றிய பகீரதன்
தன் குல குருவாகிய வஸிஷ்ட முனிவரிடத்தில் தன் முன்னோர்களின் வர
லாறு கேட்டுவருகையில், தனது மூதாதையர்கள் அறுபதினாயிரவரும்
பாதாளலோகத்தில் சாம்பலாகி யொழிந்தனரென்று கேட்டுவருந்தி அவர்
களுக்கு நற்கதியுண்டாகும் வழி ஏதேனுமுண்டோ வென்று வினவ, அதற்கு
அவர் 'பிரமனை நோக்கி நீ தவஞ்செய்தாயானால் உனது மூதாதையர் நற்
கதி நண்ண நல்வழியுண்டாம்' என்று உபாயமுரைக்க, அப்போதே பகீர
தன் இமயமலையிற் சென்றுசேர்ந்து நெடுங்காலம் அருந்தவம் புரிய, பிரம
தேவன் ப்ரஸன்னனாகிக் காட்சிதந்து 'கபில முனிவனது கோபத்தினால்
அநியாய மரணமடைந்த நின் மூதாதையர் நரகம் நீங்கி ஈடேறுதற்குரிய
உபாயம் ஆகாய கங்கையின் நீரிலே அவர்களெலும்பு படிதலேயாம்'
என்று கூறி, ஆகாய கங்கை நேரே பூமியில் விழுந்தால் அதன் வேகத்
தைப் பூமி தாங்கமாட்டாளாகையாலும், அதனைத் தாங்குமாற்றல் சிவபிரா
னொருவனுக்கே யுள்ளதாதலாலும் கங்கையைத் தாங்குமாறு நோற்றுச்
சிவபிரானிடம் முதலில் வரம் பெறுவாயாக' என்றுமுரைத்து மறைந்தனன்.

இராமா! பிரமனது அக்கட்டளையின்படியே பகீரதன் சிவபிரானை
நோக்கி நெடுங்காலம் தவமியற்ற, அப்பால் சிவபெருமான் காட்சி தந்து
கங்கையைத் தான் நேரே பூமியில் விழாது தாங்குவதாக வரமளித்துச்
செல்ல, பின்பு அப் பகீரதன் கங்காதேவியை நோக்கி 'நீ பூமியில் வரும்படி
இசைவாயாக' என்று தவம் புரிந்தனன். பிறகு கங்காதேவி பிரத்யட்ச
மாகி 'என் வேகத்தைச் சிவபிரானும் தாங்கவல்லவனல்லனாதலால் அவன்
என்னைத் தாங்குவதாகச் சொன்ன சொல் விளையாட்டு வார்த்தையேயாம்;
அவனது கருத்தை நன்கறிய மீண்டும் அவனை நோக்கி நீ தவம்புரிவாயாக'
என்று செருக்குடன் சொல்லி மறைந்தாள். அப்படியே பகீரதன் மீண்
டும் சிவபிரானை நோக்கித் தவம்புரிய, அப்பிரான் காட்சிதந்து 'மன்ன
வனே! நீ சிறிதும் அஞ்சாதே; கங்கை நீர் ஒரு துளியும் சிந்தாதபடி
நான் நன்கு தாங்கிக் காப்பேன்' என்று அபயமளித்துச் சொல்ல, மீண்டும்
கங்கையை நோக்கித் தவமியற்றினன் பகீரதன். அதனால் ப்ரஸன்னையான
கங்காதேவி விண்ணுலகங்களும் நடுங்கும்படி ஆரவாரித்துக்கொண்டு நில
வுலகில் வந்து சேர்ந்தாள். அக் கங்கை நீர் சிறிதும் வெளிச் சிந்தாதபடி
முழுவதையும் பரமசிவன் தனது சடையில் தாங்கி மறைத்தனன். அப்
போது பகீரதன் அந்நிலையைக் காணாமல் திகைத்து வருந்தி நின்று சிவபி
ரானை வணங்கி வேண்ட, அவன் தனது சடையினின்று கங்கையின் மிகச்
சிறியதொரு பாகத்தை வெளிவிட, அப்போது கங்கை தரையிலே வந்தி
றங்கி, சகரபுத்திரர்களை நற்கதி பெறுவிக்கப் பகீரதனது பின்னாகவே
விரைந்து சென்று வழியில் ஜஹ்நுமுனிவனது வேள்வியையழிக்கப்புக,

என் சுய சரிதை

சகோதரி R. S. சுபலக்ஷ்மி அம்மாள்

(சென்ற இதழ் தொடர்ச்சி.)

கயா க்ஷேத்ரம்

3 நாட்களுக்குப் பிறகு கயைக்குப் போனோம். அங்கு ஒரு பணக்கார கயாவாளிக்கு எழுதியிருந்தபடி எங்களுக்கு ஒரு வீட்டு மேன்மாடியில் தங்க இடம் ஏற்படுத்தியிருந்தார். அங்கு ஒரே நாள்தான் தங்கினோம். கயாவாளிகள் என்பவர்கள் பிரம்ம புத்திரர்கள். உலகத்தில் பிறந்துள்ள பாபிகளாகிய நம்மையும் நம்முடைய பிதுர்க்களேயும் கரையேற்றுவதற்காகவே அவர்கள் உலகத்தில் அவதரித்திருக்கின்றார்கள். அவர்களுக்கு வேறு ஜன்மமே கிடையாது. மீன் மாத்திரம் சாப்பிடுவார்கள். அது நீர் வாழைக்காயாம். நம் தென் நாட்டிலிருந்து அங்கு போகின்றவர்களுக்கு அவர்கள் பாஷை தெரியாதல்லவா? அதற்கு நம் தென்தேசத்து வைதிக பிராம்மணர்கள் அனேகர் அங்கு குடியேறி துவி பாஷிகளாக இருந்து கொண்டு கயாவாளிகளிடம் மாதச்சம்பளம் பெற்றுக்கொண்டு ஜீவிக்கின்றனர். அதில் ஒருவர் எங்களே வந்து பார்த்து மறுநாள் தகப்பனர் செய்யவேண்டிய சிரார்த்தத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளேக் கேட்டுக் கொண்டுபோனர். சமையலுக்கும் அவரே ஏற்பாடு செய்துவிட்டதால் நாங்கள் அதிகாலேயில் கங்கையில் ஸ்நானம் செய்துவிட்டு அங்கு தர்ப்பணைப் பிண்டம் கொடுத்துவிட்டு வடவிருக்ஷம் பார்க்கப்போனோம்.

அங்கு அநேகம் ஆண்களும் பெண்களும் விருக்ஷத்தைச்சுற்றிக் கட்டப்பட்டுள்ள பெரிய விஸ்தாரமான மேடையில் ஒவ்வொருவரும் எதிரில் ஒரு பெரிய வாழையிலேயை வைத்து பக்கத்தில் ஒரு பாத்திரத்தில் வடித்த

அம் முனிவன் வெகுண்டு அக்கங்கையைப் பருகிவிட, பகிரதன் அம்முனிவனேப்பணிந்து குறையிரந்து நிற்க, முனிவன் இரக்கங்கொண்டு தன் காதின் வழியாகக் கங்கையை வெளிட, பிறகு புறப்பட்ட கங்கை சாகரர் நற்கதியடையுமாறு அவர்களது உடல்கள் சாம்பராய்க்கிடந்த இடத்தின் மீது சென்றனள். அதனுல் சாகரர் நற்கதியடைந்ததுகண்டு தேவர்கள் மலர்மாரி பொழிய, பகிரதன் அயோத்திக்குத் திரும்பிவந்தனன், இராமா! திருமால் உலகமளந்த காலத்தில் மேலே ஸத்யலோகத்திலே சென்ற அப்பெருமானது திருவடியைப் பிரமன் தன்கைக் கமண்டல தீர்த்தத்தினுற் கழுவி விளக்க, அந்த ஸ்ரீ பாததீர்த்தமே பகிரனது பெருமுயற்சியினுல் சிவபிரானது சடைவழியாகப் பூலோகம் வந்துசேர்ந்ததென்று கங்கையின் வரலாறு அறிவாயாக. இக் கங்கையானது பகிரதனது தவத்தின் பயனுகத் தோன்றியதுபற்றிப் பாகிரதியென்றும், ஜஹ்நு மஹர்ஷியின் செவி வழியாக வெளிப்புறப்பட்டது பற்றி ஜாஹ்நவியென்றும் பெயர்பெற்றது என்றுமுணர்வாயாக" என்று விச்வாமித்ரர் கங்கையைப்பற்றின கதையைக் கூறி முடித்தனர். தாசரதிகளும் கேட்டு மகிழ்ந்து கங்கையை வணங்கி, அங்கு நின்றும் புறப்பட்டுப்போய், விசாலா நகரத்தில் வாழ்கின்ற அரசன் எதிர்கொண்டுவந்து உபசரிக்கப்பெற்று மிதிலா நகரமுடைய விதேக நாட்டை யடைந்தனர்.

அன்னம், எள், பஞ்சபாத்திரம் உத்திரணி ஸஹிதம் உட்கார்ந்திருந்தனர். 2, 3 பேருக்கு ஒரு வைதிகர். மந்திரம் சொல்லி பிண்டம் எடுத்துவைக்கச் சொல்கின்றார். கிட்டின பந்துக்கள், உறவினர், சிநேகிதர் ஒவ்வொருவராய் இறந்துபோனவர்களை ஞாபகப்படுத்திக்கொண்டு அன்னத்திலிருந்து ஒவ்வொரு பிடி பிண்டம் ஒவ்வொருவருக்கும் இலையில் வரிசையாக வைத்து எள்ளும் தண்ணீரும் அவற்றின்மேல் போடவேண்டியது—"உம், இன்னும் யார், நினைத்துப்பார், ஞாபகப்படுத்திக்கொள்" என்று வைதிகர் துரிதப்படுத்த ஒவ்வொருவரும் இறந்துபோன மாமா, பாட்டி, அத்தை, குழந்தை இத்தியாதி ஞாபகப்படுத்திக்கொண்டு பிண்டம் வைக்கவேண்டியது. சிலர் ஆத்ம சிரார்த்தமும் செய்துகொண்டுவிடுவார்கள், பிள்ளைகள் மேல் நம்பிக்கை யில்லாதவர்கள் !! அவர்களுக்கு இறந்தபிறகு யாருமே சிரார்த்தம் செய்யவேண்டிய அவசியம் கிடையாது. கயைக்குப் போகின்றவர்கள் குறைந்தது 3 நாட்களாவது அங்கு தங்கவேண்டும். கங்கைக்கரை, கோவிலில் விஷ்ணுபாதம், வடவிருக்ஷம் இந்த 3 இடங்களிலும் 3 நாளும் பிண்டம்வைத்து சிரார்த்தம் செய்யவேண்டும். வைதிகமானவர்கள் 15 நாளிருக்கலாம். கடைசியில் கயாவாளி ஒருவர் வாயினால் "ஸுபஸ்வீகாணம்" சொல்லவேண்டும்.

நாங்கள் வடவிருக்ஷம் பார்க்கப்போன சமயம் ஒரு தென்தேசத்து ஏழை பிராம்மணர் ஸுபஸ்வீகரணத்துக்குக் காத்திருந்தார். ஒரு கயாவாளி வாலிபன் 17, 18 வயது இருக்கலாம், ஆடம்பரமான சரிகைகிஜார், சட்டை, குல்லாயுடன் அழகிய பல்லக்கில் வந்திறங்கியவுடன் துவிபாஷி ஒருவர் அந்த ஏழை பிராம்மணரிடத்தில் பண ஒப்பந்தம் பேசினார். அவருக்கு எத்தனை நிலம் வீடு ஆஸ்தி யிருக்கிறது, ஸுபஸ்வீகரணத்துக்கு எத்தனை கொடுக்கமுடியும் என்று பேரம். கடைசியில் அவர் தான் மிகுந்த ஏழையென்றும் ஊருக்குத் திரும்பிப்போய்ச் சேர்வதற்குத்தான் பணம் மீதியிருக்கிறதென்றும் சொல்லிக் கெஞ்சிக்கேட்டுக்கொண்டான். 25 ரூபாய் அவர் கொடுக்கவேண்டியதென்று தீர்மானிக்கப்பட்டது. அதுவரைக்கும் அசிரத்தையாக எங்கேயோ பார்த்துக்கொண்டிருந்த கயாவாளி தொகை தீர்மானமானவுடன் ஒரு வாடிய மாலையை புன்சிரிப்புடன் கிழவர் கழுத்தில் போட்டு, முதுகைத் தட்டிக்கொடுத்து அவர் பிதுர்க்கள் யாவரும் கரையேறிவிட்டார்கள் என்னும் சுபவார்த்தையைச் சொன்னவுடன் கிழவருக்கு சந்தோஷம். அந்த கயாவாளி உடனே பல்லக்கில் ஏறிக்கொண்டு திரும்பிப்போனான். அதேவாலிபன் நாங்கள் திரும்பிச்சென்று சிரார்த்தம் செய்து விஷ்ணுபாதத்தில் பிண்டம்வைத்துவிட்டு வந்தபிறகு பிராம்மணார்த்தம் சாப்பிடவந்தான். அவன் ஆடம்பரமான உடையுடனேயே இலைக்கு முன் உட்கார்ந்து ஒருசிறிது பருப்பு நெய் கலந்த அன்னமும் சிறிதளவு தயிரன்னமும் ருசிபார்த்துவிட்டு எழுந்துபோய்விட்டான். கயாவாளி ஒருவனே அநேகர் செய்யும் சிரார்த்தங்களுக்குச்சென்று சிறிது சிறிது ருசிபார்த்துவிட்டுப் போவது வழக்கமாம். நிற்க,

அவனுடைய தகப்பனார் ஒரு கொழுத்த பணக்காரர். அவர் அன்று பிற்பகல் என் தகப்பனாருக்கு வண்டியனுப்பித் தன் வீட்டுக்கு அழைத்து அவருக்குத் தானாகவே ஸுபஸ்விகரணம் சொல்லி வாழ்த்தி ஒரு வெள்ளி விஷ்ணுபாதமும் அக்ஷதையும் கொடுத்து என் தகப்பனாருக்கு வேண்டியவர்கள் யார் காசியாத்திரை வந்தாலும் தன்னிடம் வரும்படி சிபார்சுசெய்யும்படிக் கேட்டுக்கொண்டு அன்று இரவு ஸ்டேஷனுக்கு அவருடைய வண்டியையும் அனுப்பிவைத்தார்.

ஊர் அசுத்தமான ஊர். சாக்கடை ஜலம் அங்கங்கு தேக்கம். கொசு அதிகம். குறுகிய சந்துக்கள், காற்றோட்டமில்லாத வீடுகள். இணைத்த

2 குதிரைகள் கட்டிய கோச்சுவண்டிகள். நாங்கள் நதிக்குச்சென்று வரும் வழியில் உடம்பெல்லாம் சுருக்கி ஒடுங்கிப்போய், உடம்பில் வஸ்திரமே யின்றி நடுத்தெருவில் உடம்பெல்லாம் ஈமொய்த்துக்கொண்டு அதை ஓட்டவும் சக்தியின்றி பட்டினியினால் செத்துப்போய்க்கொண்டிருக்கும் ஒரு கிழப் பிச்சைக்காரி ஒருக்களித்துப் படுத்திருந்த கண்ராவியான காட்சி சகிக்கமுடியாமலிருந்தது. "புண்ணியம் சம்பாதிக்க வரும் நூற்றுக்கணக்கானவர்கள் தங்கள் காரியத்தைப் பார்த்துக்கொண்டு ஒதுங்கிப்போகின்றார்கள். ஊராரும், முனிஸிபாலிடியாரும் இந்த ஏழைக்கு எதுவும் செய்வதாகத் தோன்றவில்லை. புண்ணிய க்ஷேத்திரங்களில்தான் ஏழைகளின் பரிதாபத்தை நன்கு காணலாம். "ஊசலாடிக்கொண்டிருந்த அவள் உயிரை கூடிய சீக்கிரத்தில் உன் பாதாரவிந்தத்தில் சேர்த்துக்கொள் என் அப்பனே" என்று வேண்டிக்கொண்டேன்.

அன்று இரவு புறப்பட்டு கல்கத்தா சென்று உடனே அங்கிருந்து சென்னைக்குப் புறப்பட்டோம். மறுநாள் சுமார் 8 மணிக்கு சென்னை சேரவேண்டிய ரயில் அதிகாலை சுமார் 4 மணிக்கே ரயில் தண்டவாளத்திலிருந்து சற்று நழுவி ஒரு சிறு ஸ்டேஷனில் நின்றுவிட்டது. நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்த நான் 5 மணிக்குக் கண்விழித்து விஷயம் தெரிந்துகொண்டேன். ரயில் நின்ற விஷயம் தெரிந்து அக்கம் பக்கங்களிலுள்ள கிராமங்களிலிருந்து நல்ல தயிர் பால் வேண்டியது விலைக்கு ஸ்டேஷனுக்கு வந்துவிட்டது. கீழே யிறங்கி கிணற்று ஜலம் மொண்டு, நாங்கள் கொண்டு வந்திருந்த காபிப்பொடி சக்கரையைக்கொண்டு காபி தயாரித்து சாப்பிட்டோம். அதே ரயிலில் பிரயாணம் செய்துகொண்டிருந்த திவான்பகதூர் டி. ரங்காசாரியார் முதலான இரண்டு மூன்று சிநேகிதர்களும் காபிக்கு பங்குக்கு வந்தனர். பிறகு நாங்கள் கொண்டுவந்திருந்த அவலை ஊறவைத்து தயிரில் கலந்து அதை சுமார் 10 மணிக்கு சாப்பிட்டோம். என் தாயார் எங்கு பிரயாணம் புறப்பட்டாலும் கையுடன் காவலாக கொஞ்சம் அவல் எடுத்து வைத்துக்கொள்வார். பிற்பகல் வெள்ளரிக்காய், பழங்கள் சாப்பிட்டோம். சாயங்காலம் திரும்ப ரயில் புறப்பட்டு இரவு சுமார் 8 மணிக்கு சென்னை வந்து வீடுசேர்ந்தோம். தீர்த்த ஸ்நானம், மூர்த்தி தரிசனத்துக்காகவே முக்கியமாக யாத்திரை செய்த இந்த முதல் வடக்கிந்தியப் பிரயாணம் நான் எதிர்பார்த்த அத்தனை சந்தோஷத்தைக் கொடுக்கவில்லை—வட இந்தியக்கோவில்கள், அரைநதி கோடைகாலத்தில் ஓடிக்கொண்டிருந்த நதிகள், வடஇந்திய ஜனங்கள், அவர்களது நடை உடை பாவனைகள், பழக்கவழக்கங்கள் எல்லாம் நான் எதிர்பார்த்தபடி உயர்ந்த ரகமாயில்லாமையால் எனக்கு சற்று ஏமாற்றமாகவே யிருந்தது — எங்கள் வடக்குப் பிரயாணத்தை முடித்துக்கொண்டு ஜூன் மாதத்திலேயே திரும்பிவந்து ஜூலையில் (1908-ஆம்வருஷம்) காலேஜில் சேர்ந்தேன்.

செப்டம்பரில் என் சகோதரி பாலம் பிரஸவத்துக்காக வந்தாள் கல்கத்தாவிலிருந்து. என் சகோதரி சாவித்திரியும் கர்ப்பமாயிருந்தாள்.

வெள்ளிவிழா வெளியீடுகள்

1. தபால் விநோதம் 2. இனிய முரசு

3. ஆண்டவனின் அருள்

மூன்றும் ஒரேசமயத்தில் வாங்குவோர்க்கு ரூ. 3-தான். (ரிஜிஸ்தர் தபாற்செலவு இனாம்.) தனித்தனியே வாங்குவோர் ரூ. 1—4—0 வீதம் அனுப்பினால் ரிஜிஸ்தர் போஸ்ட்மூலம் அனுப்புவோம்.

ஸ்ரீ ஸுபத்ரா ராஜன்.

சிறுகதை *

பொழுது புலர்ந்தது!

விடிந்ததும் ஊருக்குப் புறப்படவேண்டும். நான்கு மாதங்களுக்கு முன், நைந்துபோன மனதில் தாங்கமுடியாமல் தாங்கிக்கொண்டுவந்த துன்பச் சுமையை மாமா வீட்டிலேயே உதறி எறிந்துவிட்டு, இலேசான உள்ளத்துடன் ஆனந்த நிறைவுடன் என் சொந்த வீட்டிற்குத் திரும்பிப் போகிறேன். சுயநல இருளில் குவிந்து கிடந்த என் இதயமலர், அன்பின் உண்மை ஸ்வரூபம் என்னும் ஆதவனது இதமான கிரணங்கள் பட்டு விரிந்து மலர்ந்துகொண்டிருந்தது. அந்தகாரத்தில் தடம் தெரியாது தவித்த உள்ளத்திற்குக் கன்னியின் உபதேச ஒளி வழிகாட்டியாய் அமைந்தது. அவ்வொளியில் அதுகாறும் மறைந்துகிடந்த உண்மை தெட்டெனப் பிரகாசிக்கத் தொடங்கிற்று.

கன்னி: அப்படி அவள் என்ன சொல்லிவிட்டாள்! என்னதான் சொல்லவில்லை? ராஜபாட்டையினின்றும் விலகி குறுகிய சந்துக்களில் குணம் குன்றி அலைந்தவளை அறைகூவி அழைத்தது அவள் சொற்கள்; சுயநல அஸ்திவாரத்தின்மேல் மிகப் பிரயாசையுடன் கட்டிப் பாதுகாத்து வந்த பிடிவாத மாளிகையைப் பிடித்து உலுக்கியது அவள் சொற்கள்; மனக்கடலில் மறைந்து ஆழ அமுங்கிபோயிருந்த மனசாட்சி, பிறிட்டெழுந்து மேலே மிதந்ததும் அவள் சொற்களின் வேகத்தினால்தான்.

கன்னி படித்தவளல்ல. பெரிய மகான்களின் பொன்மொழிகளைப் படித்தும் கேட்டும் அறிந்து, அவற்றின் பொருளைத் தெரிந்துகொண்டு அதன்படி நடப்பதாகப் பறைசாற்றிக்கொள்ளும் என்போன்றவர்களைச் சேர்ந்தவளல்ல அவள். உலக சமாசாரங்கள் ஒன்றுமே அவளுக்குத் தெரியாது. தெரியவும் வழி இல்லை. பனங்கீத்துக்கள் வேய்ந்த ஒரு சிறு மண் குடிசைக்குள் அவளுடைய உலகமே அடங்கியிருந்தது. அணி அலங்காரங்களுடன் பேச அவள் கற்கவில்லை. உள்ளத்தில் ஊறும் எண்ணங்களைக் குழந்தைத்தனமாகச் சொல்லிவிடுவாள். கபடு, சூதுகளுக்கு அங்கே இடமில்லை. பரிசுத்தமான அவள் சொற்களில் புதைந்திருந்த அர்த்தம் கேட்பவரின் உள்ளத்தில் ஊடுருவிப்பாயும் சக்தி பெற்றிருப்பதின் ரகசியம் தானென்ன? தன்னலமில்லா அன்பும் உயர்ந்த தியாகபுத்தியும்தான் காரணமோ!

அவளுக்குப் பணம் தேவையாக இருந்தது. நான் கொடுப்பேன் என்ற நம்பிக்கையுடன் என்னைக் கேட்டாள். கொடுத்தேன், அத்துடன் நில்லாமல், அவளுக்குப் பணம் தேவையாயிருப்பதன் காரணத்தையும் கேட்டேன். அவள் சொன்னாள். ஒன்றையும் ஒளிக்காமல் கபடமின்றிக் கூறினாள்.

அவள் புருஷனுக்காகத்தான் பணம் தேவையாம். கன்னியின் சித்தி மகள் ஒருத்தி, புருஷனிடம் இருந்து வாழ இஷ்டமின்றி அவர்கள் சாதி வழக்கப்படி தீர்த்துப் பணம் கொடுத்து பந்தத்தை விலக்கிக்கொண்டு விட்டாளாம். இருக்க வேறிடமின்றி கன்னியிடமே சகோதரி என்ற முறையில் அடைக்கலம் புகுந்துவிட்டாள். கன்னியும் அவளை அன்புடன் ஆதரித்து வந்தாள். ஆனால் அதன் பலன் விபரீதமாக முடியுமென்று அவள் நினைக்கவில்லை.

---

* வெள்ளிவிழா சிறுகதைப் போட்டிக்கு வந்த கதைகளுள் பிரசுரத்திற்குத் தகுதியெனத் தேர்ந்தெடுக்கப்பட்டவைகளுள் 5-வது கதை இது.

நான்கு குழந்தைகளைப் பெற்றெடுத்து, குடும்பத்திற்கு உழைத்து ஓடாகிவிட்டதனால் வாலிப முறுக்கை இழந்துவிட்ட கன்னிக்கு வரவரக் கணவனின் ஆதரவும் குறையலாயிற்று. கட்டுமஸ்தான தேகத்துடன் இளமை குன்றாத மைத்துனியை நாடியது அவன் மனம். மிருக உணர்ச்சியின் தகிப்பில் தூய பாசம் என்னும் நிலவின் குளுமை மங்கி மறைந்துவிட்டது. இருப்பினும், தன் எண்ணத்தைக் கன்னியிடமே நேரில் கூறி அவள் சம்மதத்தைப் பெறக் கூசிய அவள் புருஷன் ஊராரில் சிலரைத் தூதுவிட்டான். கணவனின் கருத்தைக் கன்னி கேட்டாள். சற்றும் எதிர்பாராத அச் செய்தி அவளை ஒரு கணம் ஸ்தம்பிக்கச் செய்தது. ஸ்ரீராமபிரான் அச்வமேதயாகம் அயோத்தியில் செய்யப்போகிறார் என்று கேள்விப்பட்டதும், தன் பதி ஏகபத்னி விரதன் என்பது நன்கு தெரிந்திருந்தும், வால்மீகி ஆச்ரமத்திலிருந்த ஜகன்மாதா ஜானகி தேவியே ஒரு கணம் பதறிவிட்டாளல்லவா!

இருப்பினும் கன்னி அதிகமாய் ஆலோசனை செய்ய விரும்பவில்லை. அவள் சம்மதம் இல்லாவிடில், விவாகம் நடப்பது அசாத்தியம். 'புருஷனுக்குக் கீழ்படிந்தவள், ஆகையால் வேறுவழியில்லை' என்பதற்காக அவள் கல்யாணத்திற்குத் தன் அனுமதியைக் கொடுக்கவில்லை; அவன் இஷ்டப்படுகிறான்; அவனைச் சுகமாகவும் சந்தோஷமாகவும் வைத்திருப்பதுதானே அவள் குறிக்கோள்? தன்னால் அளிக்கமுடியாத சுகத்தைத் தன் தங்கை மூலமாகவாவது கொடுத்து அவனைத் த்ருப்திசெய்வதுதானே அவள் இன்பம்; நிர்க்கதியாகிநிற்கும் சகோதரிக்கும் ஒரு ஆதரவு ஏற்படுத்தினாற்போலிருக்கும்? சர்க்கரை, தான் கரைந்து பிறருக்கு இனிப்பைக் கொடுப்பதுபோல், தன் வாழ்நாளின் சுகத்தையே தியாகம்செய்து புருஷனின் சுகத்தை நாட முற்பட்டுவிட்டாள் கன்னி. முழுமனதுடன் விவாகத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளில் முனைந்துவிட்டாள்.

என்னதான் வறுமையில் நலிந்தாலும், மணப்பெண்ணிற்குப் பரிசம் போடாமல் விவாகம் எங்ஙனம் நடைபெறக் கூடும்? என் மாமாவிடம் விஷயத்தைச் சொல்லிப் பணம்கேட்க கன்னியின் கணவனுக்கு வெட்கமாயிருந்ததாம். அவன் கலவரத்தை நீக்கி, அவனுக்குவேண்டிய பணத்தைத் தானே கேட்டு வாங்கிக்கொடுப்பதாக கன்னி முன்வந்துவிட்டாள்.

கன்னி சம்மதித்துவிட்டாலும் என் மனம் கேட்கவில்லை. "கன்னி! கல்யாணமாகும்வரைதான் உன் புருஷன் உன்னைக் கவனிப்பான். பிறகு நீ மதிப்பற்றுத்தான் போய்விடுவாய். ஆழம்தெரியாமல் காலை வைக்காதே. பிறகு கஷ்டப்படுவாய். யோசித்து சம்மதம் தெரிவி" என்று எச்சரித்தேன். அவள் சிரித்தாள்.

"இதில் யோசனை என்ன அம்மா? கவனிக்காமபோனா போறாங்க. அவங்க சுகமாயிருந்தா சரி. அதுக்காக எத்தனை கஷ்டம் வந்தாலும் நான் சகிச்சுக்கத் தயார்தான்" என்றாள்.

இதைக்கேட்டதும் நான் திகைத்தேன். ஸ்திரீ தர்மத்தின் உயர்ந்த லக்ஷணங்கள், மகாத்மாஜி எடுத்துரைத்த உத்தம லட்சியங்கள் கன்னியிடம் எவ்வளவு அனாயாசமாகப் பொருந்தியிருக்கின்றன! குப்பையில் மிளிரும் மாணிக்கம்போன்ற அவள், பட்டமும் பதவியும் பெறாவிட்டால் என்ன? ஆழ்ந்த அன்பிலிருந்து உதிக்கும் சகிப்புத் தன்மையும், மனமுவந்து செய்யும் தியாகத்தின் மேன்மையும் அவளை மிகவும் உன்னதமான ஸ்தானத்திற்கன்றோ ஏற்றிவிடுகின்றன! காந்தியடிகளின் உண்மையான சிஷ்யை அவளே!

ஆனால் நான்—? நான் என்ன செய்திருக்கிறேன்? படித்தேன். பட்டம் பெற்றேன். உலக விஷயங்களைத் தெரிந்துகொண்டுவிட்டதாகப்

பாவித்தேன். கணவனிடம் மிகுந்த அன்பு பூண்டு இருப்பதாக நடித்தேன். ஆம், அது நடிப்புதான். உண்மையான அன்பு இருந்தால் அற்ப குற்றங்களுக்காக எரிந்து விழுந்து, கோபித்துப் பொறுமையற்று விடுவேனா? சகிப்புத்தன்மை இல்லாத இடத்தில் அன்பு இருப்பதையே சந்தேகிக்க வேண்டியதுதானே!

அருமையுடன் பெற்றுப் பெருமையுடன் மூன்று வருடங்கள் வளர்த்த எங்கள் செல்வக் குழந்தை பிரேமாமணி திடீரென்று எங்களை விட்டுச் சென்றதற்கு அவரா காரணம்? குழந்தை டைபாய்டு சுரத்தில் போராடின அந்த ஏழு நாட்களும் இரவு, பகல் எனப்பாராது, டாக்டருக்காகவும், நர்ஸுக்காகவும் அலைந்து திரிந்து, சிசுருஷை செய்தவரா அதன் பிரிவுக்கு ஏங்காமலிருப்பார்? திடீரென்று ஏற்பட்ட அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்ளச் சக்தியில்லாத என் மனம் அவரைத்தான் குற்றம் சாட்டியது. அவர் மனத்தின் ஆழத்தில் மறைந்து வெளிப்படாமல் இருந்த துயரத்தின் சாயை என் கண்களுக்கு அப்பொழுது புலப்படவில்லை. குழந்தையின் பிரிவு அவர் மனதில் எவ்விதமான வடுவையும் உண்டாக்கவில்லை; எப்பொழுதும்போல் சந்தோஷமாகக் கவலையற்றுத்தான் இருக்கிறார் என்று எண்ணி, என் துயரத்தை அவருடன் பகிர்ந்து அனுபவிக்க மறுத்து விட்டேன். நிவர்த்திக்க முடியாத ஒரு சம்பவத்தைக் குறித்து வீணாக மருகிக்கொண்டிருந்த என்னை மீண்டும் முன்போலாக்க அவர் செய்தவையெல்லாம் எனக்கு அளவிலாத எரிச்சலையே மூட்டின. பிடிவாதம் என்னைப் பிடித்தாட்ட நான் அவரிடம் மிகவும் மூர்க்கமாக நடந்துகொண்டேன். சதா புன்னகை தவழும் அவருடைய சாந்தமான முகம் என்னை கேலி செய்வதுபோல எனக்குத் தோன்றியது. உள்ளத்தில் வெறுப்பு வளர வளர அவர்மேல் அகாரணமாய் த்வேஷம் கொண்டேன். மனதில் சிறிதளவாகிலும் உணர்ச்சியே இல்லாத அவரிடம் மனிதத்தன்மை என்பது இருக்கிறதா என்று நொந்துகொண்டு, அவரருகில் இருக்கவே வெறுப்புற்று அளவில்லாத மனக் கசப்புடன் அவரை விட்டுப் பிரிந்து மாமா வீட்டிற்கு வந்துவிட்டேன். அப்படியும் கொந்தளிக்கும் உள்ளத்திற்கு சாந்தி ஏற்பட வழி காணமுடியவில்லை.

கடைசியில் கன்னி வந்தாள். சிறுபருவமுதல், தாய்தந்தையற்ற என்னை எடுத்துப் போற்றிவளர்த்த என் மாமாவுக்கும் புரியாத பெண்ணுள்ளத்தின் பலஹீனத்தைக் கன்னி சுட்டிக்காட்டிவிட்டாள். தன்னலமில்லா அன்புகொண்டால், சாந்திபெற மார்க்கம் உண்டு என்று காண்பித்தாள். தியாகநெறியில் துயருக்கு இடமில்லை என்று நிரூபித்தாள். அவள் காட்டிய வழியில் சென்று உண்மையை உணர்ந்தேன்.

தான் செய்த மகத்தான தியாகத்தின் அளவை, மகிமையை கன்னி உணரவில்லை. ஏன்? அதைப்பற்றியே அவள் சிந்திக்கவில்லை. சர்வசகஜமாக மிகப் பெரிய காரியத்தைச் செய்து முடித்துவிட்டாள். அதை எண்ணி அவள் பெருமிதம் அடையவுமில்லை. தான் என்ற நினைவே இல்லாது, கணவன் தன்னைப் புறக்கணித்தாலும் அவனது சுகமே தனது சுவர்க்கம் என்றெண்ணிய ஞானியான எளிய கன்னிக்கும், போலி ஆடம்பரம் பூண்டு, என்னைத் தவிர வேறொருவருடைய சுகத்தையும் கருதாது அன்பு நிறைந்த கணவனின் தூய உள்ளத்தை மூர்க்கத்தனமாகச் சிதற வடித்த எனக்கும் உள்ள அகாதமான வித்தியாசம்—சீ! எத்தகைய வெட்கக்கேடு!

என் கண் திறந்தது. நான் செய்த தவறை உணர்ந்ததும் மாமாவகத்தில் எனக்கு இருப்புக்கொள்ளவில்லை. மீண்டும் என் இல்லத்திற்குச் சென்று, செய்த தப்பிதத்திற்குத் தகுந்த பிராயச்சித்தம் தேடிக்கொள்ள

ஜ—4

18314 1-8-1949



ஆத்ம சோதனை

★

கவியோகி
சுத்தானந்த பாரதி

★

3. தாத்தாவும் பாட்டியும்

குழந்தைப் பருவம்; சூழ்நிலையை அதிசயமாகப் பார்க்கிறேன். உலகின் வக்கிரவிநோதங்களெல்லாம் என் கண்ணில் புகுந்து, மனதைக் கிளறிவிடுகின்றன. என் வீட்டிலேயே சிலர் சிரிக்கிறார்கள்; சிலர் அழுகிறார்கள். அழுதவர் சிரிக்கிறார்கள்; சிரித்தவர் அழுகிறார்கள். இன்று நேசம் பாராட்டுவோர் நாளையே வெருகுச் சண்டை போடுகிறார்கள். இன்று மங்கல மதிமுகத்துடன் விளங்கியவளுக்கு, ஒரு நாள் முட்டாக்குப்போட்டு மூலையில் அடைக்கிறார்கள். இந்த விநோதங்களை நாடகம்போலக் காண்கிறேன்.

இதயம் துடித்தது. என்னை வந்து அழைத்துப்போகும்படி அவருக்கு நானாக வலிய எழுதினேன். அவர் வந்தார், முகத்தில் பழைய முல்லைச் சிரிப்புடன் வந்தார். எங்கும் காணமுடியாத சாந்தியை அவரது நகை முகத்தில் கண்டேன். பொழுது விடிந்ததும் புறப்பட்டு அவருடன் என் வீட்டிற்குப்போகிறேன். என் வாழ்க்கைப் பாதையைச் செப்பனிட மிகுந்த உதவி புரிந்த கன்னிக்கு என் இதய பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துவிட்டேபோவேன். எப்படிப்பட்ட கைம்மாறும் அவள் செய்த உதவிக்கு ஈடாகாது என்று என் உள்ளம் உணர்ந்திருந்தாலும், அவளை வாயாற வாழ்த்திவிட்டுத்தான் போவேன்.

என் மனதில் மண்டிக்கிடந்த இருள் நீங்கி அன்பின் ஒளி அழகாகப் பிரகாசிப்பது போல், புற உலகிலும் இருள் பிரிகிறது. பகலவனது ஒளி பாய்ந்து வருகிறது. இதோ, பொழுது விடிந்துவிட்டது. எழுந்து ஊருக்குப் புறப்பட ஆயத்தம் செய்யவேண்டும்.

"பொழுது புலர்ந்தது யாம் செய்த தவத்தால்
புன்மை இருட்கணம் போயின யாவும்."

ஒரு சமயம் வீட்டில் சுமங்கலிப் பிரார்த்தனை நடந்தது. எனது தாய் பயபக்தியுடன் சுமங்கலிகளுக்கெல்லாம் மங்களஸ்நானம் செய்வித்து, புதிய புடவை ரவிக்கை தந்து, தலைநிரம்ப குண்டு மல்லிகையும் மருக்கொழுந்தும் வைத்து, விருந்திற்கு அழைக்கிறாள். அந்தணர் வேதகானம் செய்கிறார். எனது நினைவு என் அருமைப் பாட்டியிடம் சென்றது. நான் ஒரு கொத்துப் பூவையும் கொஞ்சம் மஞ்சளையும் எடுத்துக்கொண்டு பாட்டியிடம் ஓடினேன். மீனாக்ஷிப் பாட்டி அப்போது "மாமவபட்டாபிராம" என்ற தீக்ஷிதர் கிருதியை இனிமையாகப் பாடிக்கொண்டே போளி தட்டினாள். நான் "பாட்டி, பாட்டி எல்லாரும் பூவச்சிக்கிறா.... இந்தா நீயும் வச்சுக்கோ. நீயும் மஞ்சள் பூசிக்கோ குங்குவம் வச்சுக்கோ"... என்று பூவை அவள் மொட்டைத் தலையில் போட்டேன்... கிட்ட இருந்தவர்கள் "அட அடடே" என்று சிரித்தார்கள். பாட்டி முகம் சிவந்தது. கண் கலங்கியது..."என்ன பாட்டி! அவர்களெல்லாம் புதுப் புடவை கட்டிப் பூ முடிக்கிறார்களே; நீ மட்டும் என் அழறே....நீயும் பெண்தானே"...என்றேன். கூடி அங்கே சமையலைக் கவனித்தவரில் இருவர் மூக்காடிட்டவர்கள். அவர்களும் அழத்தொடங்கினர்...நான் மறுபடியும் "நீங்களும் மஞ்சளைப் பூசிக்கொண்டு வாருங்கள்; புதுப் புடவைகட்டிப் பூ வைத்துக்கொள்ளலாம்" என்றேன்... பாட்டி, "செல்லம்! உனக்கொன்றும் தெரியாது; நீ போ; நிலாவில் எல்லாக் கதையும் சொல்லுகிறேன்." என்றாள்.

வீட்டில் விருந்து நடந்தது. சுமங்கலிகள் திருப்தியாக உண்டனர். என் மனம்மட்டும் என் பாட்டியின் மொட்டைத் தலைக்கும் என் பெரியம்மாளின் கார் குழலுக்குமாக அலைந்தது. "என் அருமைப் பாட்டியை யார் இப்படி மொட்டை யடித்தது?" என்ற ஆத்திரங்கொண்டேன்.

* * * * *

இரவு சாப்பாடானது. பாட்டி நிலாமுற்றத்தில் ஒரு பெரிய பலகையில் உட்கார்ந்து, "பாலகோபாலனை முத்ரா க்ருஷ்ணை..." என்ற கணீர்—குரலெடுத்துப் பாடினாள். நான் ஆவலாக ஓடி வந்தேன். "பாட்டி பாட்டி! சொல்கிறேன் என்றாயே...சொல்லு... நீ ஏன் மஞ்சள் பூசிக்கவில்லை; பூ வைக்கவில்லை?" என்றேன். பாட்டி தன் கதையெல்லாம் கோவையாகச் சொன்னாள். மீனாட்சிப் பாட்டி பேசத்தொடங்கினால் போதும்...நான் அவள் முகத்தையே பார்த்துக்கொண்டிருப்பேன். அவ்வளவு அழகாகவும் உணர்ச்சியுடனும் பேசுவாள். என் விநோதக் கேள்விகளுக்கெல்லாம் 'பட் பட்' என்று பதில் சொல்வாள்.

பாட்டி:—அவர் காலமானபிறகு எனக்கு என்ன மஞ்சளும் குங்குமமும் வேண்டியிருக்கு...

நான்:—அவர்...யார்? அவர்போனால் உனக்கென்ன?

பாட்டி:—அவர்தாம் உன் தாத்தா; ஆள் மாநிறம், வைரக் கட்டை; நிடசாலி; சந்தி ஜபம் நியமங்களில் அணுப்பிசகமாட்டார். காலையில் நான்குமணிக்கே எழுந்து வேதகானம் செய்வார். குளத்

திற்குச் சென்று மூலே மடித்த வேட்டி தவைத்து, நன்ருகத் தேய்த்துக் குளிப்பார். சூரியோதயமாகுமட்டும் காயத்திரி ஜபம் செய்வார். உடனே சூரிய நமஸ்காரம் செய்வார். பிறகு லௌகிக அலுவல்களைப் பார்ப்பார். மணி பனிரண்டு அடித்ததும் மறுபடியும் உடம்பு சுத்திசெய்துகொண்டு, கீதையும் ராமாயணமும் அரை மணிநேரம் பாராயணம் செய்வார்; பிறகு சூரியனைப் பார்த்து விட்டு வந்து சிவபூஜைசெய்வார். சாம்பமூர்த்திக்கும் வேங்கடேசப்பெருமானுக்கும் அபிஷேகம் செய்து, அர்ச்சனை நிவேதனங்கள் செய்து, தீப தூபம் காட்டிய பிறகுதான் வீட்டில் சுமார் ஒரு மணிக்கு இலே போடுவார்கள். சாப்பிடும்போது ஒரு பேச்சு இராது. ஒரு பருக்கை சிந்தாது, கவனமாகச் சாப்பிடுவார். ஒரு ஏப்பம் வந்ததும்எழுந்துவிடுவார். சாப்பிட்டதும் 'கேசவா நாராயணு மாதவா' என்று ஆசமன்யம் செய்வார். சிறிதுநேரம் நல்ல சுலோகங்களைச் சொல்லிக்கொண்டே அமைதியாயிருப்பார். பிறகு பாரதம் பாகவதம் படிப்பார். மூன்று மணிக்கு மறுபடியும் வேலைக்குக் கிளம்பி, ஐந்தரைமணிக்கு வருவார். வீட்டுச்சாமான்கள் வாங்கிவரக் கடைகண்ணிகளுக்குச் சென்றுவருவார். உடனே மறுபடி குளித்து உடுத்து, சந்திஜபம் செய்துவந்து இந்திராக்ஷி, சிவகவசம், ஸஹஸ்ரநாமம் ஜபித்து, விபூதி மந்திரித்து எல்லாருக்கும் இடுவார். பிறகு கோயிலுக்குச் சென்றுவந்து சாப்பிடுவார். சாப்பாடானதும், எல்லாரும் புராணம் கேட்போம். பதினேரு மணிக்குத்தான் உறங்குவோம். "சிவா ராம" என்பது தவிர, வீட்டில் வேறு உரத்த பேச்சிராது. ஏகாதசி, கார்த்திகை, புரட்டாசி சனிக்கிழமை, பொங்கல், தீபாவளி, பௌர்ணமி, ஆடிப்பெருக்கு, ராம நவமி, கோகுலாஷ்டமி நாட்களில் விரதமும் பஜனையும் காலக்ஷேபங்களும் நடக்கும். ஊரில் எங்கே கதைபுராணம் பஜனையானுலும் நாங்கள் போவோம்.

நான்:—தாத்தா உன் மேல் பிரியமாயிருந்தாரா? நீ எப்படி! இருவருக்கும் சண்டையே வந்ததில்லையா? உங்களுக்கு துக்கமே கிடையாதா?

பாட்டி:—வீடு என்ருல் எல்லாந்தானிருக்கும்...ஆனுல் அவர் தங்கக்கம்பி. என்மேல் உயிர்; தலே கால் வலித்தால் பதறிப்போவர். உடனே அவரே வைத்தியம் பார்ப்பார். அவருக்கு நோய்வந்தால் பட்டினி போடுவார். ஏகாதசி உபவாசம் அவசியம் இருப்பார். வீட்டில் அதிகமாக நோயே வராது. அவர் காய்ச்சல் என்று படுத்து நான் அறியேன்.

நான்:—அப்படியானுல் அவரை ஏன் எமன் கொண்டு போனுன்?...

பாட்டி:—நான் இப்படி அலங்கோலமாகி, துக்கப்பட விதியிருந்தது...

நான்:—விதின்னு என்ன பாட்டி?

பாட்டி:—ஒருநாள் திடீரென்று மார்படைத்து அவர் போனுர். அதுதான் விதி...

நான்:—விதி எல்லாருக்கும் உண்டா? எல்லாரும் அப்படிப் போகவேண்டுமா?

பாட்டி:—எல்லாரும் அப்படித்தானப்பா ஒருநாள் கூட்டை விட்டுப் பறக்கவேண்டும்...இருக்குமட்டும் ஈகை லாபம்.

ஒரு நிமிஷம் மௌனம்...உடனே பாட்டி கம்பீரமான குரலெடுத்து

"போய்யேடப்புடு வெண்டராது ஒக
புச்சின வக்கைன..."

என்ற ராமதாஸ் கீர்த்தனத்தை உருக்கமாகப் பாடிக் கண்ணீர் உகுத்தாள்...அதன் பொருளாவது: "ஐயா! உலகில் பொருளைப் புதைத்துப்புதைத்துவைக்கிறார்கள். உடலை உதறி எமலோகம் போகும்போது, ஒரு புழுத்த பாக்குக்கூடக் கூடவராதே...ஏழை எளியவர்களுக்குக் கொடுக்காமல் சேர்த்துப்பூட்டுவது வீண் மாயம். கண்ணைமூடியபிறகு சொந்தமும் சுற்றமும் அன்னியமாய் விடுமே. தன் வினையே தன்னைத் தொடருகிறது.

நான்:—இருக்குமட்டும் என்ன செய்வது பாட்டி?...

பாட்டி:—இருக்குமட்டும் பக்தி செய், பரோபகாரம் செய்.

[பக்தி, பரோபகாரம் இரண்டு சொற்களும் என் வாழ்விற்கே ஆதர்சங்களாயின. இன்னும் அந்தச் சொற்கள் என் காதில் சுழலுகின்றன.] பக்தி, பரோபகாரம்...ஆம். பாட்டி, பக்தி என்றால்?..

பாட்டி:—கடவுளை எப்போதும் நினைப்பதுதான் பக்தி...

"ராமஸ்மரணமு சேயக போதே நருலகு கதிலேது"...என்ற பாட்டை உருக்கமாகப் பாடினாள் பாட்டி. நான் தாளம் போட்டேன்...அந்தப் பாட்டின் கருத்து:

"மனிதப்பிறவிக்கு உய்வு தெய்வபக்தியே. ஆத்மா ராமனை, பரந்தாமனை அடிக்கடி நினை. எல்லாம் அவன் மயம் என்று அன்பு செய். மனிதா, நாட்கள் போய்க்கொண்டிருக்கின்றன. சென்றது மீளாது. நின்ற நாளே உறுதி. அதை தெய்வார்ப்பணமாக்கு; வீண் உலக விவகாரத்தில் சிக்கி மடியாதே. சொத்திருந்தால் தாயாதிகள் போர் வரும். அண்ணன் தம்பிச் சண்டை பெருகும். உடன் பிறந்தவர், சுற்றம், மனைவி, மக்கள் அன்பு சுயநல அன்பு. பசையிருக்குமட்டும் சுருட்டிக்கொண்டு போவார்கள். பிறகு வசைமாரி அடுக்குவார்கள். மனைவியோ எப்போதும் "அதில்லை, இதில்லை, அணிமணியில்லை, ஆசாபாசம் இல்லை" என்று பிணங்குவாள். பெற்ற மகனோ "கிழவா அங்குமில் இங்குவராதே" என்று பெண்சாதிக் கள்ளனாக அதிகாரம் செய்வான். அப்பனைச் சோற்றுக்குத் திண்டாடவிட்டுத் தண்டாகச் செல்லும் பிள்ளைகள் பலர். உடம்போ நோயின் பிண்டம். தெம்பிருக்குமட்டும் எல்லாரும் உறவுகொண்டாடுவார்கள். உடம்புபடுத்தால், ஆட்களைச் சோதிக்கலாம். உடம்பு முதுமை யடைந்தாலோ வேட்டிகூடத் துவைக்க முடியாது. சாப்பிட்டகையைக்கூடத் தட்டிலே கழுவி மல்லாக்க வேண்டியதுதான். உடம்பு அப்படித் தள்ளாடிப் போகும். அந்த நிலை வருமுன்பே தெய்வபக்தி செய், மனமே. உள்ளதைக்கொண்டு பரோபகாரம் செய்"...இந்தப் பாட்டைப் பாட்டி பாடிக்கொண்

டிருந்தபோது திண்ணையில் இசை கிளம்பியது..."செல்லம் வா வா!" இது ஹரிதீர்த்தமையர் குரல்...

4. அவனே பெரியவனும்

ஹரிதீர்த்தம் என் அத்தை கணவர். மீனுட்சிப்பாட்டிக்கு ஒரேபெண்—ஒண்ணேஒண்ணு கண்ணேகண்ணு—என்று அந்தப் பெண் அரங்கநாயகி அருமையாக வளர்ந்தாள். 'பெண் என்றால் எப்படியிருக்க வேண்டும்? அதோபார்' என்று அரங்கநாயகியைக் காட்டலாம். அவ்வளவு அடக்கம், அழகு, அமரிக்கை, பொறுமை பதிபக்தி, தெய்வசிந்தனை கொண்ட உத்தமி அரங்கநாயகி. இருவருக்கும் மங்களம் என்ற ஒரே பெண்குழந்தைதான் உண்டு. ஹரிதீர்த்தமையர் புதுக்கோட்டை தொண்டைமானின் சமஸ்தான வித்வான். பிடில், சாரந்தா, வீணை அனைத்திலும் நிபுணர். பல பேருக்கு இசைப்பயிற்சி யளித்தவர். அவருக்கு அரண்மனையில் செல்வாக்குண்டு. அவர் மகள் மங்களம் அரண்மனை அந்தப்புரத்தில் நாச்சியார்களுடனேயே பழகி வளர்ந்ததால், அவர்களைப் போலவே பேசுவாள். பாட்டும் வரும். அவள் பாடுவாள்; தந்தை சாரந்தா வாசிப்பார். அவர் அன்று இரண்டு மணி நேரம் வெகு உருக்கமாக கார்வை கமகங்கள் ஸ்வரஸஞ்சாரங்களெல்லாம் பொருத்தமாக வைத்து வாசித்தார். "யாருக்குப் பொன்னம்பல க்ருபை இருக்குதோ அவனே பெரியவனும்" என்ற பாட்டு என் உள்ளத்தை அள்ளியது. உலகில் என்ன சொத்து சுகம் சம்பாதித்தாலும் தூசிமாத்திரம். தெய்வகிருபைதான் உண்மையான செல்வம் என்பதை உணர்ந்தேன். பாட்டியின் உபதேசத்துடன் இந்தப்பாட்டும் என் உள்ளத்தில் பதிந்தது. அதற்கு அடுத்தபடி தியாகையரின் "நிதிசால சுகமா" என்ற பாட்டை வாசித்தார் வித்வான். அதுவும் என் ஆத்ம சோதனையைக் கிளறிவிட்டது. கச்சேரி முடியும் சமயம் நான் "பணம் இருந்தால் அவன் பெரியவன் ஆவானே?" என்ற வரியை முணுமுணுத்தேன். "மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை பொல்லாது; யாருக்குப் பொன்னம்பல க்ருபை இருக்குமோ அவனே பெரியவனும்"...என்று உரக்கப் பாடினேன்..."அடட பாடுடா பாடுடா" என்று மாமாவும் பிடில் வாசித்து என்னை ஊக்கினர்...பாட்டு எனக்கு மறந்துபோனது... "ஊருக்குள் பணம் காசு உண்டேன இருந்தேன பேர்புகழ் நில்லாது பேராசை பொல்லாது"....என்று சொந்தமாக வார்த்தைகளைப்போட்டு நிரம்பி, என் வழியில் அந்தப்பாட்டைப் பாடினேன். மாமா "அட சவனமா?...அப்படிச் சொல்லுடா"....என்று மகிழ்ந்தார். அவரிடம் அந்தப் பச்சிளம் வயதில் ஸ்வரவரிசைகள் கொஞ்சம் கற்றேன். மாமா ஊருக்குப்போன பிறகு பாட்டிதான் எனக்கு ஆசிரியை. என் முதல் பள்ளிக்கூடம் பாட்டி சந்நிதானமே. அவளிடம் எனக்கு அசாத்யப் பிரியம்...அவளுக்கும் என்னிடம் அப்படியே. என் முத்தண்ணு மகா குறும்பன். பாட்டியைப் படாதபாடு படுத்துவாள். நான் அவனைத் தடுப்பேன். என்னை இட்டுக்கொண்டு அவள் கோயிலுக்கு அடிக்கடி செல்வாள்.

அங்கே சுவாமி சந்நிதியிலிருந்துகொண்டு கதைகள் சொல்வாள். ஞானோபதேசம் செய்வாள், பாடுவாள்.

பெரியப்பா சுந்தரராஜன் சிவபக்தர்; ஜப சாதகர்;"சுத்தப்ரம்ம பராத்பரராம்" என்றபாட்டை அவர்வாய் பாடிக்கொண்டேயிருக்கும். அவர் மாநிறம், ஆள் வாட்டசாட்டமாயிருப்பார். சுகவாசி. காரிய நிர்வாகத்தில் சமர்த்தர். அவருக்கு மனைவி தவறிப் போனாள். பிறகு மணம்புரியவில்லை. சோழபுரத்தில் எங்களுக்கு நிலம் உண்டு. அதைப் பார்த்துக்கொண்டு சோழபுரம் சத்திரத்தில் அருதார்வேலையும் பார்த்து, கோயில் நிர்வாகத்திலும் உதவிக்கொண்டிருந்தார் சுந்தரராஜர். அவருக்கு இசை,நாட்டியம் என்றால் பிரியம். இதற்காகவே அவர் ஒரு நடிகையை வைத்திருந்தார். நான் அடிக்கடி சோழபுரம் செல்லும்போது, அவள் ஆடல்பாடலை ரசிப்பேன். அதனால் எனக்கு நாட்டியக்கலையில் ஆர்வம்பிறந்தது. சோழபுரம் கோயிலில் தேவதாசிகள் அடிக்கடி நடனமாடுவர். அதைப் பார்த்து நானும் என் பாணியில் அடவுகளை 'தத் த தை தா' என்று வைத்து, ஆடல் பாடல் நடத்துவதுண்டு. பெரியப்பா "அடிசக்கை அப்படிப் போடுடா" என்று என்னைத் தட்டிக்கொடுப்பார். அவர் பணத்தைத் தமாஷாகச்செலவிடுவார். எங்கள் குடும்பத்திற்கு அவரால் எந்த உதவியும் இல்லை. அடிக்கடி பெட்டிவண்டியை ஓட்டிக் கொண்டுவருவார், சாப்பிடுவார், செல்வார். எந்தை அவருக்கு நல்ல உபசாரங்கள் செய்வார். அவர் முதுகில் பிளவைகண்டு இறந்தார். பிளவையை அறுத்துச் சத்திரம்வைக்கும் காட்சிகளைக் கண்டேன். உடலில் பொய்யுறவை அறிந்தேன். அவ்வளவு உற்சாகக் கலாரசிகராயிருந்த பெரியப்பா, ஒருநாள் இறந்தார். அவர் சொத்தில் பாக்கி என்ன? அவர் காதில் போட்டிருந்த கடுக்கன்ஜோடி...ஒரு கூண்டுக் கிளி...இரண்டே. கூண்டுக்கிளிக்குமட்டும் அவர் ராமமந்திரம் சொல்லிவைத்திருந்தார். அது அடிக்கடி 'ராம ராம,ரங்க ரங்க'என்று பேசும். அதுவே எனக்கோர் உபதேசமானது. 'உலகில் எந்தமனிதர் வாழ்வும் உறுதியில்லையப்பா. பெயர்புகழ் சொத்து சுகமெல்லாம் மங்கிப்போகும்...ராமா ராமா ஆத்மா ராமா என்று ஜபி...மனதைக் கடவுளிடம் வை. அதுதான் சுகம்' என்று அந்தச் சுகமொழி எனக்கு உபதேசித்தது. என்பாட்டி அதைக் கொஞ்சிக்குலாவிக் கொண்டே தன் கதையெல்லாம் அதனிடம் சொல்லுவாள். கிளிக் கண்ணி பாடுவாள்...ஒருநாள்,

> பிறப்பு வந்ததடீ—கிளியே
> பேச்சு வலுத்ததடீ
> மறப்பு வந்ததடீ—எல்லாம்
> மாயமாய்ப் போச்சுதடீ

என்று பாடிக்கொண்டிருந்தாள். "பாட்டி, என் பிறப்பு எப்படி வந்தது ?" என்றொரு கேள்வியைப் போட்டுவைத்தேன்....பாட்டி தனது திருக்கல்யாணவைபவத்தில் தொடங்கி என் அப்பா அம்மா கலியாணத்திற்குத் தாவினாள். "ஜடாதரன் தங்கமான பிள்ளை... என் குழந்தைகளின் மாணிக்கம்"...என்று வம்சாவளியைத் தொடங்கினாள்,

5. அப்பா

அரங்கர் திருப்பூவனத்தில் இருந்தபோது அந்தணர் சுவாமியான ஜடாதரரை பக்தி செய்து சிவகவசம் ஜபித்தார்; அந்தச்சமயம் பிறந்த பிள்ளைக்கு ஜடாதரன் என்று பெயரிட்டார். எந்தை ஜடாதரர் தாயாரைப்போன்று கட்டழகாயிருப்பார். அவர் ஸ்ரீ ரமண மஹர்ஷியைப்போலவே கலை நிரம்பினவர். நல்ல உயரம், சரியான பெருமன். மலர்ந்த முகம். கள்ளம் கபடற்ற தோற்றம். அந்த அகன்ற மார்பில் கருணை விளையாடும். புன்னகை ததும்பும் வாயில் சிவவிஷ்ணுநாமங்கள் ஒலிக்கும். உள்ளம் சிவசிவ ராமராம என்றே துடிக்கும். எந்தை புண்ணியபுருஷர், பரமசாது, யாருக்கும் தீங்கு நினைக்கமாட்டார். தம்மால் ஆன உதவியை எவருக்கும் வலியச் செய்வார். கடிந்தபேச்சே அவரிடம் இல்லை. அவர் மகாமானி. பிறரிடம் எதையும் யாசிக்கமாட்டார். இல்லாததை விரும்பமாட்டார். இருப்பதை ஒளிக்கமாட்டார். வெளிப்படையான ஆள். எதற்கும் "அவன் சித்தம் ஆகட்டும்" என்பார். சுகதுக்கங்களைச் சமமாகப் பாவிப்பார். அவர் ஆசாரசீலர், சத்தியவான். தமிழிலும் வடமொழியிலும் பாடல்களை அள்ளிக்கொட்டி, எங்களுக்கு அரிய நீதிக் கதைகளைச் சொல்லுவார். நீதி சதகம், வேமனபத்யம், தாயுமானுர்பாடல், பட்டினத்தார்பாடல், வில்லி பாரதம், கம்பன், திருக்குறள், ஔவைபாடல் பொம்மனபோதன பாகவதம், பாஸ்கர ராமாயணம், இராமதாஸ் சரித்திரம், ஸௌந்தர்ய லஹரி, இந்திராக்ஷி சிவகவசம் ஸஹஸ்ரநாமம், புருஷஸூக்தம், சண்டி ஸப்தஸதி பெரியபுராணம், திருவிளையாடற்புராணம் ஸ்காந்தபுராணம் முதலியவற்றில் அவருக்குப் பயிற்சியுண்டு. அந்தக்காலம் நடந்த சரித்திரக்கதைகளும் அனுபவக் கதைகளும் ஏராளமாகச் சொல்லுவார். அவர் திருவாராதனமும், ஆலயதரிசனமும், சந்திஜப பாராயணுதிகளும் இல்லாமல் உணவுகொள்ளமாட்டார். பசிக்கு உண்பதைவிட மனப்பசிக்கு ஜபதபங்கள் செய்வதில் அவருக்குக் கருத்து அதிகம்.

ஸ்ரீஜயந்தி, ஸ்கந்தசஷ்டி, கார்த்திகை, அமாவாசை, ஏகாதசி, ஸ்ரீராம ஜயந்தி, சிவன்ராத்திரி, பிரதோஷ நாட்களில் அவர், வீட்டிலிருக்கும் குலதெய்வத்திற்கு ஆராதனை செய்யத்தொடங்கினுல், வீடுமுழுதும் தெய்வக்களை வீசும். குழந்தைப் பருவத்தில் அவர் செய்யும் பூஜை புரஸ்காரங்களை நான் உள்ளாழ்ந்து கவனித்துக் கொண்டே மெய்ம்மறந்திருந்தேன். வீட்டில் யாருக்காவது நோய் வந்தால் இந்திராக்ஷி ஜபம் செய்து விபூதி மந்திரித்துவைப்பார். நோய் குணமாகும். மந்திர ஜபமகிமையை அவரிடம் காணலாம். இளமைமுதலே எந்தை மாசற்ற ஒழுக்கமுடையவர். பெரியாரைக் கண்டால் அவர் சாஷ்டாங்க நமஸ்காரம்செய்வார். அவர்களுக்குமுன் மேல் ஆடையை இடுப்பில் கட்டிக்கொண்டு கை குவித்து வணக்க ஒடுக்கமாக நிற்பார். தந்தையிடம் பரமபக்தியுடன் நடந்தார். தாயாரைத் தாயன்புடன் பேணினுர். தாயார் சாப்பிட்ட பிறகுதான் அவர் சாப்பிடுவார். வாலிபஜடாதரன் அழகும் குணமும் ஒரு செல்வர் கண்ணைக்கவர்ந்தன. அவரே வக்கீல் மஹாதேவர்.

12

உலகத்தில் சர்வ சாதாரணமான விஷயங்கள்கூட மிகப் பரபரப்புடன் பொதுமக்களின் இயற்கைச் சுபாவத்தினுல் சிறகு முளைத்துப் பறக்கவைத்துவிடுவார்கள். இது உலக ப்ரஸித்தம். ஏதாவதொரு தொழிலில் ப்ரஸித்தி பெற்றவர்கள் ஒரு வீட்டிற்கு ஒருதாரத்திற்கு இருதாரம் வந்துவிட்டால், அதற்கொரு கண்ணு மூக்குவைத்துப் பெருத்த உருவத்தைக்கூட உண்டாக்கிவிடுவார்கள் என்ருல், மகத்தான சினிமா ராணிக்கு ஏற்பட்டுள்ள பேராபத்தான விஷயமும் சினிமா கம்பெனிக்கே விளைந்துள்ள விபரீத விபத்தும் பற்றிக் கேட்கவாவேண்டும்?

இத்துறையில் பொதுமக்களைவிட சிலவாரப்பத்ரிகைகளும், இதர பத்ரிகைகளும் வெகு வெகு அக்கரையுடன் அந்த தகவல்களை விசாரித்தும் கேட்டும் அறிந்தும் புளுகு மூட்டைச் சரக்குகளைக் கொட்டியும் தம் பத்ரிகையில் நிரப்பவும் பெரிய பெரிய தலையங்கங்களைப் பொறித்து வ்யாபாரத்துறையில் தாம் வெற்றியடைந்து பொதுமக்களை ஏமாற்றுவதும் தொழிலாகக் கொண்டவர்கள் இந்த விஷயத்தை விடுவார்களா? முக்யமான உயர்ந்த லக்ஷயங்கொண்ட பல நல்ல விஷயங்களை அத்தகைய பத்ரிகையில் பார்க்கவும் முடியாது. அப்படிப்பார்த்தாலும் மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிபோட்டதுபோன்ற அவ்வளவு பொருத்தமாய் அழகாய்க் காணப்படும், புரட்சியையும் பரபரப்பையும் உண்டுபண்ணக் கூடிய விஷயங்களுக்காகவே நடக்கும் பத்ரிகைகளில் மேல் குறித்த விபத்து விஷயங்கள் பறக்க வாரம்பித்தன.

பத்ரிகை விளம்பரத்தாள்களில் கொட்டை எழுத்துக்களில்,—

"ப்ரபல ஸினிமா நக்ஷத்திரம் ஸ்ரீ அம்ஸாதேவிக்குப் பிசாசு பிடித்து விட்டதாம்...பயித்தியம் பிடித்துவிட்டதாம்... ஸ்டுடியோவில் ஹதம் செய்து படுநாசத்தை விளைவித்தாளாம். ஸினிமா ராணியைக் காணவில்லையாம்...தேடிப்பிடித்துத் தருகிறவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் இனும் தருகிருர்களாம்."

என்றெல்லாம் பொறித்து ஒவ்வொரு ஸோடாக் கடைகளிலும், சகலமான பத்திரிகை விற்பனைக் கடைகளிலும் தொங்கிக்கொண்டு ஊஞ்சலாட ஆரம்பித்தன. அத்தகைய பத்திரிகைகள் அன்றைய பதிப்பில் ஆயிரம் ஆயிரமாகக் காப்பிகள் செலவாகியது ஒரு வியப்பே இல்லை; சினிமா ராணியின் அபிமானிகள் லக்ஷக்கணக்கில் பணத்தையும் தமது சிறந்த அறிவையும் நேரத்தையும் பறிகொடுக்கக் காத்திருக்கையில் இது ஒரு ஆச்சரியமா! பத்ரிகை வெளியாகிய ஒரு மணி காலத்திற்குள்ளேயே செலவாகிவிட்டது; இனி பத்ரிகை இல்லை, இல்லை, என்ற பெருமையைத் தேடிக்கொண்டார்கள்.

"என்ன அனியாயம் ஸார்! சினிமாராணி,சினிமாக்குயில் அம்ஸாதேவிக்குப் பயித்யம் பிடித்துவிட்டதாமே...பிசாசு வேறு பிடித்

திருக்கிறதாமே...எங்கோ ஓடியே போய்விட்டாளாமே......அடா டாடா...இதென்ன அதிர்ச்சிகரமான விஷயம். இப்போதுதானே கோயிலுக்கு வந்து கொள்ளை இன்பம் கொடுத்துவிட்டுச் சென்றாள்?"...என்று துக்கம் விசாரிப்பதுபோல் ஒருவருக்கொருவர் சினிமா ப்ரியர்கள் பேசிக்கொண்டார்கள்.

அதேபோல், அவளிடம் பொறாமையும் அஸூயையும் கொண்டுள்ள சில நடிகைகள், நடிகர்கள், முதலாளிகள், இதரர்கள் இந்த அதிர்ச்சிகரமான விஷயத்தைக்கேட்டு "வேணும்..வேணும்...கர்வம் பிடித்த பீடை ஒழிந்ததா! இனி நாம் தலை எடுக்கலாம்"...என்று எக்காளமிட்டும் பேசிக்கொண்டார்கள்.

"அடாடா!..விசித்ர உலகமே...நீ காட்டும் காலக்கண்ணாடியில் எத்தனை விநோதங்களை எத்தனை நம்பமுடியாதவைகளை எல்லாம் ப்ரத்யக்ஷ உருவமாகக் காட்டுகிறாய்.....என்ன ஆச்சரியம்...என்ன ஆச்சரியம்!"....என்று சிலர் வியப்புக் கடலாடினார்கள். உலகம் பல விதமல்லவா..."எளியாரை வலியாரடித்தால் அவ்வலியாரைத் தெய்வ மடிக்கும்", "அடாது செய்தால் படாதுபடுவார்", "விரலுக்குமேல் வீக்கங்கண்டால் வெடித்துத்தானே போகும்", "ஆழமறியாது காலை வைத்தால் பாழுங்கிணறுதானே கிடைக்கும்" என்று வேதாந்தப் பேச்சும்—இதையே சுட்டிக் காட்டி—சத்விஷய உபதேசமும் செய்பவர்களும் சிலர் தோன்றாமலில்லை.

இப்படியாக வெளியுலகம் புகைந்துகொண்டிருக்கும் புகை மண்டலத்தின் மத்தியில் பரங்கிக்கார உடையில் தன்னை மறைத்துக் கொண்டு, நடக்கவும் நிற்கவும் தெரியாமல், கூசிக் கூசி ப்ராணன் சிந்திப்போகும் முறையில் நடைப்பிணம் போன்று உலாவும் அம்ஸாதேவி வெளிச்சமாகியதும் அதிக ஜன நடமாட்டம் இல்லாத இடத்தில் அப்படியும் இப்படியும் அலைந்தவாறு பிச்சைக்காரர்களின்மீதே கண்ணாகப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

லஜ்ஜை என்கிற ஒரு பொருள் உலகத்தில் இருக்கிறது என்பதையே முதல் நாள் இரவுவரையில் மறந்து...துறந்து....இருந்த அம்ஸாவுக்கு இப்போது அவளையறியாமல் எப்படியோ முற்றுகை இட்டுக்கொண்டு அவளுடைய ஒவ்வொரு மயிர்க் காலிலும் உணர்ச்சியை உண்டாக்கி நாணிக்கோணி நெளியச் செய்துவிட்டது. முழங்காலுக்குக் கீழே கால்கள் தெரிவதை மிகவும் வேதனையாக எண்ணினாள். ஏதோ அவமானம் பாதிப்பதாக உணர்ந்தாள்.

அவ்வூரில் உத்ஸவத்திற்காக வந்துள்ள பலரும் "சினிமா ராணி அம்ஸாதேவிக்குப் பிசாசு பிடித்திருக்கிறதாம்....பயித்தியம்வேறு பிடித்திருக்கிறதாம். ஓடிவிட்டாளாம்...பத்ரிகையில் பத்திபத்தியாய் வந்திருக்கிறதே....!"என்று பேசிக்கொள்வது இவள் காதில் கேளாமலில்லை...இந்த அல்ப நாய்க்கு இனி அம்ஸாதேவி என்றா பெயர்...மூதேவி என்று கூப்பிடலாமே....அடாடா! பத்ரிகையில் வேறு இவ்விஷயம் வந்திருக்கிறதா! முதலிலதைவாங்கிப்பார்க்க வேண்டும் என்று எண்ணியவளாய் கடையில் விற்கும் பத்ரிகைகளை வாங்கிக்கொண்டு வந்தாள்.

பொதுமக்கள் உட்காருவதற்காகச் சிறிய நந்தவனம் போன்று அமைத்திருக்கும் இடத்தில் வந்தமர்ந்தாள். பத்ரிகையின் முகப்பில் அம்ஸாதேவியின் பெரிய புகைப்படமும் கொட்டை எழுத்துத் தலையங்கமும் பார்க்கையில் அவள் தேகமே பற்றி எரிவதுபோல் உணர்ச்சி உண்டாகியது. விஷயத்தைப் படித்தாள்.

“தடபுடல் பிலிம்ஸாரின் படுதோல்வி...மாபெரும் நஷ்டம்.... ஸினிமா உலகத்தில் ஒப்புயர்வற்ற சினிமா ராணி ஸ்ரீ அம்ஸா தேவிக்குப் பொறுமைக்காரர்களின் கண் எச்சில் பட்டதன் விபரீதத்தில் மூளைக் கோளாறு கண்டுவிட்டதோடு பிசாசும் வேறு பிடித்து ஆட்டுகிறதாம். இந்த இரண்டு சேஷ்டைகளின் செய்கையின் அறிகுறிகள் சில தினங்களாகவே தெரிந்துவந்ததாம். ஆனால், அதை ஏதோ, என்னவோ என்று எண்ணினார்களாம்.

தலைசிறந்த நடிகைக்கு இத்தகைய ஒரு வ்யாதியும் பேயும் பிடித்தாட்டுவதை ப்ரத்யக்ஷமாக ஸ்டுடியோவில் சகலரும் பார்த்துவிட்டார்களாம். ஸ்டுடியோவில் அந்த நடிகை பயித்திய மும்முரத்தினாலும், பேயின் கொடிய தாண்டவத்தினாலும் பெருத்த சேதத்தை விளைவித்துவிட்டாள். முதலாளியைப் பெரிய தடிக்கம்பினால் தலையில் தாக்கியதால் பலமான அடிபட்டு ஆஸ்பத்ரியில் கொண்டு விட்டிருக்கிறார்கள். மூளையிலேயே அடிபட்டுவிட்டதால் மிக்க கவலைக்கிடமாகவிருக்கிறது என்றும், மூளையே சிதறிவிட்டதாகவும் டாக்டர்கள் நினைக்கிறார்கள்.....

இந்த வரிகளைப் படிக்கும்போது அம்ஸாவின் கண்கள் அகல விரிந்து உள்ளமும் உவகையுடன் மலர்ந்தது. க்ஷணநேரம் அவள் ஒரு புதிய உணர்ச்சியினால் உந்தப்பட்டுத் துள்ளினாள்...“ஹா... என்ன ஆச்சரியம்...என்ன அதிசயம்...நல்ல நிலைமையிலிருக்கும் ஒருத்தியைப் பார்த்துச் சற்றும் கூசாமல் பயித்தியம் என்று சொல்லிய நிலைமையை அந்தச் சண்டாளனே...அனுபவிக்கும்படியாக நேர்ந்ததுபற்றி உள்ளம் பூரிக்கிறேன்...என்று தனக்குள் கூறிக்கொண்டே குதித்தாள். சில நிமிஷங்கள் கழித்து மறுபடியும் பத்ரிகையைப் படிக்க வாரம்பித்தாள்.

டைரெக்டருக்கு மணிக்கட்டில் பலத்த அடியினால் எலும்பே முறிந்துவிட்டதாகத் தெரிகிறது. ப்ரதான பாகமேந்தி நடித்த சினிமா ஜோதி குயிலிக்கு முழங்காலில் நல்ல அடி பட்டுவிட்டதால் ப்ரம்மாண்ட கட்டுடன் ப்ரக்ஞையற்றுக்கிடக்கிறாள். அம்ஸாவின் மூளைக்கோளாறின் படுமோசமான இச்செய்கையினால் ஸ்டுடியோவுக்கும் மற்றையோருக்கும் கட்டுக்கடங்காத நஷ்டங்கள் விபரீதமாக உண்டாகிவிட்டன. இத்தனையும் விளைவித்துவிட்டு பயித்தியக்காரி அம்ஸா ஓடிவிட்டாள்.

பல மூலைமுடுக்குகளிலும் தேடும்படி ஆள்களை ஏவி இருப்பதோடு, அவளுடைய புகைப்படங்களுடன் போலீஸில் எழுதி வைத்திருக்கிறது. பொதுமக்கள் யார் பார்த்தாலும் அவளைத் தேடிக்கொடுப்பவர்களுக்கு ஆயிரம் ரூபாய் இனாம், கம்பெனிக்

காரர்கள் கொடுப்பதாகத் தெரிவிக்கிறார்கள். இதுவிவரமான தகவல் இதுவரையில் ஒன்றும் தெரியவில்லை...

என்று எழுதியிருந்ததைப் படித்ததும் பின்னும் ஒரு புதிய பயமும் நடுக்கலும் உண்டாகிவிட்டது. எந்த சமயம் யார் தன்னைத் தேடிப்பிடித்துவிடுவாளோ! என்று உள்ளுக்குள் பலமான கிலி பிடித்துவிட்டதால் எங்கு பார்த்தாலும் தன்னைப் பிடிக்க ஆள் தூரத்திக்கொண்டு வந்துவிடுவதுபோலவே பயமும் உதறலும் உண்டாகியது. அஸுர பலத்துடனும் கண்மூடி ஆத்திரத்துடனும் தான் செய்துவிட்டு வந்த காரியத்தின் பலன் இத்தனை கொடூரமாகவா முடிந்துவிட்டது. "வேண்டும்...வேண்டும்...எல்லோருக்கும் நன்றாக வேண்டும். என்னை வேண்டுமென்றே அதபாதாளத்தில் தள்ளி மிதித்து மண்ணோடு மண்ணாகும்படிக்குச் செய்த செய்கையின் பலன் முற்றும் உடனே பலித்துவிட்டது. எல்லாவற்றையும் விட குயிலியின் காலும், டைரெக்டர் பாவியின் கையும், முதலாளியின் மூளையும் பாழாகியதை என்னுள்ளம் பரம த்ருப்தியுடன் கொண்டாடுகிறது. நாசம் நினைப்பவர்களுக்கு நாசமேதான் வந்துசேரும்" ...என்று தனக்குள் பலபல விதம் எண்ணியவாறு உட்கார்ந்திருந்தாள். பத்ரிகையில் படித்த சகல விஷயங்களும் அப்படியே கண்முன்பு தெரிவதுபோன்ற உணர்ச்சி உண்டாகியது.

13

பிக்ஷாண்டவர் தரிசனத்திற்காக லட்சக்கணக்கில் ஜனங்கள் அந்த ஊரில் கூடிவிட்டார்கள். தரிசனத்திற்கு முன்னும் பின்னும் ஜனங்கள் அந்த சிறிய நந்தவனம்போன்ற இடத்தில் தங்கி உணவு கொள்ளவாரம்பித்தார்கள். வேஷத்திலிருக்கும் அம்ஸாவின் லஜ்ஜையும் பயமும் நிமிடத்திற்கு நிமிடம் ஏறிக்கொண்டே வருவதால் இனி தான் இங்கிருந்தால் விபத்தாக முடியுமோ என்ற பயத்துடன் அதைவிட்டு எழுந்துபோகவே மனம் தூண்டியது.

தன் செய்கையின் திட்சிண்யத்தால் இத்தகைய பயங்கரமான சேதம் விளைந்துவிட்டதால், கட்டாயம் தன்னை எப்படியாவது தேடிப்பிடித்து தண்டித்தே தீருவார்கள் என்ற ஒரு உள் நடுக்கம் செய்யும் சித்ரவதையின் சங்கடத்தைச் சகிக்கமுடியவில்லை. முன் பின்னறியாத இடத்தில் இந்த வேஷத்துடன் எப்படி......எங்கு செல்வது என்று தெரியாது விழிக்கிறாள்.

இதைவிடக் கேவலமான உடையுடன் மானங்கெட்டு சினிமாவில் நாட்டியமாடியபோது லஜ்ஜை என்பதே தெரியாதிருந்த அதே மனுஷிக்கு இப்போது லஜ்ஜை வேறு உயிரை வாங்குகிறது. தன்னுடைய வேஷத்தின் தொந்தரவால், தான் எந்த கோயிலுக்கும் போக முடியாது தடுக்கிறது. இந்த வேஷம் ஒன்றுதான் அடையாளம் காட்டமுடியாது மறைத்துத் தன்னுடைய பேராபத்தான நிலைமையில் காப்பாற்றும்; இதைக் களைவதற்குமில்லை. தர்மசங்கடமான நிலைமையில் தத்தளித்தவாறு மறுபடியும் வீதியோடு சென்றாள்.

அந்த சிறிய பட்டிக்காட்டில் சட்டைக்காரர்கள் விடேது? இவள் வேஷத்திற்குப் பொருத்தமான மனிதர்களின் உறவுதான் ஏது? இச்சமயம் திடீரென்று தான் முதல் நாள் இரவு தங்கிய கல்லறையின் நினைவு உண்டாகியது. தனது வேஷத்துடன் ஒளிந்து சற்றுநேரம் நிம்மதியாயிருப்பதற்கு அந்த இடந்தான் லாயக்கு என்று தோன்றியதால் வந்த வழியை அடையாளம் வைத்துக் கொண்டு நடக்கவாரம்பித்தாள்.

காலை வெய்யில் ஒருபுறம் உக்ரகமாய் தகிக்கின்றது. முதல்நாள் பட்டினியின் கொடுமையினால் பசி வேறு உசிர்போகிறது. எது எப்படி இருப்பினும் கல்லறைப்பக்கம் போய்விடவேண்டும் என்கிற பிடிவாதத்தினால் வெகு வேகமாகவே நடந்தாள்.

உத்ஸவத்திற்காகப் பலவித மிட்டாய்கள், ரொட்டி, இளநீர் முதலியவைகள் வீதியில் விற்பதைப் பார்த்ததும் பசி பொறுக்காததால் அவைகளை வாங்கிக்கொண்டாள். ப்ரம்மாண்டமான ஏரிக்கரையொன்று தென்பட்டதும் அங்கு கொண்டுபோய் இதைத் தின்றுவிட்டுப் போவதற்காக ஏரிக்குள் இறங்கினாள்.

வேண்டியதைத் தின்று தண்ணீர் குடித்துவிட்டுத் திரும்பும் போது, தன்னுடைய வேஷத்திற்கு ஒவ்வாத ஒரு புடவை தன் கையிலிருப்பது தனக்குப் பேராபத்தாக முடியுமே என்று தோன்றியதால் அப்படியும் இப்படியும் பார்த்தாள். ஆள் நடமாட்டமே இல்லாதிருந்ததால் மூட்டையை அவிழ்த்து பழைய புடவை ரவிக்கை முதலியவைகளை ஏரியில் அமுக்கிவிட்டுத் தன்னைப் பிடித்த பீடை தொலைந்ததாக எண்ணிக்கொண்டு நேராக விருவிரு என்று நடந்தாள்.

இனி எந்த முகாந்தரத்தைக்கொண்டும் தன்னைக் கண்டுபிடித்துக் கொடுக்கமுடியாது என்கிற நம்பிக்கை உண்டாகியது. அதோடு தான் திருடிய கவுன்களில் வண்ணார் முத்திரை இருந்த இடத்தை மட்டும் கிழித்துப் பொத்தலாக்கிவிட்டாள். தான் இரவு இருட்டில் நடந்துவந்த அடையாளத்தை ஒருவாறு நினைவு வைத்துக்கொண்டு நடந்துசென்றாள்.

இருந்தஇடத்தைவிட்டு அசையாத நக்ஷத்திரம், வாசலில் வெளியில் போகவேண்டும் என்றால் முன் பாராவும் பின் பாராவுமாகச் சென்ற நக்ஷத்திரம், மற்ற பொதுஜனங்கள்போல் தான் சுயேச்சையாகப் போவதற்கு முடியாத நிலைமையில் இப்படி இருக்கிறோமே என்று ஒரு காலத்தில் ஏங்கிய நக்ஷத்திரம், காரில் ஜம்மென்று செல்லும்போதுகூட வழி நெடுகலும் "அதோ அம்ஸாதேவி! அம்ஸாதேவி" என்று சினிமா ப்ரியர்கள் கண்வலை வீசிக் காததூரம் ஓடிவந்து பார்த்துப் பெருமைப்படும் நட்சத்திரம்...இன்று அனாதையாய்...சுயேச்சையாய், தன்னுருவையே மறைத்துக்கொண்டமுறையில் கால்போன போக்கில் போவதைக்காண அவள் உள்ளமே வியப்பும் திகைப்பும் அடைந்தது. எப்போதும் மக்களுக்கு அதிக சுகமோ, அதிக துக்கமோ வரும்போதுதான் தம்மையறியாது

பழைய நினைவுகள் முற்றும் தோன்றி அந்த உணர்ச்சியில் மூழ்கச் செய்துவிடும்.

அதேபோல் தன்னுடைய ஆதியருவம் ஒவ்வொன்றையும் மனக்கண்ணாடியில் பார்க்கும்போது, கட்டுக்கடங்காத ஒரு உணர்ச்சி ஆவேசம்போல் அவளை ஊக்கிக்கொண்டு சென்றது. தான் இரவு ஹாட்டு திருடிய இடத்தையும் அதற்குப் பிறகு கவுன்கள் திருடிய இடத்தையும் பார்க்கும்போது திடுக்கிட்டுத் தூக்கிவாரிப் போட்டது. "திருட்டுக்கும் மேற்பட்ட பயங்கரமான பாதகங்களைச் செய்த நானா இப்போது நடுங்குகிறேன்?" என்று தானே க்ஷணநேரம் வியந்தாள்.

கல்லறைப்பக்கம் அவள் இத்தனை ஆர்வத்துடன் வருவதற்குக் காரணம் தன் வேஷத்திற்குத் தகுந்த சட்டைக்காரர்கள் யாரேனும் கிடைப்பார்களா! அருகாமையில் அத்தகையோர்கள் வசிக்கும் இடம் கிடைக்குமா! என்ற ஒரு பெரிய எதிர்பார்ப்பில்தான் இத்தனை தூரம் வந்து சேர்ந்தாள். கல்லறையும் கண்ணுக்குப் புலப்பட்டது. ஆனால், இரவு இருந்த ஒரு பயங்கரமும் நடுக்கமும் இப்போது இல்லை. அதற்குப் பதில் ஒருவித பரபரப்பும் எதிர்பார்ப்பும் இருந்தது. வெய்யில் வேறு தகிப்பதால் வேகமாக நடந்து அந்த இடத்தை அடைந்தாள். சற்று தூரத்தில் வரும்போதே ஏகப்பட்ட ஜனங்கள் தெரிந்ததால் அன்று யாரோ இறந்து, புதைக்க வந்திருப்பதை அறிந்தாள்.

எற்கெனவே ஆங்கிலம் நன்றாகப் பேசவும் படிக்கவும் தெரிந்தவளாதலால் அக் கும்பலில் ஒருவர்மூலம் விசாரித்து, இறந்தது யார் என்பதை அறிந்துகொண்டாள். காலேஜில் படிக்கும் ஒரு சிறுமி திடீரென்று இறந்துவிட்டதாயும் அவளுடைய பெயர் மிஸ் மேரி என்றும் தெரிந்துகொண்டாள்.

மிஸ் மேரியின் சிநேகிதை தானென்றும் மேரி இறந்த செய்தியைக் கேட்டுத்தான் ஓடி வந்ததாகவும் கூறி, தனக்கு நடிக்கத் தெரிந்த சகலவிதமான திறமையையுங் காட்டி ஆங்கிலத்திலேயே பேசிப் பேசிப் புலம்பினாள். இதைப் பார்த்த எல்லோரும் வியப்புற்று ஏங்கினார்கள். மிஸ் மேரியின் அண்ணன் கதறுவதைப் பார்த்து அக்கூட்டமே கரைந்துருகியது.

மேரியின் வயது சென்ற பிதாவே இந்த வேஷக்கார ராணியைக்கண்டு துக்கத்தோடு துக்கமாக "அம்மா! உன்னைப்பார்த்தால் என் கண்மணி மேரியின் சாயலாகவே இருக்கிறது...நீ யாரம்மா! உன்னைப் பெற்ற பாக்யசாலிகள் யாரம்மா!...மேரியை நீ கடைசியாக என்று சந்தித்தாய்?...என் மேரி உன்னிடம் ஏதாவது பேசினாளா?"...என்று புலம்பியவாறு கேட்டார்.

புத்திசாலித்தனத்தை உண்மையில் நல்லவழியில் செலவிட்டிருந்தால் அவளுடைய சொந்தப் பெயராகிய சுசீலாதேவிக்கு இணை இன்று ஒருவருமே இல்லை என்கிற நல்ல பெயரைக் கட்டாயம் வாங்கியிருப்பாள். கோணல் வழியில் புத்தியைப் புகவிட்டபோதி

லும் சாமர்த்தியமும் சமயோசிதமான புத்தியும் அவளுக்கு ச்வாபாவிகமாக உள்ளது மாறவில்லை.

பெரியதாகப் புலம்பிக் கொண்டே..."மேரியை நான் கடைசியாக சென்ற வாரம் காலேஜில்தான் பார்த்தேன். நான் ஒரு அனாதை. எனக்குத் தாயும் இல்லை, தந்தையுமில்லை. ஆஸ்பத்திரியில் உள்ள ஒரு நர்ஸ் என்னை வளர்த்து எனக்குக் கல்வி சிறிது புகட்டிவந்தார்கள். என் துரதிர்ஷ்டத்தினால் அந்தம்மாளும் சென்ற மாதம் இறந்துவிட்டார்கள். மேரி எனது பரிதாபத்தைப் பார்த்துப் புலம்பி அனுதாபத்துடன் சில சமயம் ஆகாரமும் கொடுத்து உடையும் கொடுத்திருக்கிறாள். 'என் பெற்றோரிடம் சொல்லி உன்னை என் வீட்டிலேயே கொண்டு வைத்துக்கொள்ள ஏற்பாடு செய்கிறேன். அடுத்த வாரம் உன்னை நேரே என் பிதாவிடம் அழைத்துக்கொண்டு போகிறேன். எனக்கும் தாயார் கிடையாது. என் பிதா மிக நல்லவர். உன்னை அவர் கட்டாயம் என் வீட்டிலிருக்க அனுமதியளிப்பார். அப்படி அவர் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் நான் என் சிநேகிதர்கள் உறவினர்களிடம் சொல்லி உனக்கு எப்படியாவது ஆதரவு வாங்கிக் கொடுக்கிறேன்' என்றாள். என்னுடைய துரதிருஷ்டந்தான் இப்படியாகிவிட்டது" என்று ப்ரமாதமாக நடித்துப் புலம்பினாள்.

அவளுடைய பிதாவின் துக்கம் உச்சத்தை எட்டியது. "என் மேரியா இப்படிச் சொன்னாள்? என் கண்மணியின் விருப்பம் இதுவா? அப்படியானால் அவள் ஆத்மா சாந்தியடைவதற்காக நான் கட்டாயம் அவள் ஆசையை நிறைவேற்றுகிறேன். அம்மா! உன் பேரென்ன? என் மேரியே என்னுடன்கூட வந்ததுபோல் தோன்றுகிறது! அம்மா! உனக்கு யாருமே மனிதர்களில்லையா... அப்படியானால் நீ இத்தனை நாளாக எங்கு இருந்தாய்?"...என்றார்.

"எனக்கு ஆண்டவன்தான் திக்கு. ஒரு ரொட்டி வ்யாபாரக் கிழவியின் ஆதரவில் இருந்து வந்தேன். அந்த பரிதாபத்தைப் பார்த்துதான் மேரி கண்ணீர் வடித்தாள். ரொட்டிக் கிழவியும் நேற்று ஊருக்குப் போய்விட்டாள். என்னுடைய அனாதைத் தன்மையை என்னுருயிர் மேரியிடம் முறையிடவே ஓடிவந்தேன். வந்த இடத்தில் இத்தகைய இடி இடித்தது போன்ற இந்த செய்தியைக் கேள்விப்பட்டு மேரியின் முகத்தையாவது பார்க்கலாம் என்று இங்கு ஓட்டமாகவந்தேன். அதற்குள் அடக்கமாகிவிட்டது. என் பெயர் ரோஸி என்று கூப்பிடுவார்கள்" என்றாள்.

இதற்குள் சகலரும் கிளம்பிவிட்டார்கள். அங்கு புஷ்பித்திருந்த புஷ்பங்களைப் பறித்து அம்ஸா, மேரியின் சமாதியில் தூவிவிட்டு மரியாதையுடன் வணக்கம் செய்து கதறினாள். அவளையே மேரியின் பிதா தேற்றித் தம்முடன்கூட அழைத்துச்சென்றார். மிஸ்டர் ஜான்ஸனுக்கு பெண்ணைப் பறிகொடுத்த துக்கம் ஒரு புறம், மேரியைப் போன்ற நல்ல சிறந்த அழகுடைய அறிவாளி

யாயும் அனுதையாயும் மற்ருெரு பெண் அதே சமாதியில் கிடைத்து விட்ட ஆச்சரியம் ஒரு புறம் பாதிக்கிறது.

அம்ஸாவுக்கோ தன்னுடைய அத்தனை போதாக்காலக் கொடுமையிலும் ஒரு கடுகளவு அதிர்ஷ்டம் ஒன்று இருப்பதனுல்தான் உயிர் துறந்த ஓர் உத்தமியினுல் தனக்குப் புகலிடமும் பாதுகாப்பும் கிடைத்தது என்ற பெருமிதமான சந்தோஷமும் ஆச்சரியமும் உண்டாகியது.

14

எந்த ஜாதியிலாகட்டும் எந்த மதத்திலாகட்டும் விசித்ரமான சம்பவம் நிகழ்ந்ததென்ருல் அதைப்பற்றிய பலபல வார்த்தைகள் வராமலிருப்பதே இல்லை. மேரியின் மரணத்தைக் குறித்து உபசாரம் சொல்ல வருபவர்களில் பலர் இந்தப் புதிய பெண்ணைக் கொண்டுவந்திருப்பதைப் பார்த்து, வெறுத்துப் பேசினுர்கள்.

தங்கக் கொடிபோன்ற பெண்ணை தாரைவார்த்துவிட்டு, ஏதோ அனுதைப் பீடையைக் கொண்டுவந்து ஏன் குலாவ வேண்டும்? அப்படி வேண்டுமென்ருல் கூடப் பிறந்தவர்களின் பெண்களில்லையா! உற்ருர் உறவினர் இல்லையா! முன்பின் அறியாத இந்தப்பெண்ணை எதற்காகக் கொண்டுவரவேண்டும்? இவள் சொல்லியதெல்லாம் நிஜம் என்று யார் நம்புவது!. மேரியின் சிநேகிதை என்று சொல்லியதே பொய்யோ என்னவோ! இவள் யாரோ...எவளோ?" என்று இழிவு படுத்தியும் கூறினுர்கள். "தன் பெண்ணை இழந்த ஜான்ஸன் இந்தப் பெண்ணை எப்படித்தான் மதித்து அழைத்துவந்தார்? மனது எப்படி இடங்கொடுத்தது? அவள் முகத்தைப் பார்த்தாலே ஏதோ களங்கமுள்ளவளாகத் தெரிகிறதேயன்றி சாதாரணக் கன்னிப்பெண்ணுகத் தெரியவில்லையே!...இந்த ஊர் பேர் இல்லாத பீடை எதற்கு?" என்று சிலர் அம்ஸாவின் காது கேட்கும்படியாகவே கூறினுர்கள்.

ஏற்கெனவே சட்டைக்காரர்களின் வீட்டுப் பழக்க வழக்கங்கள் எதுவும் தெரியாத நிலைமையில் தவிக்கும் அம்ஸா ஒவ்வொருவர் ஒவ்வொரு விதமாகக் கூறுவதைக் கேட்டு சங்கடப்பட்டவாறு தான் என்ன செய்வது என்று மிகவும் கலங்கினுள்.

சாவுக்காக வந்துள்ள ஜான்ஸனின் சகோதரிகளும் இன்னும் சில நெருங்கிய பந்துக்களும் இவளைப் பார்த்துக் குசுமுசுவென்று பேசிக்கொள்வதோடு "இவள் அசல் நம்ப ஜாதியல்ல. இவளுடைய செய்கைகள் முற்றிலும் ஜாதி இந்துவைப் போலிருக்கிறது. பேச்சும் இந்தியர்கள் இங்கிலீஷ் பேசுவதுபோலிருக்கிறது. ஆகையால் கட்டாயம் இதில் ஏதோ மோசம் இருப்பதாகத் தெரிகிறதேயன்றி நம்பிக்கை கொள்ளவில்லை. மேரி படித்த காலேஜில் விசாரிக்க ஆளை அனுப்பியிருக்கிறேன்" என்ருள் ஒருத்தி.

அதற்கு மற்ருெருத்தி "இதில் எனக்கு இன்னெரு பெரிய சந்தேகம் உண்டாகியிருக்கிறது. தடபுடல் பிலிம்ஸ் என்ற சினிமாக்

கம்பெனியை சில செல்வவந்தர்கள் சேர்ந்து லிமிடெட் கம்பெனியாக வைத்திருக்கிறார்கள். அதில் என் கணவரும் பங்குதாரியாவர். அந்த கம்பெனியில் முதன்மை ஸ்தானம் வகித்து நடித்துப் பெரும்புகழ் படைத்துள்ள அம்ஸாதேவி என்பவளுக்கு திடீரென்று பயித்தியம் பிடித்ததாயும், பிசாசு பிடித்துவிட்டதாயும், அவள் ஸ்டூடியோவை ஹதம் செய்து பெரிய நஷ்டத்தை விளைவித்துவிட்டு ஓடிவிட்டதாயும், அதனால் பங்குதாரிகளுக்கு மகத்தான

கஷ்டம் ஏற்பட்டுவிட்டதால் போலீஸாரைக்கொண்டு மூலைக்கு மூலை தேடும்படியும், பிடித்துக்கொடுக்கிறவர்களுக்கு இனும் கொடுப்பதாகவும் பத்ரிகையில் போட்டிருக்கிறது. இவளைப் பார்த்தால் எனக்கு ஏதோ சந்தேகமாகவே இருந்தது. இன்று இவள் குளிக்கையில் கவனித்தேன் ; என் சந்தேகம் ஊர்ஜிதமானதால் உடனே இந்த விவரத்தை எழுதி என் கணவருக்கு அனுப்பியிருக்கிறேன். இப்போது அவர் வந்தவுடனே இவள் கதி என்ன ஆகப்போகிறது என்பதை அண்ணு ஜான்ஸனே நேரில் அறியட்டும். நீங்கள் சொல்ல வேண்டாம். சினிமாக்காரர்களில் சிலருடைய பிழைப்பு ஒரு பிழைப்பா?"........என்று இவர்கள் பேசுவதை, காப்பி கொண்டு வருகையில் கேட்ட அம்ஸாதேவிக்கு வானமே இடிந்து தன் தலை மீது விழுந்ததுபோன்ற அதிர்ச்சி உண்டாயிற்று. பேராபத்து இப்போது தன்னை வந்து சூழ்ந்துகொண்டிருக்கிறது என்பதை அரை க்ஷணத்தில் தெரிந்துகொண்டு சந்தடி செய்யாமல் பின்புறத்து வழியால்,—எங்குபோவது, எப்படிப் போவது, இனி இந்த உடையும் வேஷமும்கூட நமக்கு எதிரியாகிவிட்டதே என்ன செய்வது? என்கிற பயத்துடன் பல சந்து பொந்துக்களைத் தாண்டிக்கொண்டு தலைகால் தெரியாத ஓட்டமாக ஓடுகையில், தான் தன்னுடைய அல்ப ஆசையினுல் ஆதியில் முறைதவறி ஓடியதன் விபரீதம் இன்னும் நன்ருகத் தெரிந்தது.

"எப்போது இந்த கம்பெனியில் பங்குதாரியாக இவர்கள் இருக்கிருர்களோ இவர்கள் இனி கட்டாயம் இந்த உடையிலுள்ள சகலரையும் சந்தேகித்துப் பிடித்தே தீருவார்கள். ஆகையால் இதை மாற்ற வழி செய்துகொள்ளவேண்டுமே" என்கிற கவலை அபாரமாகப் பாதித்தது. "கையிலிருந்த புடவையையும் ஏரியில் எறிந்துவிட்டோமே! இந்த உடையைத் திருடியும், தோல்வியும் அபஜயமும் விடாது துரத்திக்கொண்டுவந்து இன்னும் பலமான முறையில் தாக்கவாரம்பித்துவிட்டதே" என்ற மகத்தான அதிர்ச்சியுடன் செல்கையில் அதிக மனித நடமாட்டமே இல்லாத ஒரு தெரு வழியில் புகுந்தாள்.

"எப்படியாவது ஒருபுடவையும் ரவிக்கையும் திருடி, வடநாட்டினரைப்போல் அணிந்து முகத்தை மூடிக்கொண்டு, எந்த ஒரு சிறந்த ஊரைவிட்டு நாம் ஓடிவந்தோமோ அதே ஊருக்குச் சென்று யார் மூலமாவது நம் பெற்றேரைப்பற்றி விசாரித்து விஷயமறிய வேண்டும். அவர்களுடைய கதி குருடனுகவும் பயித்தியமாகவும் எப்படியாகிவிட்டது, சொத்துக்களும் வீடுவாசலும் என்னவாயின என்பவைகளை அறிந்துகொண்டால் அவர்களை சுலபமாகக் கண்டுபிடித்துவிடலாம்" என்று தோன்றியதால், ஒரு புடவை எங்கு கிடைக்கும் என்று தேடியலையவாரம்பித்தாள்.

தன் சிறிய வயதில் அடிக்கடி அவளுடைய தாயாரும் தகப்பனரும் இவளுக்கு புத்தி சொல்லும் முறையில் "குழந்தாய்! பொய் என்பதே சொல்லக்கூடாது. ஒருபொய் சொல்லத்துணிந்துவிட்டால்

ஒன்றை மறைக்க மற்றொன்று, அதை மறைக்க வேறொன்று: இப்படியாகத் தான் தப்பிக்கொள்ளும்பொருட்டு பொய்யைக் கணக்கில்லாது சொல்லும்படியாக அமைந்துவிடும். முதலிலேயே நிஜத்தைச் சொல்லிவிட்டால் அந்த உண்மையே ஆபத்தையும் பாபத்தையும் விலக்கிக் காப்பாற்றும். ஆகையால் பொய் சொல்லாதேம்மா!

ஒருவன் தீயவழியில் புகுந்து ஒருதரம் சின்ன பலப்பத்தைத் திருடவாரம்பித்தால், அந்த செய்கையின் பலன் பென்ஸிலைத் திருடச் செய்யும். பிறகு புத்தகம், பிறகு சில்லரை இப்படியாகத் திருடி அவன் வாழ்நாள் பூராவும் திருடனாகவே ஆய்விடுவான். ஆகையால்தான் பொய் சொல்லவோ, திருடவோ கூடாது" என்று பலதடவைகள் உபதேசம் செய்திருந்த மந்திரவாக்கின் அமுத ஒலியும் அக் காட்சியும் அப்படியே காலக் கண்ணாடியில் தெரிந்து இவள் இதயத்தைப் பாதாளம்வரையில் துளாவியது. "அன்றே இந்த அமரத்வம் பொருந்திய வாக்கைக் கேட்டு நடந்திருந்தால் என் கதி இப்படியாயிருக்குமா! "தாய்சொல் துறந்தோரு வாசகமில்லை; தந்தை சொல் மிக்க மந்திரமில்லை." என்ற வாக்யங்களைப் படித்தும் அதன் ஸாரமறியாது பாழாகிவிட்டோமே! என்னுருயிர்ப் பெற்றோர்கள் சொல்லிய புத்திமதிகளின் உண்மை எத்தனை ஆழமான தன்மைகளைப் பயக்கக்கூடியது என்பது இப்போதுதானே தெரிகிறது. நானே விபசாரி, நானே ஜாரத்மா, நானே திருடி, நானே மோசக்காரி... அடாடடாடா!... எத்தனை பதங்கள் உண்டோ அத்தனைக்கும் நானே இலக்காகிவிட்டேனே! பெரியார் வாக்கைத் தட்டாது நடந்திருந்தால் நான் எத்தகைய மேன்மையை அடைந்திருக்கலாம்... கைத்தவறி உடைந்த பண்டம் என்றாலும் ஒரு கடுகளவு மன்னிப்பு உண்டு. வேண்டுமென்று உடைத்த பண்டத்தை இனி ஒட்டவைப்பது என்பது இந்த ஜென்மத்தில் இனி உண்டா?"

என்று எண்ணியபடியே போகும்போது, பத்துவயதுச் சிறுமி ஒருத்தி பத்திரிகையொன்று எடுத்துச் சென்றாள். அதில் தன் புகைப்படம் ப்ரம்மாண்டமாக இருப்பது பளிச்சென்று தெரிந்ததும் அதை வாங்கிப் பார்க்க ஆசைப்பட்டு எதிரில் சென்று "பொண்ணு! பத்திரிகையை சற்று கொடும்மா. பார்த்துவிட்டுத் தருகிறேன்" என்று வாங்கிப் பிரித்துப் பார்த்தாள்.

ப்ரபல சினிமா நக்ஷத்திரத்தின் அகோர மரணம்!

என்கிற தலையங்கத்தைப் பார்த்ததும் தூக்கிவாரிப்போட்டது. "மரணமா! அடாடா!... அப்படியொன்று நேருமாயின் என்னைவிட பாக்யசாலிகள் யாருமே இருக்கமாட்டார்களே!"... என்று தனக்குள் எண்ணியபடி விவரத்தைப் படிக்கவாரம்பித்தாள்.

"ப்ரபல ஸினிமா ராணியாகிய அம்ஸாதேவிக்குப் பயித்தியம் பிடித்திருப்பதும், கூட பிசாசும் பிடித்திருப்பதும், அதனால் ஸ்டூடியோவில் பெருத்த நஷ்டத்தை விளைவித்துவிட்டதாயும், அவளைக் காணாது தேடுவதாயும், பத்திரிகைகளில் பார்த்திருக்கலாம். அத்தகைய நட்சத்திரம் மூளைக் கோளாறின் பரிபவத்தால் சேத்தூர் என்

கிற ஊரில் உள்ள பெரிய ஏரியில் விழுந்து இறந்துவிட்டாள். அவளுடைய புடவை அந்த ஏரியில் கிடைத்ததாயும், பிணம் தண்ணீரில் ஊறி அழுகிவிட்டதாயும் கண்டுபிடித்து ஒரு மாட்டுக்காரப்பையன் போலீஸாரிடம் தகவல்தெரிவித்தான். அந்த சேலைதான் அவள் அன்று கட்டியிருந்ததாம் என்று- ஸ்டூடியோவிலும் சரி, மற்ற அவளுடன் பழகியவர்களும் சரி-கூறுகிறார்கள். ஸினிமா ராணி அம்ஸாதேவி என்று அச்சேலையின் கரையில் உயர்ந்த நூலால் வேலை செய்யப்பட்டிருக்கிறது. மூளைக்கோளாறின் செய்கை இது என்று போலீஸார் தீர்மானித்தார்கள். ப்ரபல நடிகையின் முடிவு இத்தகைய பரிதாபகர நிலைமையை அடைந்துவிட்டதுபற்றி அவளுடைய அபிமானிகள் மிகவும் வருந்துகிறார்கள்."...

என்றவரையில் படிப்பதற்குள்ளேயே அவளுடைய இதயத்தில் எழுந்த ஒரு புது உணர்ச்சியின் வேகம் அவளால் கட்டுப்படுத்தவே முடியவில்லை. இதற்குள் அந்தப் பெண் மிகவும் அவசரப்பட்டு பத்ரிகையைக் கேட்டாள்.

அம்ஸா:—பாப்பா! உங்க வீடு எங்கேம்மா இருக்கு, உன் பேரென்ன....நீ என்ன படிக்கிறாய்?

பெண்:—என் பெயர் லக்ஷ்மி, நான் 7-வது படிக்கிறேன். எங்க வீடு பக்கத்துத் தெருவில் இருக்கிறது. ஏன்! எதற்குக் கேட்கிறீர்கள்?

அம்ஸா:—எதற்குமில்லை. அடுத்த தெருவில் ஒருத்தி இப்போது தான் நடுத்தெருவில் ப்ரஸவித்துவிட்டாள். ஒரு துணிகூட இல்லாது கஷ்டப்படுகிறாள் பாவம். ஒரு புடவைக் கந்தல்கூட இல்லாது தவிப்பதைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது. நீ ஒரு சின்ன பழம்புடவை ஒன்று கொண்டுவந்து என்னிடம் கொடுத்தால் நான் அவளுக்குக் கொடுப்பேன். உனக்கும் புண்ணியம் உண்டு. நான் கவுன் போடுகிறவளாகையால் எனக்குப் புடவை இல்லை—என்றாள்.

பெண் சற்று யோசித்தாள்..."ஐயோ! சின்ன பாப்பாவுக்கு குளிர் நடுக்குமில்லையா? எங்கம்மாகூட நேத்துதான் ப்ரஸவித்தாள். எனக்குக் குட்டித்தம்பி பிறந்திருக்கிறான். நான் வீட்டிற்குப்போய் ஒரு வெள்ளைப் புடவையைக் கொண்டுவந்து கொடுக்கிறேன். என்கூட வாருங்கள்" என்றாள்.

சிறுமியின் தயாளத்தனத்தைக் கண்டு வியந்த அம்ஸா, கூடவே சென்றாள். சிறுமி ஒரு புடவையைக்கொண்டுவந்து கொடுத்ததோடு, குட்டி சொக்காய்கள் இரண்டைக் கொடுத்து "இந்தாருங்கள். இதை அந்த பாப்பாவுக்குப் போடுங்கள்" என்றாள். இதுவும் ஒரு அதிருஷ்டந்தான் என்று எண்ணி சிறுமியை வாழ்த்திக்கொண்டே வேகமாக நடந்து மறைந்தாள்.

தன் வேஷத்தை மாற்றிக்கொள்ளத் தனக்கோர் இடம் கிடைக்குமா என்று பார்த்துக்கொண்டே நடந்தாள். ரயில்வே ஸ்டேஷன்தான் தனக்குச் சரியான இடம் என்று எண்ணி அதைத் தேடிக்கொண்டுபோய் அங்குள்ள வெய்டிங் ரூமில் சென்று

வேஷத்தைக் கலைத்துவிட்டு வெள்ளைப்புடவையை குஜராத்தி மாதர்போல் உடுத்திக்கொண்டு கழட்டிய கவுனையும் ஹாட்டையும் மூட்டையாகக் கையிலெடுத்துக்கொண்டு யாரும் பார்க்காத சமயம் மெல்ல நழுவிவிட்டாள்.

உடை கிடைத்து மாற்றிக்கொண்டது ஒரு புறம் நிம்மதியளித்தது என்றாலும், பத்திரிகையில் படித்த விஷயத்தின் ஆச்சரியம் அவளால் நம்பவே முடியவில்லை. இதோடு இனி தன்னை யாரும் தேடமாட்டார்கள். தான் எப்படியாவது தன் ஊரை அடைந்துவிடலாம் என்கிற நம்பிக்கை உண்டாயிற்று. முக்காட்டினால் முகத்தை நன்றாக மூடியவாறு நடக்கவாரம்பித்தாள். கையிலிருந்த மூட்டையை சமயம் பார்த்து ஒரு குப்பைத்தொட்டியில் எறிந்துவிட்டபிறகுதான் அவளைப் பிடித்தாட்டும் பயம் சற்று நீங்கியது.

—o—

15

கிரகரவென்று சூர்யோதயம் ஆகும் சமயம் அம்ஸாதேவி க்ராமத்தை யடைந்தாள். அந்த க்ராமத்தில் எத்தகைய விசேஷமும் கிடையாது. எனினும், ஒரு சிறந்த அம்மன் கோயில் மட்டும் உண்டு. அந்த கோயிலுக்கு ப்ரார்த்தனைக்காகப் பலர் வருவதுண்டு. அந்த முறையில் அம்ஸா, தனக்கு ப்ரார்த்தனை என்றும், கோயில் சுற்றுவதற்காக ஒருவாரம் ஸேவை செய்ய இடமளிக்கவேண்டும் என்றும் கோயில் பூசாரியையே கேட்டாள்.

இதுபோல் பலதிறப்பட்டவர்கள் வருவதால் பூசாரி அதற்கு இசைந்து உதவியளித்தான். எத்தனைதான் தான் மறைத்து மறைத்து மூடிவைத்தாலும், தன்னை ஆதியில் விபரீதப் படுகுழியில் விதி தள்ளியதும், அப்போது தான் இதே க்ராமத்தில் இருந்ததும், தன் தாய்தந்தையர்களி னுருவமுமப்படியே தோன்றிக் குலுக்குகிறது.

தான் வந்த காரியத்தை முடித்துக்கொள்வதிலேயே எண்ணம் துடித்தது. அதே பழய பூசாரி, பழய மனிதர்கள் முதலியவர்களைப் பார்க்கப் பார்க்க ஏதோ கூறத்திறமற்ற சங்கடம் செய்தது. கோயிலிலேயே அன்று கிடைத்த ப்ரஸாதத்தைத் தின்றுவிட்டு, கோயிலையே சார்ந்த ஒரு சிறு குடிசையில் ஸேவார்த்திகள் தங்கும் இடத்தில் இவளும் தங்கினாள்.

குஜராத்திப் பெண்மணி ஒருத்தி வந்திருக்கிறாள் என்றால், அவளைப்பார்க்க கிராமத்துப் பெண்கள் ஏதோ கண்காட்சி பார்ப்பதுபோல் வந்து சேர்ந்தார்கள். அந்தோ! அவர்களில் ஒருத்தி தனது உறவு மனுஷி என்பதைக்கண்டு, தீயை மிதித்தவள்போல் திடுக்கிட்டாள். பின்னும் முக்காடை இழுத்து மூடிக்கொண்டாள்.

வந்தவள்:—நீங்க எந்த ஊரு? உங்க ஜாதியிலேகூட இம் மாதிரி அம்மனுக்கு ஸேவை பண்ணுவது உண்டா? எதற்காகப் ப்ரார்த்தனை சொல்லிக்கொண்டீர்கள்?

அம்:—(இந்துஸ்தானிக்காரர்கள் தமிழ் பேசுவதுபோல் வார்த்தையையும் குரலையும் மாற்றிக்கொண்டு) உக்காருங்கள்... அம்மன், ஸ்வாமி எல்லாருக்கும் பொதுவான தெய்வந்தான். நாங்களும் இந்துக்கள்தானே. இந்த அம்மனைப்பற்றி எங்கள் ஊருக்கு வந்திருந்த ஒருவர் ப்ரமாதமாகச் சொன்னார். என் கணவருக்கு உடம்பு சரியில்லாதிருந்தபோது ப்ரார்த்தனை சொல்லிக்கொண்டேன். அவருக்கு உடம்பு சரியாகிவிட்டதால் அதை நானே செலுத்திவிட்டுப் போவதற்காக வந்தேன்... நீங்கள் இந்த ஊர் தானு? இந்த ஊரில் எதாவது விசேஷம் உண்டா?" என்று தானே ஆரம்பித்தாள்.

வந்தவள்:—ஐயோம்மா! இந்த ஊரிலா விசேஷம் கேட்கிறீர்கள்! அம்மனின் விசேஷமகிமை கிராமம் தோன்றுவதற்கு முன்பு முதல் உண்டாகியது. அதுதான் ப்ரஸித்தி பெற்றது. காலக் கொடுமையின் விபரீதத்தில் இந்த ஊருக்கே மகத்தான இளப்பம் வரும்படியாக ஒரு சண்டாளியால் விசேஷம் நடந்துவிட்டது. (நடந்த சகலத்தையும் சொல்லி) இத்தகைய பாதகியின் செய்கையால் க்ராமத்துக்கே களங்கம் உண்டாகிவிட்டது......

அடடா?...அம்லாவின் உள்ளம் படும் பாட்டைக் கூற முடியுமா! வெகு ப்ரயாஸைப்பட்டு எப்படியோ சகல உணர்ச்சிகளையும் உள்ளடக்கிக் கொண்டு...அப்படியா...ஐயோ பாவம்! அந்தப் படுபாவிப் பெண்ணின் பெற்ருேர்களின் கதி என்ன ஆயிற்று? இருக்கிருர்களா! இறந்துவிட்டார்களா? அப்படிப்பட்ட பெண்ணை உயிருடன் வெட்டி எறிந்தால்கூட பாவமே இல்லையல்லவா....அத்தனை செல்வத்தையும் என்ன செய்தார்கள்!" என்ருள்.

வந்:—வெட்டித்தான் பகவான் எறிந்து கொண்டு வருகிருனே: உயிருக்கு உயிராகிய பெண்ணின் கதி இப்படி ஆய்விட்டதனுல், பெற்ருேருக்கு மனது முறிந்துபோய்விட்டது. இனி இந்த உலகத்தில் இருப்பதுகூட வேண்டாம் என்றும் எண்ணினர்கள். எக்கேடு கெட்டு எருக்கு முளைத்தால்கூட இனி அந்த அல்பாயஸு பெண்ணின் பிணத்து முகத்தில்கூட விழிக்கப்போவதில்லை என்று ப்ரதிக்ஞை செய்துகொண்டார்கள். ஊரெல்லாம் இதே பேச்சு பேசியும் அந்தப் பாவிப்பெண்ணை திட்டியும் வயிறெரிந்து சிலர் சாபமிட்டது ஏற்கெனவே நொந்துபோயிருக்கும் அவள் தாயாருக்கு மனந்தாளாது ஒரே அதிர்ச்சியினல் பயித்தியமே பிடித்துவிட்டது. "என் கண்மணியையா இப்படிச் சொல்வது? என் ராஜாத்தியா ஓடிவிட்டாள்! விபசாரி, துர்த்தை, பதிதை என்று சொல்கிறீர்கள்? நீங்கள் நாசமாய்ப் போகவேணும். அதோ என் கண்மணி என் ஸுசீலாக் கிளி அதோ இருக்கிறது பாருங்கள்"...என்று சதா பிதற்றிக் கொண்டும் அந்தச் சண்டாளப் பெண்ணின் வயதுடைய எந்த பெண்ணைப் பார்த்தாலும் "என் கண்ணே என் ரத்தினமே! என் ராஜாத்தி"...என்று கூறிக் கட்டிக்கொண்டு அழவாரம்பித்தாள். பயித்தியத்தின் செய்கையைக் கண்டு எல்லோரும் பயந்து

அவளைப் பார்க்கவே நடுநடுங்கிப் பயந்து ஓடவாரம்பித்தார்கள். ஒரே ஒரு பெண்ணையும் உயிரோடு பறிகொடுத்துவிட்டு மனைவியின் கதியும் இப்படியாகிவிட்டதால் அம்மனிதனுடைய வயிறுகொதித்தது.

அம்ஸாவுக்கு இதைக் கேட்கக்கேட்க அவளுடைய உணர்ச்சிலை அடக்க முடியாத துக்கம் பீறிக்கொண்டு வந்துவிட்டது. தான் எந்த ஜாதியோ, எந்த மனுஷியோ என்று எண்ணி தன்னிடம் விஷயத்தைச் சொல்லுகையில் தன் குட்டு வெளிப்பட்டுவிடாதிருக்க வேண்டுமே என்ற பயம் வேறு நடுக்குகிறது. எத்தனையோ ப்ரயாசைசெய்து மெல்ல தனது துக்கத்தை அடக்கிக்கொண்டு வெகு ஸ்வாரஸ்யமாகக் கேட்கவாரம்பித்தாள்.

“அந்தப் படுபாவியின் சரிதையைக் கேட்டுக்கேட்டு எங்கள் மனது கல்லுபோலாகிவிட்டது. வெளியில் சொன்னால் வெட்கக் கேடு. அந்த படுபாவிப் பெண்ணுக்கு நான் அத்தைமுறையாக வேண்டும். என் மகனுக்கு அந்த பெண்ணையே கல்யாணம் செய்வதென்ற மனக்கோட்டையை நாங்கள் கட்டிப் பாழாகிவிட்டோம். ஸ்வாமிதான் எங்களை மீத்திவைத்தார். என் மகன் தற்போது கனகபுரியில் கலெக்டராக இருக்கிறான். நல்ல உயர்ந்த குலத்து உத்தமமான பெண்ணை அவனுக்கு விவாகம் செய்திருக்கிறோம். சொர்ண விக்ரகம் போல் இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்திருக்கு. அந்த பாக்யத்திற்கு அந்தப் பெண் காத்திருக்கையில் இந்த மூதேவிக்கு எங்கு கிடைக்கும்? ஓடிப்போன சில மாதத்திற்குள்ளேயே ஸுசீலா என்கிற பெயரை மாற்றி அம்ஸாதேவியாம் அம்ஸாதேவி!......அடுமாண்டுபோனதேவி.......என்ற பெயருடன் சினிமாவில் நடிப்பதாக படத்துடன் விளம்பரங்களைப்பார்த்ததுதான் தாமதம், அரைகுறை பயித்தியமாயிருந்த அவள் தாயாருக்கு விபரீதமாகிவிட்டதால் வீட்டைவிட்டே ஓடத் தடங்கிவிட்டாள். அவள் தகப்பனாரின் உள்ளம் முறிந்து சுக்கல்சுக்கலாக உடைந்த வேகத்தில் காசியாத்திரை போய்விடுவதாக உறுதிசெய்துகொண்டார். “எரிகிற வீட்டில் பறித்தது லாபம்” என்றபடி “நீதான் தேசாந்திரம் போய்விடப்போகிறாய்; உன் குடும்பந்தான் அதோகதியாகிவிட்டது. இந்த வீட்டை எனக்குக் கொடேன். இந்த சாமானை எனக்குக் கொடேன். அந்த நிலத்தை நான் பயிரிட்டுக்கொண்டு ஜீவிக்கிறேன். இந்த பாத்திரத்தை எனக்குக் கொடு”...என்று அவனுடைய உறவு மனிதர்கள் எல்லாம் பிச்சி நச்சரிக்கவாரம்பித்தார்கள்.

பார்த்தார் பாவம்! ‘நன்றி கெட்ட இந்த மனிதர்களுக்குக் கொடுப்பதைவிட வாரிவாரிக் கைசலிக்க ஏழைகளுக்கு வழங்கிவிடுவதே மேல்’ என்று ஒரு மகத்தான த்யாகியைப் போல் துணிந்து, மக்கள்,செல்வம் சகலத்தையும் த்ருணமாக மதித்து,நிலம் புலம் விடு வாசல் சகலத்தையும் விற்று பணமாக்கி, உண்மையான ஏழைக் குடும்பங்களாகப் பார்த்து அதிலுள்ள பெண்ணுக்கோ, பிள்ளைக்கோ தர்மமாக—வித்யாதானத்தையும், உபநயனத்தையும் விவாகத்தையும்,-சாச்வதமாகச் செய்துவைக்கும்படியாக நல்லபொறுப்பு

வாய்ந்த மனிதர்கள் மூவரை அதற்கு தர்மகர்த்தர்களாக நியமித்து, அந்தத் துகைக்கு பாதுகாப்புடன் பாங்கியில் வைக்கவும் வாங்கி செலவுசெய்து கணக்கு ஒப்பிக்கவுமான சாச்வத நிதிபோல் செய்துவிட்டு, மறுதினமே தலையில் துணியைப் போட்டுக்கொண்டு காசியாத்திரை போய்விட்டார். அந்த கிராதகப் பெண்ணால், குல த்ரோகியால் குடும்பம் சிதறிச் சின்னாபின்னமாகிவிட்டது.

பைத்தியக்காரியின் இருப்பிடமே தெரியாது போய்விட்டது. சில வருஷங்கள் வரையில் இரண்டு ஆத்மாக்களைப் பற்றியும் ஒன்றுமே தெரியவில்லை. வைராக்யப் பிழம்பாகச் சென்றுவிட்ட அவர்களை எண்ணிக் கண்ணீர்விட்டு என் கண்களும் பாழாகி விட்டன. சென்ற வருஷம் ஒரு பயங்கர விஷயம் கேள்விப்பட்டேன். அந்த துர்பாக்ய மனுஷ்யர், ஏதோ குடிகாரர்கள் சண்டை இடுவதைப் பார்த்து விலக்கப்போனாராம். அந்த குடியர்கள் ஆத்திரத்துடன் தலை கால் தெரியாது அடித்துக் கீழே தள்ளியதில் ஏசகுபிசகாக நல்ல அடிபட்டு உயிர் போவதற்குப் பதில் கண்கள் போய்விட்டதாயும்,இப்போது குருட்டுப் பிச்சைக்காரனாக பிச்சைக் காரக் கூட்டத்துடனே வாஸம் செய்வதாயும், அந்த நிலை தனக்கு ஏற்பட்டதைக்கூட தான் சந்தோஷமாக நினைப்பதாகவும், அந்தப் பாழும் பெண்ணை இனி கண்ணால் பார்ப்பதில்லை என்று அன்று சத்யம் செய்தவர் அச்சண்டாளியை பத்ரிகையிலும், நோட்டீஸிலும், தெருத்தெருவாய் நாய்போல் அலையும் விளம்பரப் பலகைகளிலும், சுவரொட்டியிலும் பார்க்க நேர்ந்ததையே அவர் பெரிதும் வெறுத்து வயிறெரிந்து கண்ணை மூடிக்கொண்டு போனதாயும், இப்போது கண்ணவிந்துவிட்டதனால் இத்தகைய வயிற்றெரிச்சல் உருவங்களைக்கூட காணாது நிம்மதியாயிருக்கும்படி பகவான் அருள் செய்துவிட்டார் எனறு ஆனந்தப்படுவதாகவும் கூறுகிறாராம்.

அவர் சொத்துக்களை தர்ம கைங்கர்யத்திற்காக வைத்த நிதியின் மூலம் எத்தனையோ ஏழைகளின் கல்யாணம் நடந்து சுகமாக இருக்கிறார்கள். அவர் பெத்து வளர்த்து ஆயிரங்காலத்துக்கு எப்படியோ இருக்கப்போவதாக மனக்கோட்டை கட்டிய ஆசையை நிராசையாக்கிவிட்டு, நாசகாலி தானும் கெட்டு தன் வம்சத்தையும் நாசமாக்கி உலகம் உள்ளளவும் பழிக்கும் வசைக்கும் சாச்வதமாக்கி விட்டுத் துலைந்த பெண்ணை எமன்கூட கண் திறந்து பார்க்கவில்லையே? அந்த படுபாவி செத்தாள் என்று என்றாவது கேள்விப்பட்டால் போதும் என்று நாங்கள் ப்ரார்த்தனை செய்கிறோம்.

எமனுக்குக்கூட அந்த நாற்றக் குப்பை வேண்டியிருக்கவில்லை. ஆகையால் பீடைப் பிண்டம் லோல்பட்டு சந்திசிரித்து நாயினும் கேடாக அலைந்து பலநாள் காரியுமியப்பட்டல்லவா அவள் சாக வேண்டும்?...அந்த மூதேவியே ஒரு பெரிய ப்ரம்ம ராட்சஸி. அவளைப் போய் பிசாசு பிடித்திருப்பதாயும், பயித்தியம் பிடித்திருப்பதாயும் எங்கேயோ ஓடிவிட்டதாயும், பிறகு ஏரியில் பிணம் அழுகிக் கிடந்ததாயும் பத்திரிகையில் என் கணவர் படித்துச் சொன்னார்.

உண்மையில் அவள் "செத்திருந்தால் நான் பால்சோறு" தின்பேன். அவளாவது சாகவாவது? அவள் செத்தே இருக்கமாட்டாள். இதெல்லாம் விண் கட்டுக்கதை. சில பத்திரிகைக்காரர்கள் வ்யாபார தந்திரத்திற்காக போடும் விஷயங்களில் இதுவும் ஒன்ருகத்தான் இருக்கும். அவளாவது உலகத்தை விட்டுப்போவதாவது என்று தான் எனக்கும் தோன்றுகிறது. மற்றவர்களும் அப்படித்தான் சொல்கிருர்கள். இதில் இன்னெரு வெட்கக்கேட்டை நேற்றைய

பத்ரிகையில் பார்க்கவில்லையா அம்மா!...என்று இத்தனை நேரம் பேசிக்கொண்டிருந்த அம்மாளின்பெண்,

"அந்த அல்ப நாயி, சட்டைக்காரி வேஷம்போட்டுக்கொண்டு யார் வீட்டிலோ புகுந்துகொண்டாளாம். அங்கு அந்த சினிமாக் காரன்களில் ஒருவன் மனைவி இவளைக் கண்டுபிடித்துவிட்டதாயும், அதற்குள் அவள் காணுது ஓடி விட்டதாயும், அம்ஸா இறந்துவிட்ட தாகப் பத்ரிகையில் வந்துள்ள செய்தி சுத்த பொய் என்றும், போலீஸார் அவளை மும்முரமாகத் தேடுவதாயும், அவளை யார் கண்டு பிடித்துக் கொடுத்தாலும் இனும் கொடுப்பதாயும் எழுதியிருக்கிறது. இதை நீ பார்க்கவில்லையாம்மா? நீ சொல்கிறபடி அவள் சாகவு மில்லை; வேகவுமில்லை. மானங்கெட்ட நாயிக்கு இனி சாவு வந் தால்கூட ஆதிசயமில்லை. எம்மா! இந்தமாதிரி அனியாயங்கள் உங்கள் நாட்டில் கூட நடக்கிறதா!" என்ருள்.

தான் இத்தனை தினங்களாகப் பத்ரிகையே பார்க்காதிருந்த குறைதீர சகல விஷயமும் அவர்களால் தெரிந்துகொண்டதும், பய மும் கவலையும் அதிகரித்ததேயன்றி நிம்மதி ஏற்படவில்லை. தான் எதிரிகளின் கையில் அகப்பட்டுக்கொண்டால் கட்டாயம் தண் டனை பெற்றுப் பின்னும் ஊர் சிரிப்பது நிச்சயம். அதனுல் தன்னு டைய லக்ஷ்யம் ஈடேருது நாசமாகிவிடும். ஆகையால், தான் எந்த காரியத்தை நாடிவந்தாளோ அந்த காரியம் கைகூடி விவரம் புரிந்து விட்டது. இனி இங்கிருப்பதுகூட ஆபத்தாக முடியும். தப்பித் தவறிக்கூட இனி இங்கிருக்காது ஓடவேண்டும்...என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டு தனது உணர்ச்சி பூராவையும் கட்டுப்படுத் திக்கொண்டு ஒரு பெரிய மூச்சுவிட்டாள்.

"ஊம்...நியாயம் அனியாயம் இரண்டும் எல்லாஜாதியிலும் எல்லா தேசத்திலும் இருக்கிறது. அதேபோல் வடநாட்டிலும் எத்தனையோ குடும்பங்களில் இந்த ஸினிமாப் பூதம் பெரிய விபரீதங் களைச் செய்திருக்கிறது. நல்லது பரவுவது வேணுமானல் கஷ்டம். தீயது பரவுவதற்கு எத்தனை நாழி வேண்டும்" என்று மெல்ல சிர மப்பட்டு வேதாந்தம் பேசும்போது அந்தம்மாளுடைய, வீட்டிற்கு யாரோவந்திருப்பதாக ஆள்வந்ததும் அவர்கள் போனர்கள்.

தான் நாடிவந்த காரியம் வெகு சுலபமாக முடிந்துவிட்டதும், இனி தனது கடமை எது...என்ன வழியில் பாடுபட்டால் தன் பெற்றேர்களைப் பார்க்கலாம்...என்று வீராவேசம் பிறந்ததேயன்றி, தான் தற்கொலை செய்துகொண்டு சாக ப்ரியப்படவில்லை. அதோடு, தன்னைச் சட்டைக்காரிகள் வீட்டில் கண்டுபிடித்துவிட்டதாயும், தான் இறந்ததாக வந்துள்ள செய்தியை நம்பவில்லை என்றும், புதிய விஷயத்தை இங்கு கேட்டதும் அதுவேறு குழப்பமானதால், உடனே ஊரைவிட்டுப்போகவேண்டும் என்று தீர்மானித்தாள்.

இத்தனை நாட்களை விட இப்போதுதான் தன் அவகேடான பிறப்பின் கேவலம் நன்ருகத் தெரிந்து தன்னையேதான் வெறுக்கும் படியான எண்ணமும் உணர்ச்சியும் உண்டாகித் துடிக்கச்செய்தது.

பூசாரி, அம்மன் கோயில் திருப்பணியை முடித்துக்கொண்டு கதவுகளைத் தாளிட்டுப் பின் தன்னிருப்பிடம் சென்றான். மனம் நிலை கொள்ளாது தவிக்கும் அம்ஸாவுக்கு அந்த இரவு நேரத்தையும் கருத்த இருளையும் மேகம் கவ்விக்கொண்டு பயங்கரமாக இருக்கும் வானத்தையும் நிச்சப்தமான நிலைமையையும்... ஆங்காங்கு, நாய் குரைத்து நரி ஊளையிட்டுத் திடுக்கிடச் செய்யும் கோர சப்தங்களைக் காணக்காண, சுசீலாவுக்கு (இனி பழய பெயராகிய சுசீலா வென்றே அழைப்போம்) தான் இவ்வூரைவிட்டு ஓடிவிட்ட அதே இரவின் நினைவுதான் முதலில் நினைவுக்கு வந்ததோடு, காலக் கண்ணாடியில் அன்றய சம்பவத்தையும் இன்றய சம்பவத்தையும் பளிச் சென்று எடுத்துக்காட்டியது.

இன்று பயங்கரமாயும், குடல் நடுங்கும்படியாயும் உள்ள இதே இரவு அன்று சுந்தரத்துடன் ஓடிப்போவதற்கு எத்தனை ஒத்தாசையாயும், இருட்டும் மழையைக்கூட்டும் கருமேகமும் எத் தனை சந்தோஷமாயும் இருந்தது என்பதை நினைக்க, அவள் தேகம் தீப்பிடித்து எரிவதுபோல் சகிக்க இயலாத வேதனை செய்து பின் னும் குத்திக் குத்திக்காட்டியது.

"அன்றே, இன்று தோன்றுவதுபோல் பயமும் உணர்ச்சியும் தோன்றியிருக்குமாயின் என் கதி இப்படியிருக்குமா? எனக் காகவே உயிர்வாழ்ந்த என் தாய் தந்தையரின் கதி இம்மாதிரி சரித்திரங்களிலேகூடக் காணாத முறையில் படுமோசமாகி இருக் குமா? எல்லாம் நாசமாகிச் சந்தி சிரிக்கச் செய்தது முற்றும் அப் பாழும் சினிமா மோகமல்லவா?... அந்தப் பாழ் நரகத்தில் வீழ்வதற் காக சகலத்தையும் துறந்து மதியிழந்து மதிப்புக் குலைந்து பாவி சண்டாளி, ராக்ஷஸி, விபசாரி என்ற பெயர்களைத் தாங்கி, கேவலம் கொலைகாரர்களைப்போல்.........கள்ளியைப்போல், வேஷங்களில் மறைந்துகொண்டு ஒளிந்து ஒளிந்து வாழ்வேனா? சீச்சீ! காரி உமிழ கால் பணம் கொடுக்கவேண்டிய வாழ்க்கையை எனக்கு நானே தேடிக்கொண்ட செய்கையானது ஆனை தன் தலையில் தானே மண்ணைப்போட்டுக்கொண்டதுபோலாகிவிட்டது...

எந்த ஒரு அல்ப ஆசைக்காக நான் என் கடமைகளை, பெண் தர்மங்களை, பெற்ற தாய் தந்தைகளை மறந்தேனோ, எந்த ஒரு மோகத்திற்காக நான் படுதோல்வி யடைந்தேனோ, இனி என் ஜென்மத்தில் அந்த ஆசைகளை அறவே த்யாகம்செய்து நான் செய்த துராக்ருதத்திற்கு ப்ராயச்சித்தமாய்... கடுகளவு பரிகாரமாய், சகல விதமான போகபாக்யங்களையும் துறந்து, அசல் சன்யாசினிபோல் காலம் உள்ளளவும் தூய வாழ்க்கை நடத்தியபடியே என் பெற் றோர்களைத் தேடிப்பிடித்து அவர்களுடைய காலடியில் பணிசெய்து என் பாபத்தைப் போக்கிக்கொள்கிறேன். இதுவே சத்யம்...

ஏ கிராமத்தாயே! அம்மா; உன் பாதத்தின்மீது ஆணையாக இனி உலகபாசம் எதிலும் இம்மனத்தைச் செலுத்தாமல் என்னைக் காப்பாற்று. பக்தியற்று வரண்டு சூனியமாயிருந்த இந்த உதவாக் கரை இதயத்தில் பக்தி என்கிற விதையை விதைத்துத் தருமப் பயிர்

செழிக்க அருள்புரி. என்னைப்போல் சீரழிந்த பாவிகளும் இல்லை, என்னைப்போல் வைராக்ய சீலவதியும் இல்லை.....என்று இரண்டு வகையிலும் உலகம் என்னை உதாரணங் கூறும்படியான வரனைக் கொடு; தாயே! இன்றளவும் என்னை நிர்க்கதியாக்கிய சினிமாவில் பக்திபரவசமாக நடிக்கும் பாகத்தில் நான் நடிக்கும்போதுங்கூட நடிப்பு உயர்ந்த ரகமாக இருக்கவேண்டும், பாட்டு அபார இனிமை யுடன் விளங்கவேண்டும் என்கிறபாவனையில் நடித்தேனே யன்றி, என்னுடைய இதயத்தில் அப்போதுகூட பக்தி என்பதே உண்டாகவில்லை. தெய்வத்தின் முன்பு நான் நடிப்பதாகக்கூட நினைக்கவில்லை. கேமராவும் முதலாளியும் டயரெக்டரும் மெச்சும் வகையில்தான் என் நடிப்பு முடிந்தது....

தாயே! அம்மணீ! புவனேச்வரித் தாயே! இனி சத்தியமாக நான் துறவியைப்போலவே வாழ்க்கையை வகுத்துக்கொண்டு விட்டேன். இது சத்யம், என்னைக்காப்பாற்று. என் பெற்றோரை எனக்குக் காட்டிக்கொடு" என்று ஆவேசத்துடன் அம்மனின் சன்னிதிக்குமுன்பு கூறி மண்டியிட்டுச் சபதம்செய்துகொண்டாள். அவள் உடம்பு பூராவும் வெயர்வை குபீரென்று வேர்த்து நீராட்டி யதுபோல் வழிந்தது. உலகமே கடகடவென்று தட்டாமாலை சுற்றுவதுபோல் ஒருதோற்றம்.....படுபாவி! நீயா சபதம் செய் கிறாய்? மானங்கெட்டவளே!"..என்று இயற்கையின் அசரீரி வேறு தன்னை இடித்துக்காட்டி ஏளனம் செய்வதுபோல் ஒருதோற்றம் உண்டாகி, நடுங்கியது.

தடதடவென்று எழுந்து நடக்கவாரம்பித்தாள். "உன் சபதம் நிலைக்குமா? நிறைவேறுமா!...நிலைக்குமா? நிறைவேறுமா!" என்று பலகுரல்கள் ஏககாலத்தில் கூவிக்கேட்டு கை கொட்டிச் சிரிப் பதுபோல் தோன்றி கதிகலங்கச்செய்யும் பயங்கரத்தில் நடை விறுவிறு என்று பறந்தது.

வைக்கோல் சுமைகளை ஏற்றிக்கொண்டு சுமார் 10 கட்டை வண்டிகள் எறும்பூருவதுபோல் ஊர்ந்துகொண்டு போவதைச் சற்றுதூரம் சென்றதும் அறிந்து, கடைசீ வண்டியின் பின்புற மாகவே நடந்துகொண்டிருந்தாள். அப்போது இரவு 12 மணி இருக்கும். தூங்கிவிழுகிறார்கள். மாடுமட்டும் வழியோடு மெல்ல போய்க்கொண்டிருந்தது.

புலபுல வென்று பொழுது விடிவதற்கும் வைக்கோல்வண்டிக் காரர்கள் கண்விழிப்பதற்கும் சரியாகிவிட்டது. அவர்கள் ஒரு வரோடொருவர் பேசிக்கொண்டதிலிருந்து சமீபத்தில் ஏதோஒரு மடம் இருப்பதாயும், அம்மடத்தில் கோ சம்ரக்ஷணமே முக்யமாக நடத்துவதாயும், பாலைக்றந்து பல ஏழைக் குழந்தைகளுக்கும் ஆஸ் பத்ரியிலுள்ள நோயாளிகளுக்கும் பகிர்ந்து தர்மத்திற்குக் கொடுப்ப தாயும் தெரிந்ததும், இத்தனை அவகேடான நிலைமையிலும் கேவல மான ஜென்மத்திலும், ஒரு எதிர்பாராத ஆனந்தமும் ஒரு பா பரப்பும் உண்டாகியது.

மகாத்மாஜீ ஸேவா சங்கம்

ஸ்ரீகீதாசாரியன் திருவருளால் நமது ஸேவா சங்கக் குழந்தைக்கு இம் மாதம் இரண்டாவதாண்டு வெகுவெகு ஆனந்தமாகப் பிறந்துவிட்டது. இந்த ஒரு வருஷத்தில் இச் சங்கம் தனது கடமைகளை எத்தனை சிறப்புடன் செய்து பொதுமக்களின் அன்பையும் ஆதரவையும் பெற்று வளர்ந்திருக்கிறது என்பதை அவ்வப்போது மோகினியின் வாயிலாக வெளியூர் சகோதர சகோதரிகள் அறிந்து தமது பாராட்டுக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். சில சகோதரிகள் தமது ஊர்களில் இம்மாதிரி சங்கங்கள் நிறுவி இதைப் பின்பற்றி வேலை செய்யவேண்டுமென்றும் அதற்கான முறைகளைத் தெரிவிக்கவேண்டும் என்றும் எழுதியிருக்கிறார்கள். சிலர் நேரிலும் வந்து கேட்டிருக்கிறார்கள். அடுத்த இதழில் சங்கம் ஒரு வருஷம் செய்த வேலைகளின் முழு விவரங்களும் விரிவாகவும், புகைப்படங்களுடனும், வருஷக்கொண்டாட்டம் நிறைவேறிய ஆனந்தக்களிப்புடனும் வெளியிடப்படும்.

டிசம்பர் இதழில் தெரிவித்த பிறகு, சங்கத்தின் கஸ்தூரிபா வாசகசாலைக்கு அன்புகூர்ந்து புத்தகங்கள் உதவியுள்ள, ஸ்ரீமான் ராவ்பகதூர் P. ஸம்பந்த முதலியார், ஸ்ரீமதிகள் T. சுபத்ரா, ருக்மிணி குப்பண்ணா, "ஜகன்மோகினி" காரியாலயம் முதலியவர்களுக்கு சங்கத்தின் சார்பாக மனமார்ந்த வந்தனங்களைத் தெரிவிக்கின்றேன். இதுபோல் இன்னுமுள்ள சகோதர சகோதரிகளும் புத்தகங்களை உதவி அறிவு வளர்ச்சிக்கான பேருபகாரத்தைச் செய்யும்படி வேண்டுகிறோம்......பத்ரிகாசிரியர்களும் தமது பத்ரிகைகளை தயவுசெய்து கஸ்தூரிபா வாசகசாலைக்கு உதவிபுரியுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சங்கத்தின் மணிவிளக்கை என்றென்றும் மங்காத சுடர்விளக்காய் ப்ரகாசித்துப் பல அரிய காரியங்களைச் செய்துப் பயன்பெறவேண்டி, கீதாசாரியன் அருளையும், சகோதர சகோதரிகளின் பேராதரவையும் கோருகிறேன்.

இங்ஙனம்,

வை. மு. கோதைநாயகி (*காரியதரிசி.*)

மஹாத்மாஜீ ஸேவா சங்கமும் மோகினி வெள்ளி விழாவும்

ஜி. ஆர். ஜெயலக்ஷ்மி
துணைக் காரியதரிசி

சமீபத்தில் கொண்டாடப்பட்ட வெள்ளிவிழா வைபவத்தில் ஆசிரியை பெற்ற கலாரத்தின, கலாசேவகி, கதையரசி என்ற பட்டங்களைக் கண்டு நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். நம் ஆசிரியை தளரா ஊக்கம் உடையவர், இடைவிடா முயற்சி உடையவர். எடுத்த காரியத்தை தொடுத்து முடிக்கும் ஆற்றல் உள்ளவர். சிறந்த உபகாரி. சேவை செய்வதில் ஆர்வம் உள்ளவர். காந்தியத்தில் பற்றுள்ளவர். உள்ளும் புறமும் ஒன்றுபட்டுத் தொண்டுசெய்பவர். அவரே நம் சங்கத்தின் அன்னையுமாவர். சங்கத்தின் முன்னேற்றத்திலேயே கண்ணும்கருத்துமாயிருப்பவர். சங்கக்குழந்தை நாளுக்கு நாள் நன்றாக வளரவேண்டும் என்ற எண்ணம் மிகுந்தவர். அன்னாரை கௌரவிக்கும் சந்தர்ப்பம் இத்தனை விரைவில் நமக்குக் கிடைத்தது நம் அதிருஷ்டமேயாகும்.

சென்ற வருஷம் மார்ச் மாதம் 7-ம் தேதி பிறந்த இக்குழந்தை இந்த வருஷம் மார்ச் மாதம் பிறந்திருக்குமானால், இன்று நம் சங்கமும் சங்கத்தின் அங்கத்தினர்களும், பாலிகைகளும் அடைந்துள்ள அபரிமிதமான சந்தோஷத்தை நாம் பார்த்திருக்கமுடியுமா? எல்லாம் ஈசன்செயல் என்பது இதிலிருந்து தெரிகிறது.

வெள்ளிவிழாவைபவத்தை நினைக்க நினைக்க எனக்கு ஒன்று ஞாபகத்திற்குவருகிறது. ரதோத்ஸவம் ஸேவிப்பதற்கு எல்லோருக்கும் ஆசைதான். கோயிலும் உண்டு, அழகிய விக்ரகமும் உண்டு, பக்தகோஷ்டிகளும் உண்டு. எது இருந்தும் மூலைக்கு ஒன்றாக இருந்தால் விழா நடக்குமா? அல்லது பகவானை ரதத்தில் ஆரோகணிக்கச் செய்துவிட்டால் மாத்திரம் ரதம் நகர்ந்துவிடுமா?

பொதுமக்கள் பக்திசிரத்தையுடன் ரதத்தை இழுத்தால்தான் ரதம் பவனிவந்து நிலைக்குத் திரும்பிச் சேருமேயல்லாது மனதினால் நினைத்தால் மாத்திரம் காரியம் பூர்த்தியடையாது. அதேபோல் ஜகன்மோகினி என்கிற பிம்பத்தை வெள்ளிவிழா என்கிற ரதத்தில் ஆரோகணிக்கச்செய்து, பொதுமக்களாகிய நாம் ராஜாஜி ஹாலிலேயே இடம் போதாமல் திணறும்படியாகச் செய்து, ரதோத்ஸவத்தை ஜமாய்த்துவிட்ட பெருமை சென்னைப் பெண்மணிகளாகிய நமக்கே உரியது.

சங்க அங்கத்தினர்களின் ஆசையோ அதிகம். இவ்வெள்ளி விழாவில் நம் சங்கம் பாலிகா கழகத்தினரால் தன் அன்புக் காணிக்கையைச் செலுத்தியது. சங்க அங்கத்தினரால் பட்டமளித்து மகிழ்ந்தது. சிறு குழந்தையானாலும், தன் ஆடல்பாடல்களால் சபையோரை சந்தோஷமடையச்செய்தது. இம்மாதிரி அரிய சந்தர்ப்பம் நமக்குக் கிடைத்தது அருமையே.

ஸ்ரீமதிகள் A. கிருஷ்ணுபாய், ஜயலக்ஷ்மி திருவேங்கடாசாரி, கண்ணம்மாள் ராஜகோபாலன் மூவரும் முன் நின்று சங்கத்தின் சார்பான பரிசுகளுக்காக வசூல் செய்த ஜாபிதா கீழேயுள்ளது.

ரூ. 10. வீதம் அளித்தவர்கள்—ருக்மிணி லக்ஷ்மீபதி. C. ஸரஸ்வதி பாய். ஜெயலக்ஷ்மி திருவேங்கடாச்சாரி. M. J. ரங்கநாயகி. ராஜம்மா தேவாஜி ராவ். கண்ணம்மாள் ராஜகோபாலன். G. R. ஜயலக்ஷ்மி.

ரூ. 5. வீதம் அளித்தவர்கள்—சகோதரி சுபலக்ஷ்மி. M. O. ஜானகி அம்மாள். V. ரங்கநாயகி. டாக்டர் விசாலாக்ஷி. K. சுலோசனா. கமலாம்பாள். ஜானகி அம்மாள். C. ஸரஸ்வதி அம்மாள். R. ஜயலக்ஷ்மி அனந்தநாராயணன்.

ரூ. 3. வீதம் அளித்தவர்கள்—ஜானகி அம்மாள். Mrs சர்மா.

ரூ. 2. வீதம் அளித்தவர்கள்—C. கிருஷ்ணவேணி. J. ஜானகி. A. ஸரோஜா. K. லக்ஷ்மி அம்மாள். பங்கஜ அம்மாள். S. லக்ஷ்மி.

ரூ. 1—8—0 அளித்தவர்—M. S. அமிர்தவல்லி.

ரூ. 1. வீதம் அளித்தவர்கள்—K. R. ராதா. இந்திராபாய். லக்ஷ்மி நரஸு நீலகண்ட சாஸ்திரி. சுபத்திரா. C. S. லீலாபாய். லீலா பால சுப்ரமண்யம். D. பத்மா அம்மாள். P. ஸத்யவதி. P. ஸரஸ்வதி. M. A. வேதவல்லி. T. G. ருக்மணி கண்ணம்மாள்.

ஸ்ரீரங்கம் சடகோபாச்சாரி. ஜயம்மாள். P. S. வேதவல்லி. புஷ்பா ருக்மணிபாய். S. C. லக்ஷ்மி அம்மாள். பார்வதிபாய், சாந்தாபாய் C. ராஜேச்வரி. Mrs. T. A. ஸ்ரீநிவாசன். ருக்மிணி அம்மாள் V. M. புஷ்பா. T. S. ஜயலக்ஷ்மி. E. P. ஸ்ரீரங்கம். A. கிருஷ்ணு பாய். M. R. எதிகிரி அம்மாள். G. லலிதா. M. D. குட்டி அம்மாள். M. C சகுந்தலா. M. G. ஜானகி. T. A. கனகம்மாள் ஜகன்னுதாச்சாரி. S.A. ஆண்டாள் அம்மாள். A. ராஜம்மாள்.

ரூ. 0—12—0 அளித்தவர்-G. சுந்தரவல்லி.

அணு 8 வீதம் அளித்தவர்கள்— K. வேதவல்லி. K. M. ராஜலக்ஷ்மி. தேவகுஞ்சரி. சகுந்தலா. அம்ருதம்மாள். D. ராஜம். L. A. விசாலம். B. M. ஜயலக்ஷ்மி. J. பத்மா. S. ஞானம்பாள். எதிராஜம்மாள். T. அம்மணி அம்மாள். லக்ஷ்மி அம்மாள். வத்ஸலா. கௌஸல்யா வெங்கடாச்சாரி. M. G. நாகமணி. R. A. சுசீலா. T. D. நாகமணி. S. கிருஷ்ணுபாய். M. G. செல்வ நாயகி. P. B. ராஜ லக்ஷ்மி. N. செல்லம்மாள். M. P. பத்மா. பட்டம்மாள். ஸீதாபாய். விட்டலாபாய். ராஜாமணி. கங்குபாய். N. லக்ஷ்மி கொண்டய்யா. D. சகுந்தலா. பாபம்மாள். ராஜேஸ்வரி. கண்ணம்மாள். அமிருதம்மாள். சௌந்தரவல்லி. மங்கா. மாதவி. சாந்தாபாய் மாதவராவ். ராஜலக்ஷ்மி. D. செல்லம்மாள். K. ராஜ லக்ஷ்மி. V. R. ஜயம்மாள். K. N. ஜானகி. P. B. ரங்கநாயகி. M. J. பட்டம்மாள். T. V. ராஜலக்ஷ்மி. V. இந்திரா. V. ஸ்ரீமதி. T. A. பத்மாஸனி. T. A. பத்மா. V. இந்திரா. காவேரிபாய். கோமதி. 0—6—0 அளித்தவர்—லக்ஷ்மி. 0—4—0 அளித்தவர்— P. B. பொன்னம்மாள். K. பங்கஜவல்லி.

ரூ. 7—5—0 அணு சேகரித்து அளித்தவர்கள்—நமது சங்கத்தின் பாலிகா கழகத்துச் சிறுமிகள்.

இன்னும் ஒரு வயதுகூடப் பூர்த்தியாகாத நம் சங்கம் இன்னும் பல துறைகளில் அனேக பெரிய பெரிய காரியங்களைச்செய்து வெற்றியடைந்திருக்கிறது.

சாதாரண குழந்தைகளை வளர்ப்பதற்கு எத்தனையோ உபகரணங்கள் வேண்டியிருக்கிறது. இச் சங்கமாகிய குழந்தை செழிப்புடன் மேன்மேலும் சிறந்து விளங்குவதற்குப் பல உபகரணங்கள் தேவை. அதில் மிகவும் முக்யமானது உங்கள் பேராதரவு. குழந்தையின் பிறந்த தினத்திற்கு நீங்கள் செலுத்தவேண்டிய காணிக்கை பழைய மெம்பர்கள் அத்தனைபேரும் புதுவருடச் சந்தாவை முழு வருஷத்திற்குச் சேர்த்து கட்டிவிடுங்கள்; அல்லது 6 மாத சந்தாவாகவாவது கட்டிவிடுங்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு புது மெம்பரைச் சேர்த்துக்கொடுத்து உங்களுடைய பெரிய ஆதரவைக் கொடுப்பதுதான் நீங்கள் செலுத்தவேண்டிய பெரிய காணிக்கை.

இவ்வளவு சிறிய நம் சங்கக் குழந்தை பெரிய பெரிய காரியங்களைச் செய்யும்பொழுது, உங்களுடைய பேராதரவினுல் இன்னும் எத்தகைய பெரிய காரியங்களைச் செய்யப்போகிறது என்பதை நீங்கள் பிரத்யட்சமாகக் காணலாம்,

உலகம் கண்ட நல் நாட்கள்

மாசித் திங்கள்

அந்தமிழால் நற்கலைகள் ஆய்ந்துரைத்த ஆழ்வார்கள் இந்த உலகில் இருள்நீக்க வந்துதித்த மாதங்கள் நாள்கள் தன்னை மண்ணுலகோர் தாமறியத் தீது அகல நிற்கும் திரு.

இந்த மாதம்

இந்த மாசி மாதத்தில் அவதரித்த ஆழ்வார்—ஸ்ரீ குலசேகரப்பெருமாள்; ஆசார்யர்—திருக்கச்சி நம்பிகள்.

ஸ்ரீகுலசேகரப் பெருமாள்:

மாசிப் புனர்ப்பூசம் காண்மின் இன்று மண்ணுலகீர்!
தேசுஇத் திவசத்துக்கு ஏதென்னில்—பேசுகின்றேன்
கொல்லி நகர்க்கோன் குலசேகரன் பிறப்பால்
நல்லவர்கள் கொண்டாடும் நாள்.

திருக்கச்சி நம்பிகள்: மாசி மாதம், ம்ருகசீர்ஷம்.

"மருவாரும் திருமல்லி வாழவந்தோன் வாழியே
மாசி ம்ருக சீரிடத்தில் வந்துதித்தான் வாழியே
அருளாள ருடன்மொழிசொல் அதிசயத்தோன் வாழியே
ஆறு மொழி பூதூரார்க்கு அளித்தபிரான் வாழியே
திருவாலவட்டம் செய்து சேவிப்போன் வாழியே
தேவராச அட்டகத்தைச் செப்புமவன் வாழியே
தெருளாரும் ஆளவந்தார் திருவடியோன் வாழியே
திருக்கச்சிநம்பியிரு திருவடிகள் வாழியே."

[அப்போது பதித்த செங்கழுநீர்க் கிழங்கிலே
பூவுண்டாம்படி திருக்கச்சி நம்பிகள் பாடியது.]

"வாக்கினால் மனத்தால் எனையுனக்கு
ஆக்கினாய் நீ அருளாள அண்ணலே!
தேக்கும் ஓடையில் செங்கழுநீர் இன்று
பூக்குமாறு அருள் பூமகள் நாதனே!"

(இராமாநுஜ திவ்ய சரிதை)

— ஸ்ரீ வைஷ்ணவதாஸன்.

18314

[illegible] (தொடர்ச்சி)

(2) மோகினி வெள்ளிவிழா சிறுகதைப் போட்டி விஷயமாக பலர் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர். பஞ்சாயத்தார் மதிப்புரை வருமாறு:—

(I.) உஷாவின் கடிதம் பற்றி மூன்று பரிசிலனையாளர்களும் மூன்று விதமாக அபிப்பிராயப்பட்டுள்ளனர். (1) உயர்ந்த சிறந்த பயன் படக் கூடிய லக்ஷ்யம் இருக்கிறது. ஆனால் சிறுகதைத் தத்துவத்திற்கு முரண் படும் முறையில் பிரசாரம் நடை பெறுகிறது...இரண்டாம்பரிசுக்காக ஆலோசிக்கலாம். (2) அதிக நீளமாயிருப்பதால் ஸாரம் குறைகிறது. எடிடர் தனக்குரிய கத்திரிக்கோலை உபயோகித்து சரியான அளவுக்குக் குறைப்பதாக இருந்தால் பிரசுரம் செய்யலாம். (3) பெண்மையும் கடமையும்தான் உலகில் மாதர்க்கணிகலம் என்பது கருத்து; ஆனால் கஸ்தூரிபாவை கனவு தோற்றமாகக் கொண்டு வந்தது அதிகப்படி. முதல் பரிசுக்கு ஆலோசிக்கலாம். (II.) மாற்றுந்தாய்—நல்ல மனோதத்துவம். நடை விசேஷமில்லாவிட்டாலும் மனதில் பதியக்கூடியதே—பரிசுக்குறியது தான் என்று மூவரும் அபிப்பிராயப்பட்டுள்ளனர். (I.) அன்பின் குற்றம்—கதைப்போக்கு இன்னும் விருவிருப்பாக இருக்கலாம். எளிய நடையும் கடின நடையும் மாறி மாறி இருக்கிறது. பரிசுக்கு உகந்ததுதான் என்று மூவருடைய அபிப்பிராயமும். (II.) தியாகத்தின் பரிசு—வாழ்க்கையை ஒட்டிய கிராமக்கதை. சிற்சில திருத்தங்களுடன் வெளியிடத்தக்கது. பரிசுக்கு உகந்தது என்றதுதான் மூவருடைய அபிப்பிராயமும். ஆக ஒவ்வொரு கதையிலும் ஒரு குறையைக் குறிப்பிட்டு, பரிசுக்கு சிபார்சு செய்துள்ளனர்.

நமக்கு வந்துள்ள வாசகர்களின் அபிப்பிராயங்களிலிருந்து, வெளியான நான்கு கதைகளையும் ஒரே நிலையில் உயர்வு தாழ்வின்றி மதிப்பதாகத் தெரிகிறது. பஞ்சாயத்தார்களின் பெருவாரியான அபிப்பிராயப்படி நான்கையும் ஒரே ரகத்தில் மதிப்பிட்டாலும், ஆசிரியை, அவற்றுள் முறையே எதை முதல் வெளியிடுவதென்பதைத் தீர்மானித்தார். எனினும், பரிசளிக்கும் விஷயத்தில் நான்கையும் தங்கப் பதக்கத்திற்குரியனவாகவே (இரண்டாம் பரிசு) தீர்மானித்துள்ளோம், (இது விஷயமாய் பிப்ரவரி '48 இதழில் வெளியான 4, 6, 7 நிபந்தனைகளைக் கவனிக்கவும்.)

இவ்விதம் தீர்மானம் செய்ததற்கு மற்றொரு காரணமும் உண்டு. ஆண்களுக்குத் தனி பரிசு, ஸ்த்ரீகளுக்கு தனி பரிசு என்று விசேஷ முறையில் அறிவித்ததால் இரு சாராரிடமிருந்தும் முறையே நூற்றுக் கணக்கில் கதைகள் வரும், அவற்றுள் சிறந்த இரண்டு முதற்பரிசுக் கதைகள், இரண்டு இரண்டாம் பரிசுக்கதைகள் மலரில் வெளிவந்தால் பரிசுபெறும் எழுத்தாளருக்கும் கௌரவம், நமக்கும் பெருமை என்றெண்ணினோம். ஆனால் பெரிய ஏமாற்றம்—68 கதைகள் 55 ஸ்த்ரீகளாலும், 22 கதைகள் ஆண்களாலும் அனுப்பப்பட்டன! இந்த 90க்குள்ளும் ஒன்றுகூட எதிர்பார்த்தபடி ஒரு குறைவுமின்றி முதல் தரமாகத் தேறவில்லையே என்பதுதான் பெரிய வருத்தம். ஒரே ஆறுதல் யாதெனின், கலந்துகொண்ட அனைவரும் புது எழுத்தாளர்களே யென்பதுதான்.

பரிசளிப்பு விழா தக்க ப்ரமுகரின் தலைமையில் இம்மாதத்திலேயே நடைபெறும். தேதியும் தலைவரும் தீர்மானமாகாததால் இப்போது அறிவிக்க இயலவில்லை. முக்யஸ்தர்களுக்கு, எழுத்தாள நண்பர்களுக்கு அழைப்பு அனுப்பப்படும்.

வை. மு. ஸ்ரீ.

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI 'MMAL is printed and published by V. M. PARTHASARATHY t the Jaganmohini Press, 26, Car St., Triplicane, Madras. 5.
Managing Editor: V. M. SRINIVASAN, M.A., B.L.

Jaganmohini offers you wide publicity at a cheap cost; build your campaign round this great favourite and find for yourself the *investment* value:

Per Page, Rs. 60 only per insertion (casual)
(Inner Wrapper 50% extra; Back Outer 100% extra)
Half page, pro rata.

FOR ANNUAL CONTRACTS OF SIX OR MORE PAGES, A CONCESSION OF ONE-SIXTH WILL BE ALLOWED ON THE ABOVE RATES. (6 pages to be used within 12 issues)

Printed Page : 7½" x 4". (Gross 8¾" x 5½")
Single Column : 7½" x 2"
Half Page : do or 3¾" x 4".
Screen 85 to 100 lines.

வை. மு. கோ. நாவல்கள் (தற்போது கைவசமுள்ளவை, 1-3-'49)

K 1.	வைதேகி	ரூ. 4—8
7.	கோபாலரத்னம்	1—4
11.	வீரவஸந்தா	1—0
15.	நளினசேகரன்	1—0
25.	பக்ஷமாலிகா	0-12
35.	அனாதைப்பெண்	1-12
41.	வானக் குயில்	2—0
42.	உளுத்த இதயம்	0—6
43.	மகிழ்ச்சி உதயம்	1—4
45.	மாலதி	1—0
46.	வத்ஸகுமார்	1—0
49.	படகோட்டி	1—2
50.	ஆத்ம சக்தி	2—0
51.	உணர்ச்சிவெள்ளம்	2—8
52.	சந்தோஷமலர்	2—0
53.	கருணாலயம்	2—0
54.	புகழ்மாலை	1-12
55.	தயாநிதி	2—4
56.	சுடர் விளக்கு	0-12
57.	கலாநிலயம்	1-12
58.	ஞானதீபம்	2—4
59.	வாத்ஸல்யம்	2—0
60.	க்ருபாமந்திர்	1—4
61.	மதுரகீதம்	2—0
62.	பிரார்த்தனை	ரூ. 1—0
63.	இதய ஒலி	1-12
64.	மலர்ந்த இதழ்	2—8
65.	அமுத மொழி (சாதா)	2—0
	,, (கிளேஸ்)	2—8
66.	பிரதிக்ஞை	1—0
67.	ஆசைப்ரவாகம்	2—0
68.	வாழ்க்கைத்தோட்டம்	2—4
69.	அபராதி	1—2
70.	வெளுத்த வானம்	2—0
71.	ப்ரதிபலன்	1—8
72.	பவித்திரப்பதுமை	1—8
73.	பெண் தர்மம்	1—0
74.	உண்மைச் சித்திரம்	1—0
75.	தெய்வீக ஒளி	2—0
76.	சிலாசாஸனம்	1-12
77.	புதுமைக்கோயில்	1—4
78.	மனத்தாமரை	2—0
79.	தபால் விநோதம்	1—0
80.	ஓவியப்பரிசு	1—8
81.	இனிய முரசு	1—0
82.	ஆண்டவனின் அருள்	1—0
83.	இசைப்புயல்	1—8
84.	அமரத்யாகி	2—0